
இன்றைய காலநிலை
கூடிய வெப்பநிலை 28 °c
குறைந்த வெப்பநிலை 24 °c
மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.



காங்கிரஸ் இல்லாத இந்தியா உருவாகும் பக். 6


தென்சூடானில் போர்நிறுத்தம் பக். 7



வவுனியா வீரர்களின் புதிய சாதனைகள் பக். 22


நாடு திரும்பாத லசித் மலிங்க பக். 23



# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 060 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 12, சனி 25.01.2014


## 151 தமிழக மீனவர் படகுகளுடன் நேற்று விடுதலை

திருமலை. ஜன. 25
இலங்கைக் கடற்படையினரால் பிடித்து வைக்கப்பட்டுள்ள தமது படகுகளை விடுவிக்குமாறு வலியுறுத்தித் தமிழக மீனவர்கள் போராட்டம் நடத்திய நிலையில், அவர்களின் படகுகளை விடுவிப்பதற்குத் திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
இதேவேளை, நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கடந்த மாதம் கைது செய்யப்பட்டிருந்த 40 தமிழக மீனவர்களையும், அவர்களின் 9 படகுகளையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்

21 ஆம் பக்கம் பார்க்க

# இறுதிப் போரின் ரணங்களால் நிறைந்த முள்ளிவாய்க்காலில் நினைவுச் சின்னம்

### *வடக்கு மாகாண சபையில் திங்களன்று வருகிறது பிரேரணை*

யாழ்ப்பாணம், ஜன. 25
போரின் ரணங்களால் நிறைந்த முள்ளிவாய்க்காலில் மக்கள் தமது உறவுகளை நினைவு கூருவதற்கு நினைவுச் சின்னம் ஒன்றை வடக்கு மாகாண சபை அமைக்கவேண்டும் எனக் கோரிப் பிரேரணை ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறும் மாகாண சபை அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வடக்கு மாகாணசபையின் ஐந்தாவது அமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த அமர்வில் ஆளுங்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களால் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

21 ஆம் பக்கம் பார்க்க

## புதைகுழி விசாரணையை நேற்று ஆரம்பித்தது சி.ஐ.டி


*புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு ஒன்று*

மன்னார், ஜன. 25
மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மாபெரும் மனிதப் புதைகுழி தொடர்பில் விசாரணைகளை நடத்தும் பொறுப்பு பொலிஸ்மா அதிபரின் விசேட உத்தரவின் பிரகாரம் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் (சி.ஐ.டி.) ஒப்படைக்கப்

21 ஆம் பக்கம் பார்க்க

# இரணைமடு தண்ணீரை யாழ். குடாநாட்டுக்கு கொடுக்கவே கூடாது

### *திட்டத்தை நிறுத்துங்கள் என்கின்றனர் விவசாயிகள்*

கிளிநொச்சி.ஜனவரி 25
இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடாது என்று கிளிநொச்சி விவசாயிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.
இரணைமடுக் குளத்தின் நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்வது தொடர்பில் ஆராயும் கூட்டம் நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.
இதன்பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட இரணைமடுக்குள கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனச் செயலாளர் முத்து சிவமோகன் மேற்கண்டவாறு கூறினார்.
கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடக

21 ஆம் பக்கம் பார்க்க


*கிளிநொச்சி அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரிகள், விவசாயிகள்*

## இலங்கை-இந்திய மீனவரின் பேச்சு நடப்பதில் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஜன. 25
இந்திய - இலங்கை மீனவர்கள் இடையிலான பேச்சு திட்டமிட்டபடி நடைபெறுமா என்பது தொடர்பில் இந்திய மீனவர்கள் தரப்பால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.
இலங்கை அரசு பேச்சுக்கான திகதியை இன்னமும் அறிவிக்கவில்லை. இதனால் இந்தச் சந்திப்பு இடம்பெறுமா என்று கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.
இலங்கை-இந்திய மீனவர்கள் இடையிலான பிரச்சினை

21 ஆம் பக்கம் பார்க்க


*இந்து ஆலயங்களின் புனிதத் தன்மையை வலியுறுத்தி நேற்று யாழ்ப்பாணத்தில் ஆன்மீகப் பேரணி நடைபெற்றது. இதில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றனர். (மேலும் செய்திகள், படங்கள் 2 ஆம் பக்கத்தில்)*

## ஐ.நா. விசேட பிரதிநிதிகள் மே மாதம் இலங்கைக்கு

கொழும்பு, ஜன. 25
ஐக்கிய நாடுகள் சபையின் புலம்பெயர்ந்தோருக்கான விசேட பிரதிநிதி எதிர்வரும் மேமாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என இலங்கை அரசு அறிவித்துள்ளது.
அத்துடன் கல்வி, உரிமை தொடர்பான ஐ.நாவின் விசேட பிரதிநிதியும் இந்த ஆண்டு வருகை தரவுள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, ஐ.நா சபையின் விசேட பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்து நிலைமைகளை ஆராயவுள்ளனர். (த-5)

## வடக்கு மாகாண சபைத் தெரிவு ஒரு வரலாற்றுத் திருப்புமுனை

### *சொல்வேனியா நீதிபதியிடம் ஹக்கீம்*

கொழும்பு, ஜனவரி, 25
வடக்கு மாகாண சபையை அமைத்து, அங்குள்ள மக்கள் தமது விருப்பப்படி முதலமைச்சரையும், ஏனைய உறுப்பினர்களையும் தெரிவு செய்து கொள்வதற்கு முடிந்தமை முக்கியமான வரலாற்றுத் திருப்புமுனை என நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.
சொல்வேனியா குடியரசின் அரசமைப்பு நீதிமன்ற நீதிபதி பேராசிரியர் ஏனர்ஸ்ட் பெட்ரிக் குடன் நேற்று வெள்ளிக்கிழமை

21 ஆம் பக்கம் பார்க்க

## கடை ஒன்றின் முன் சடலம்

யாழ்ப்பாணம், ஜன. 25
ஆவரங்காலில் பலசரக்குக் கடை ஒன்றின் முன்பாக இருந்து சடலம் ஒன்றை அச்சுவேலிப் பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர். இது தொடர்பான

21 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவாச் சமரை எதிர்கொள்ள அரசு பல வழிகளிலும் வியூகம்

யாழ்ப்பாணம், ஜன. 25
ஜெனீவா இராஜதந்திரச் சமரை எதிர்கொள்வதற்கு இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக இலங்கை அமைச்சர்கள் பலரும் வெளிநாடுகளுக்குச் சென்று, போரின் பின்னரான களநிலைமைகள் தொடர்பில் உண்மையை விளக்கவுள்ளதாக அரசு தெரி

21 ஆம் பக்கம் பார்க்க

## நுளம்புவலைக் கயிறு கழுத்தை இறுக்கியமையால் சிறுமி சாவு

### *வட்டக்கச்சியில் பரிதாபச் சம்பவம்*

கிளிநொச்சி, ஜன. 25
படுக்கைக்காகக் கட்டப்பட்ட நுளம்பு வலையின் கயிறு கழுத்தில் சிக்கி இறுகியதில் 12 வயதுச் சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.
கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுரேந்திரன் கீர்த்தனா (வயது - 12) என்ற சிறுமியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-
நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் படுக்கைக்குச் சென்ற சிறுமி, அங்கு கட்

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் புதைகுழியைப் பார்வையிட செல்வம் எம்.பிக்கு அனுமதி மறுப்பு

மன்னார்.ஜன 25
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி தோண்டும் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றவேளை அதனைப் பார்வையிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.
நேற்று வெள்ளிக்கிழமை மதியம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மனிதப் புதைகுழி உள்ள இடத்துக்குச் சென்றபோது பொலிஸார் அவரைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.
பொலிஸார் நீதிவானிடம் நாடாளுமன்ற உறுப்பினரின் வருகை தொடர்பில் தெரியப்படுத்தினர். ஆயினும் அதனைப் பார்வையிட அரசியல்வாதிகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என நீதிவான் தெரிவித்துள்ளார். இதனால் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் திருப்பி அனுப்பப்பட்டார்.
(த-56)

## தேர்தல் குறித்து கொழும்பில் நாளை முக்கிய கூட்டம்

தெற்கில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கும் மேல், தென் மாகாணங்களிலுள்ள தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்குமிடையில் நாளை கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.
கொழும்பு ராஜகிரியாவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் மு.ப. 11 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
மாகாணசபைத் தேர்தல்களுக்காக எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் பெப்ரவரி 6ஆம் திகதி வரை வேட்புமனுத் தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில், அது தொடர்பிலும், அடுத்த கட்ட தேர்தல் நடவடிக்கை தொடர்பிலும் இதன்போது பேசப்படவுள்ளன.

# ஆலய கலாசாரங்களை பேண தனியான அமைச்சு வேண்டும்

### சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25
ஆலயங்கள் மற்றும் அவை சார்ந்த கலை, கலாசாரங்களைப் பேணுவதற்குத் தனியான அமைச்சு உருவாக்கப்பட வேண்டும். இது தொடர்பில் தமிழ் கட்சிகள் ஆராய வேண்டியது காலத்தின் தேவையாகும் என்று சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர் சபா.வாசு தேவக்குருக்கள் தெரிவித்தார்.
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்களின் புனிதத் தன்மையைப் பேண வலியுறுத்தி மாபெரும் ஆன்மிகப் பேரணி நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.
அதன்போது வண்ணை சிவன் ஆலயத்தில் பேரணியை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

> “ஆலயங்கள் அழிப்பதும் சூறையாடப்படுவதும் தெய்வ விக்கிரகங்கள், தெய்வ வாகனங்கள், பணம் என்பன களவாடப் படுவதும் திட்டமிட்டு நடத்தப் படுகின்றன.


அவர் மேலும் கூறியதாவது:-
வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்ட இந்து சமயம் தற்போது இலங்கையில் பல இடர்பாடுகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன.
ஆலயங்கள் அழிப்பதும் சூறையாடப்படுவதும் தெய்வ விக்கிரகங்கள், தெய்வ வாகனங்கள், பணம் என்பன களவாடப்படுவதும் திட்டமிட்டு நடத்தப்படுகின்றன.
தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசத்தை அடையாளப்படுத்தும் வகையில் இந்து ஆலயங்கள் இருப்பதை நாம் மறந்துவிட முடியாது.
இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்குச் சைவ விழுமியங்களை நன்கு தெரிந்த ஒருவரைத் தெரிவுசெய்து தனியான அமைச்சு உருவாக்கப்பட வேண்டும்.
திருக்கேதீஸ்வரர் ஆலயம் மனிதப் புதைகுழியாக மாறிஇருப்பது எமக்கு மனவேதனையைத் தருகிறது. எமது பிரதேசத்தில் ஆலயங்கள் பல இருந்தாலும் அவற்றுக்கு நாம் சென்று வழிபாடுகளை மேற்கொள்ள முடியாத நிலையிலேயே உள்ளோம்.
பிரதேச செயலகங்கள், கலாசாரத் திணைக்களங்கள் போன்றவற்றின் பதிவேடுகளில் ஆலய வரலாறுகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.
எமது பிரதேசத்தில் போர் முடிவடைந்தாலும் ஆலயங்களின் புனிதத் தன்மை தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட வண்ணமே உள்ளன.
இதுதொடர்பாகப் பல்வேறு தரப்புக்களிடமும் எடுத்துக் கூறியும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. வேத் ஆகம முறைப்படி ஆலயங்கள் புதிதாகக் கட்டப்பட வேண்டும்.
இந்து சமயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும்- என்றார். (வ-14-86)

## 'ஆவா' குழுவில் மேலும் இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ். குடாநாட்டில் பல இடங்களிலும் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் வாள்களுடன் கைதுசெய்யப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மேலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்: இந்த மாத ஆரம்பத்தில் 'ஆவா' குழு என்ற பெயரில் இயங்கி வந்த வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒரு குழுவினர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டிலேயே புன்னாலைக்கட்டுவன் மற்றும் அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த 2 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 25 மற்றும் 35 வயதுடைய இவர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது- என்றார். (த-4)

# ஆலயங்களின் புனிதத்தன்மையை பாதுகாக்ககோரி ஆன்மிகப் பேரணி

யாழ்ப்பாணம், ஜன. 25
சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்களின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக மாபெரும் ஓம் நமசிவாய ஆன்மிகப் பேரணி நேற்று நடத்தப்பட்டது.
குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் இருந்து வாகனப் பேரணிகள் நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்.வண்ணை வைத் தீஸ்வரர் ஆலயத்தை வந்தடைந்தன. அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றது.
குடாநாட்டு இந்து ஆலயங்களில் கடந்த ஒரு மாத காலமாக சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களால் எழுதப்பட்ட இரண்டு கோடி ஓம் நமசிவாய மந்திரச் சுவடிகள் சிவலிங்கத்துடன் கூடிய வாகனப் பேரணியுடன் காங்கேசன்துறை வீதி வழியாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் சமர்ப்பணம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்டன.
இந்தப் பேரணியில் பங்கு பற்றியவர்களுக்கு நாச்சிமார் கோயிலடியில் தாகசாந்தியும் அன்னதானமும் வழங்கப் பட்டதைத் தொடர்ந்து விசேடமாக ஒழுங்கமைப்புச் செய்யப்பட்ட தனியார் பஸ்களில் பக்தர்கள் நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
அதனைத் தொடர்ந்து பேரணி கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடைந்தவுடன் ஓம் நமசிவாய மந்திரச்சுவடிகளும் சிவலிங்கமும் விசேட பூசை வழிபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டன.
சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சபா.வாசு தேவக்குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஆன்மிகப் பேரணியில் இந்துசமய குருமுதல்வர்கள், வட மாகாண சபை உறுப்பினர்கள், குருமார்கள் உட்பட பொதுமக்களும் கலந்துகொண்டனர்.
(வ-14-86-29-36-17)







*இந்து ஆலயங்களில் புனிதத் தன்மையைப் பேண வலியுறுத்தி சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ். வண்ணை வைத்தீஸ்வரா ஆலயத்தில் இருந்து ஆரம்பமான ஓம் நமசிவாய மந்திர வாகன ஊர்வலக்காட்சிகள்.* (வ-14-86)

## நவீன சந்தை மேல்மாடியிலேயே மரக்கறி விற்பனை செய்ய வேண்டும்

### வியாபாரிகளுக்குப் பருத்தித்துறைப் பொலிஸார் உத்தரவு

வடமராட்சி.ஜன.25
பருத்தித்துறை நவீன சந்தையில் மரக்கறி வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட மேல்மாடியிலேயே இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை முதல் மரக்கறி வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டும் என வியாபாரிகளுக்குப் பருத்தித்துறைப் பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.
மேல் மாடியில் வியாபாரம் செய்வதால் தமக்குள்ள இடைஞ்சல்கள், சிரமங்களை முன்னிலைப்படுத்தி ச[illegible]யின் கீழ் தளத்தில் தமக்[illegible] ஒதுக்கித்தர வேண்[illegible] மரக்கறி வியாபாரி[illegible]ன் தினம் வியா[illegible]ப்பில் ஈடுபட்டிருந்தனர்.
இது தொடர்பாக பருத்தித்துறை நகர நிர்வாகத்துடன் மரக்கறி வியாபாரிகள் நடத்திய பேச்சுக்களில் தீர்வு எட்டப்படவில்லை. மரக்கறி வியாபாரிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என நகரசபை நிர்வாகம் தெரிவித்துள்ளது.
இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (வியாழன்) நண்பகலுக்குப் பின்னர் முதல் நவீன சந்தையின் மேற்குப் புற விறாந்தையில் மரக்கறி வியாபாரத்தை மேற்கொண்டிருந்த நிலையில் நேற்று (வெள்ளி) பிற்பகல் அங்கு வந்த பொலிஸார் மரக்கறி வியாபாரிகளுக்கு மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தனர். அனுமதியற்ற இடத்தில் மரக்கறி வியாபாரம் மேற்கொள்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை நவீன சந்தையின் மேல்மாடியில் வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகளுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுப்பதுடன் அவர்களின் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா.ரவீந்திரன், உப தலைவர் சி.பத்மநாதன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.
(த-10-173)

## பளையில் ஆடு திருடியவர்கள் புத்தளத்தில் வசமாக சிக்கினர்

பளை.ஜன.25
பளை, புலோப்பளைப் பகுதியில் ஆடு திருட்டு முயற்சியில் ஈடுபட்டுத் தப்பியோடிய இருவரை ஆறு மாதங்களின் பின்னர் புத்தளம் மற்றும் இக்கிரிக்கொலாவ ஆகிய இடங்களில் வைத்துப் பளைப் பொலிஸ் நிலைய விசேட குழுவினர் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.
இந்த இருவரையும் நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தியபோது இருவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.
இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-
கடந்த ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி புலோப்பளைப் பகுதியில் ஆட்டுக் கடாவை விலை கேட்பது போன்று நடித்து அங்கு நின்ற மூதாட்டியைத் தள்ளி வீழ்த்தி விட்டு அதனைக் கடத்திச் சென்றனர் நால்வர்.
இதன்போது வீதி வளைவில் மோட்டார் சைக்கிளை மோதி விட்டுத் தப்பியோடிய வாகனத்தை அங்கு நின்ற இளைஞர்கள் துரத்திப் பிடித்தனர். அப்போது வாகனத்திலிருந்த நால்வரில் மூவர் தப்பியோடியுள்ளனர்.
அவ்வேளையில் பொது மக்களால் பிடிக்கப்பட்ட வாகனமும் வாகனச் சாரதியும் அதனுள்ளிருந்த ஆட்டுக்கடாவும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.
இது தொடர்பாகப் பளைபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.டி. ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் பொலிஸ் பரிசோதகர் திலக்குமார தலைமையில் விசேட குழு அமைக்கப்பட்டு புத்தளம் மற்றும் இக் கிரிக்கொலாவ ஆகிய இடங்களில் நடத்திய தேடுதலில் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்ட இவர்கள் நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
(த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறரை அடித்த குற்றச்சாட்டில் கடந்த வாரம் 16 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 25
பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்தார்.
அத்துடன், சந்தேகத்தின் பேரில் - 13 பேர், சட்ட விரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 5 பேர், களவு எடுத்த குற்றச்சாட்டில் 5 பேர், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 9 பேர், மோசடி செய்த குற்றச்சாட்டில் 3 பேர், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 3 பேர், அத்து மீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.
(வ-4)

## குடாநாட்டில் 17 இடங்களில் திருட்டு

### வாராந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25
யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் 17 இடங்களில் திருட்டு கொள்ளை இடம்பெற்றுள்ளதோடு அதன்போது நகைகள் உட்பட 16 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப் பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்தார்.
யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ். ஒட்டுமடம் வீதியில் வீடு புகுந்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. யாழ். கந்தர் மடம் வீதியில் வீடு புகுந்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சுண்டிக்குளியில் வீடு புகுந்து 24 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. கோண்டா வில் மேற்கில் கடை உடைத்து 21 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட் டுள்ளன. யாழ் அரசடி வீதியில் கடை உடைத்து 22 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
நீர்வேலிச் சந்தியில் வீடு புகுந்து 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. கோப்பாய் மத்தியில் கடை உடைத்து பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன. நாவற்குழியில் தேவாலயம் ஒன்றில் இருந்து பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நாவற்குழியில் கடை உடைத்து 22 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன். கொடிகாமத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
புலோலி கிழக்கில் வீடு புகுந்த இனந்தெரியாதோர் கத்தியைக் காட்டி 7 லட்சத்து 4 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

**“ – ”**
**நகைகள் உட்பட 16 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.**

உடுவில் கிழக்கில் வீடு புகுந்து 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். சுதுமலை வடக்கில் 12 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது. புங்குடுதீவில் பாடசாலைக் கதவை உடைத்து 66 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் திருடப்பட்டுள்ளன என்று நிகால்பெரேராமேலும் தெரிவித்தார். (வ-4-86)

## நன்னடத்தைப் பாடசாலையில் சேர்க்கப்பட்டான் சிறுவன்

வலி. வடக்கு, ஜன. 25
சாவகச்சேரி பகுதியில் கடந்த 2013 ஆம் ஆண்டு இடம் பெற்ற பல்வேறு சிறு களவுகளுடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் 16 வயது சிறுவன் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கடந்த 16 ஆம் திகதி கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு நன்னடத்தைப் பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
ஊர்காவற்றுறையைச் சேர்ந்த குறிப்பிட்ட சிறுவனுடன் மற்றும் கொழும்புத்துறை, நாரந்தனைப் பகுதியைச் சேர்ந்தவர்களும் உடந்தையாக களவுகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் தெரியவந்துள்ளது.
கடந்த 16 ஆம் திகதி நாவற்குழியில் உள்ள கத்தோலிக்க ஆலயத்தை உடைத்து பொருள்களை திருடிய வேளையில் குறிப்பிட்ட சிறுவனும் மற்றும் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.
அவர்களிடம் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து குறித்த சிறுவன் கடந்தாண்டு சாவகச்சேரிப் பகுதியில் சுமார் ஏழுக்கு மேற்பட்ட களவுகளுடன் தொடர்புடையவர் என்பதைக் கண்டறிந்துள்ளார்கள்.
பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சிறுவனின் பெற்றோர்கள் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதையடுத்து பெற்றோர் சிறுவனின் நடத்தை குறித்து கூறிய தன் அடிப்படையில் சிறுவன் நன்னடத்தைப் பாடசாலையில் சேர்க்கப்பட்டான். ஏனையோர் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(வ-86)

**“ – ”**
**கடந்த 16 ஆம் திகதி நாவற்குழியில் உள்ள கத்தோலிக்க ஆலயத்தை உடைத்து பொருள்களை திருடிய வேளையில் குறிப்பிட்ட சிறுவனும் மற்றும் ஒருவரும் கைது செய்யப்பட் டனர்.**

## ‘நெல்சிப்’ திட்டங்களை எதிர்வரும் செப்ரெம்பருக்குள் நிறைவு செய்க


### வடக்கு முதலமைச்சர் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.25
‘நெல்சிப்’ திட்டங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் நிறைவேற்றி முடிக்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளிடம், மாகாண உள்ளூராட்சி அமைச்சரும், முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் கோரியுள்ளார்.
வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், செயலாளர்கள், உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர்களுடன் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும், முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்றை நடத்தினார்.
யாழ். பொது நூலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலிலேயே முதலமைச்சர் மேற்படி கருத்தை வலியுறுத்தியுள்ளார்.
வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ‘நெல்சிப்’ திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டது. வலி. வடக்கு பிரதேசசபை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபையில் மாத்திரம் நெல்சிப் திட்டம் பூரணமாக நடைமுறைப் படுத்தி முடிக்கப்பட்டுள்ளது.
ஏனைய பிரதேச சபைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் தடங்கல்கள் தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி கிடைக்காமை தொடர்பிலும் ஆராயப்பட்டது.
கடந்த வருடத்துடன் நெல்சிப் வேலைத் திட்டம் நிறைவுறுத்தப்படவிருந்தபோதும் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் வரையில் அது நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக சகல பிரதேச சபைகளும் வேலைத் திட்டங்களை முடிவுறுத்துமாறு முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.
(வ-5)

**“ – ”**
**வடக்கில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் ‘நெல்சிப்’ திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டது. வலி. வடக்கு பிரதேசசபை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபையில் மாத்திரம் நெல்சிப் திட்டம் பூரணமாக நடைமுறைப் படுத்தி முடிக்கப்பட்டுள்ளது.**

## வெடிக்காத மோட்டார் குண்டு குருநகர் பகுதியில் நேற்று மீட்பு

### மண்ணில் புதையுண்டிருந்த நிலையில்



வெடிக்காத நிலையில் மீட்கப்பட்ட மோட்டார் குண்டு

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ்ப்பாணம், குருநகர் தொடர் மாடிக் குடியிருப்புப் பகுதியில் வெடிக்காத நிலையில் இருந்த மோட்டார்க் குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டது.
மலசலகூடத்துக்கு குழாய் பொருத்துவதற்கான கிடங்கு வெட்டும்போது அரை அடி ஆழத்தில் மண்ணின் மேற்தளத்திலேயே இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-
குருநகர் தொடர்மாடிக் கட்டடத்தின் பின்பகுதியில் பல காலமாக இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர். அவர்கள் கடந்த நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் அங்கிருந்து வெளியேறினர். அதன் பின்னர் இராணுவ முகாம் அமை[illegible]பட்ட மண்ணை அகழ்ந்து கொண்டுவந்து குடியிருப்பின் பள்ளமான பகுதிகள் நிரப்பப்பட்டன. இதனால் அங்கிருந்து மண்ணோடு மண்ணாக இந் தக் குண்டு வந்திருக்கலாம் என அந்தப் பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர். சம்பவத்தை அறிந்து இராணுவத்தினர் உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்து வந்து குண்டை எடுத்துச் சென்றனர்.
(ஓ-21)

## 34 லட்சம் ரூபா காசோலை மோசடி

### கடந்த ஒரு வாரத்தில் மட்டும்

வலி .வடக்கு. ஜன .25
கடந்த ஒரு வார காலத்தில் 34 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக இரண்டு முறைப்பாடுகள் யாழ். பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா நேற்று நடைபெற்ற வாராந்த செய்தி யாளர் சந்திப்பில் தெரிவித்தார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் கொழும்பைச் சேர்ந்த ஒருவரிடம் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை பெற்றுக்கொண்டு 8 லட்சத்து 46 ஆயிரத்து 616 ரூபா பெறுமதியான காசோலையை வழங்கிவிட்டுச் சென்றதாகவும் தற்போது அவருடைய வங்கிக் கணக்கில் பணம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியைச் சேர்ந்த ஒருவர் வியாபார நோக்குடன் 25 [illegible]யிரம் ரூபா பெறுமதியான [illegible] யை ஒருவ[illegible] பெற்றதாகவும் குறிப்பிட்டவரின் வங்கிக் கணக்கில் பணம் தற்போது இல்லாத நிலை காணப்படுவதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வட்டுக்கோட்டை சித்தன்கேணியைச் சேர்ந்த ஒருவர் இரண்டு லட்சத்து ஐயாயிரத்தி எண்ணூற்றி எட்டு ரூபா பெறுமதியான காசோலையை தமக்கு வேறொருவர் தந்து மோசடி செய்துள்ளதாக முறையிட்டுள்ளார்.
இத்தகைய முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் உரியவர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் தொடர்ந்து சந்தேக நபர்கள் குறித்த புலன் விசாரணைகளை மேற்கொண்டு [illegible] மேலும் தெரிவிதுள்ளார். (வ-86)

**“ – ”**
**8 லட்சத்து 46 ஆயிரத்து 616 ரூபா பெறு மதியான காசோலையை வழங்கிவிட்டுச் சென்றதாகவும் தற்போது அவருடைய வங்கிக் கணக்கில் பணம் இல்லை.**

## சுகாதாரத் தொழிலாளருக்கு மழை அங்கிகள்

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மழை அங்கிகள் வாங்கிக் கொடுப்பதற்கு முன் வந்துள்ள பிரதேச சபை அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.
குறித்த பிரதேச சபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர், தேவையான சீருடைகள் போதியளவு இருப்பதால் மழை காலங்களில் கடமையாற்றுவதற்கு வசதியாக சீருடைக்குப் பதிலாக மழை அங்கிகளை வாங்கித் தருமாறு பிரதேச சபை பதில் தவிசாளரைக் கோரியிருந்தனர்.
தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரதேசசபை உறுப்பினர்கள், சீருடைகள் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தில் மழை அங்கிகளை வாங்கிக் கொடுக்க முன்வந்துள்ளனர். உறுப்பினர் கேஜெளரிகாந்தன் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இதேவேளை, பிரதேசசபையின் தலைமைக் காரியாலயத்தில் கண்ணாடிகளால் அமைக்கப்பட்டுள்ள அறைகள் திரைச்சீலைகளால் மறைக் [illegible] வழங்கியுள்ளது. (வ-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றில் தவறி விழுந்து ஐந்து வயதுச் சிறுவன் சாவு

யாழ்ப்பாணம்.ஜன.25

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவன் கிணற்றில் தவறி விழுந்ததனால் நீரில் மூழ்கி உயிரிழந்தான். சிறுவனின் சடலம் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாரந்தனை மேற்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.கோபிசன் (வயது -5) என்ற சிறுவனே உயிரிழந்தான்.

சகோதரர்களான இரண்டு சிறுவர்களும் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். தாயார் உள்ளே சமையலில் ஈடுபட்டுள்ளார். பின்னர் சிறுவர்களுக்கு உணவூட்டுவதற்காக வெளியே வந்து பார்த்த போது இளைய சிறுவன் மாத்திரம் விளையாடிக் கொண்டிருந்துள்ளான். மூத்த சிறுவனைக் காணாது தேடிய போதே அவன் வீட்டுக் கிணற்றுக்குள் மயக்க நிலையில் கிடக்கக் காணப்பட்டான். அவனை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் சிறுவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டமை பரிசோதனையில் தெரிய வந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலும் கூறினர். (த-4)

# பண்ணைக் கடலில் குடும்பஸ்தரின் சடலம் கடத்திச் செல்லப்பட்டாரா எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம். ஜன. 25

யாழ். பண்ணைக் கடலில் இருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார். சாட்சிகளின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் அவர் கொலை செய்யப்பட்டுள்ளாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



பண்ணைக்கடலில் மீட்கப்பட்ட குடும்பஸ்தரின் சடலம்

சடலமாக மீட்கப்பட்டவர் முன்னர் தனது கைத்தொலைபேசியில் இருந்து அழைப்பை ஏற்படுத்தி 'பண்ணையில் நிக்கிறேன் ஏத்தப்போறாங்கள் ஓடிவாங்கோ ஓடிவாங்கோ' என்று கூறியிருக்கிறார். இதன் பின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது என்றுசாட்சியம்பதிவாகியுள்ளது.

நாரந்தனை வடக்கு ஊர்காவற்துறையைச் சேரந்த குலசிங்கம் அருள்மதன் (வயது - 30) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். அவர் ஒரு குழந்தையின் தந்தையாவார். மின்னிணைப்பு வேலை செய்து வரும் இவர் நேற்று முன்தினம் இரவு வீடு திரும்பவில்லை. அன்றைய தினம் காலை நாரந்தனையில் உள்ள தனது வீட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வேலைக்குப் புறப்பட்டுள்ளார். அவரது தாயார் வீடும் யாழ்ப்பாணத்திலேயே உள்ளது. அன்றையதினம் பிற்பகல் 3.30 மணிக்குத் தனக்கு அழைப்பை ஏற்படுத்தி இரவு சாப்பிட வருவேன் என்று கூறியுள்ளதாக அருள்மதனின் மனைவியான பானுமதி விசாரணையின் போது தெரிவித்தார்.

அன்றையதினம் இரவு தனது தாயாரின் வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டுக்குத் தொலைபேசி மூலமாக அழைப்பை ஏற்படுத்திய இவர், பண்ணையில் நிற்பதாகவும் தன்னை ஏற்றிச் செல்லப் போகிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

அதுபற்றி அருள்மதனின் தாயாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர் உள்ளிட்ட சிலர் உடனடியாகப் பண்ணைக்குச் சென்று பார்வையிட்டதாகவும் அங்கு அவர் இல்லை என்பதனால் திரும்பிச் சென்றதாகவும் சம்பவ இடத்தில் நின்றிருந்த உறவினர் ஒருவரால் தெரிவிக்கப்பட்டது. அவர் காணாமல்போனமை தொடர்பில் அவரது மனைவிக்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி நேற்றுமுன் தினம் யாழ் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பிற்பகலுக்குப் பின்னர் பண்ணையில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ஒருவர் பண்ணைக் கடலில் சடலம் ஒன்று மிதப்பதை அவதானித்து அது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார். அதன்படி அன்று இரவு பொலிஸார் கடலில் தேடுதல் நடத்தினர். எனினும் சடலம் கிடைக்கவில்லை என்று சம்பவ இடத்தில் நின்றிருந்தவர்கள் தெரிவித்தனர்.

அந்தக் கடலில் நேற்று மீன் பிடிக்கச் சென்றிருந்த ஒருவர் சடலத்தை இனங்கண்டுபொலிஸாருக்கு அறிவித்துள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் முன்னிலையில் சடலத்தைமீட்டுகரைக்குக்கொண்டு வந்தனர். பண்ணை வீதியிலிருந்து சுமார 150 மீற்றர் தூரத்தில் கடலில் மிதந்த வண்ணம் சடலம் காணப்பட்டது. சடலத்தின் ஜீன்ஸ் பொக்கற்றில் இருந்து கைத்தொலைபேசி ஒன்றையும் மீட்ட பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (த-4-17)

# கச்சதீவை மீட்க வேண்டும்; வலியுறுத்துகின்றார் வாசன்



வாசன்

சென்னை, ஜன.25

கச்சதீவை மீட்பதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக இந்திய மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே.வாசன்.

சென்னையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்.

"தமிழக மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஏற்கனவே தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையில் தமிழக மீனவர்களைக் காப்பாற்றுவதாயின் கச்சதீவை மீட்பதே தீர்வாக அமையும். இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைக் கைது செய்வது சரியான செயல் அல்ல.

எல்லையைத் தாண்டும் மீனவர்களைக் கைது செய்வது இலங்கையின் உரிமை என்று இலங்கை அமைச்சர் தெரிவித்த கருத்து கண்டிக்கத்தக்கது.

இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் மீன்பிடித்தொழில் தான் வாழ்வாதாரம் என்பதை இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்தின உணர வேண்டும்

கச்சதீவில் தமிழக மீனவர்களுக்கு உள்ள உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு மேற் கொள்ள வேண்டும். 1974ஆம் ஆண்டு இருநாடுகளுக்கும் இடையே மேற் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்திய மத்திய அரசை வலியுறுத்துகின்றேன்."- என்று தெரிவித் துள்ளார். (ற)

# அரச கரும மொழிகளின் தேர்ச்சி இனி அலுவலர்களுக்குக் கட்டாயம்

யாழ்ப்பாணம்.ஜன.25

தேசிய மொழிக் கொள்கைத் திட்டத்தின் கீழ் அரச சேவையில் இணையும் உத்தியோகத்தர்கள் ஐந்து வருட காலத்துக்குள் தாம் அரச சேவைக்கு இணைந்தஅரசகருமமொழிக்கு மேலதிகமாகக் குறித்த பதவிக்குரிய மற்றைய அரச கரும மொழி தொடர்பிலான தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும். இவ்வாறான சுற்றறிக்கை அரச பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.பீ. அபேகோன் அறிவித்துள்ளார்.

2007 ஜூலை முதலாம் திகதி (1.7.2007) தொடக்கம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அத்துடன் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அனைவரும் தாம் அரச சேவைக்கு இணைந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக குறித்த பதவிக்குரிய மற்றைய அரச கரும மொழி தொடர்பிலான தேர்ச்சியைச் சேவையில் இணைந்து ஐந்து வருட காலத்தினுள் பெறுதல் வேண்டும்.

2007 ஜூலை முதலாம் திகதி தொடக்கம் 2011 ஜூலை 13 ஆம் திகதி (13.07.2011) வரையான காலப்பகுதிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் 2011 ஜூலை 13 ஆம் திகதியிலிருந்து ஐந்து வருட காலப்பகுதிக்குள் தாம் புதிய நியமனம் பெற்ற பதவிக்குரிய மொழித் தேர்ச்சி மட்டத்தை எய்துதல் வேண்டும்.

2007 ஜூலை முதலாம் திகதி (1.7.2007) தொடக்கம் 2010. ஜூன் 31 ஆம் திகதி (31.06. 2010) வரை திறந்த அடிப்படையில் அரச சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு உரிய மொழித் தேர்ச்சி மட்டத்தை எய்துவதற்கு அவர்களின் நியமனத் திகதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள ஐந்து வருட கால எல்லைக்கு மேலதிகமாக மற்றொரு இரண்டு வருடங்கள் சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதவிக்கும் உரிய பகுதியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

நாட்டில் 162 சிங்கள மொழியிலான பிரதேச செயலர் பிரிவுகளும் 62 தமிழ் மொழியிலான பிரதேச செயலர் பிரிவுகளும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஹெரோயின் மீட்பு

இலங்கைக்கு கடத்தப் பட விருந்த ஹெரோயின் போதைப் பொருள் இந்தியாவில் மீட் கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் குறித்த போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளனர்.

சென்னையைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் 2.075 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருளை சென்னையிலிருந்து மத்திய பிரதேசத்தின் உஜ்ஜா யின் என்னும் இடத்துக்கு எடுத்துச் சென்றிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த போதைப் பொருளின் சர்வதேச சந்தைப் பெறுமதி 5 [illegible] எனத் தெரி[illegible]கிறது. (வ)

J.C.B பைக்கோ
வாடகைக்கு விடப்படும்
★போக்குவரத்துக்கூலி அறவிடப்பட மாட்டாது.
★குறைந்த கட்டணம்.
தொடர்பு:077 771 2182, 077 984 7285
சுதிரேசம்பிள்ளை காலாதேவி,
எரிபொருள் நிரப்புநிலையம்,
கே.கே.எஸ்.ரோட், கன்னாகம்.

இலவசம்
கருமைநிற நீக்கம்,கரும்புள்ளி,தருவளையம்,கருத்கம்,உதடுக்கருமை போன்றவற்றிற்கான உத்தரவாதமளிக்கப்பட்ட பத்து நாட்களுக்குள்,சிகிச்சை(குறிப்பு) சிகிச்சை பெறுவோர்க்கு மட்டும் இலவச மூலிகைபேசியல்
முற்பதிவு அவசியம் 0777351954
இல. 767 சாஸ்திய கேபல் செயர்
நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை
செம்மணி வீதி நல்லூர் யாழ்ப்பாணம்

உடனடி வேலை வாய்ப்பு
★ Marketing Officer
தொடர்பு:- 0775559755

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி திருஞானசம்பந்தபிள்ளை



அப்பிளானை கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி திருஞானசம்பந்தபிள்ளை நேற்று (24.01.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞான சம்பந்த பிள்ளையின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - தங்கமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான கதிர்காமசேகரம்பிள்ளை - மனோன் மணி அம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் பாக்கியலக்சுமி காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் மனோன்மணி, பேரின்பராணி ஆகியோரின் சகோதரியும் சடாட்சரம், சரவணபவன், கௌரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் விக்னேஸ்வரி, விமலகுமாரி, ஆனந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் தர்சிகன், கவிகரன், லக்ஸ்மிபிரியா, முகுந்தினி, அமிர்தாஞ்சன் (சுவிஸ்), கரிதாஞ்சன் (சுவிஸ்), வாகினி (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொ[illegible]

இலகடி, கோப்பாய் வடக்கு. தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அருட்கலாநிதி ஜெபமோகன் ஜெபரட்ணம்

(பரி. மரியாள் தேவாலயம் கோப்பாய், இலங்கைத் திருச்சபை, அங்கிலிக்கன் சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)



உடுவிலை வசிப்பிடமாகக் கொண்ட அருட்கலாநிதி ஜெபமோகன் ஜெபரட்ணம் நேற்று (24.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் சின்னத்தம்பி ஜெபரட்ணம்- ஜூலியட் இராஜமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செ. சிவகுருநாதன்- இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சுனித்தாவின் (உப அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், சலோமியின் (யா/உடுவில் மகளிர் கல்லூரி மாணவி), பாசமிகு தந்தையும், அருட்கலாநிதி -ஜெபராஜா (அமெரிக்கா), ஜெபநேசன் (செலான் வங்கி), ஜெபசாந்தி (குவைத்) ஆகியோரின் சகோதரரும், ஜெம், ரூபினி, தேவகுமார், சுஜாத்தா, முரளி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் உடுவில் மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் கோப்பாய் பரி.மரியாள் தேவாலயத்தில் நாளை (26.01.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்னாரின் இறுதி ஆராதனை நாளை மறுதினம் (27.01.2014) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நடைபெற்று அவரின் பூதவுடல் கோப்பாயில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:ஜெபநேசன் (சகோதரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சதொச'வை நம்பிய விவசாயிகள் நிர்க்கதி


வலி .வடக்கு ஜன 25

'சதொச' நிறுவனத்தை நம்பிய விவசாயிகள் மோசம் போயினர். உருளைக்கிழங்கை தோட்டத்தில் இருந்து கிண்டியவர்கள் பலர் நேற்றுமுன் தினம் புதன்கிழமை பகல் முழுவதும் நிறுவனத்தின் வருகைக்காக காத்திருந்துவிட்டு மனம் சலித்த நிலையில் அன்றைய தினம் மாலையில் அவசரம் அவசரமாக தமது உருளைக்கிழங்கை தம்புள்ளை சந்தைக்கு அனுப்பிய பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ் .மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கைச் 'சதொச' நிறுவனம் நேற்றுமுன்தினம் தொடக்கம் கிலோவொன்றை 70 ரூபா விலையில் கொள்வனவு செய்யும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் சங்க பிரதிநிதிகள், யாழ். மாவட்ட கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளர், யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளுடன் கொழும்பில் இருந்து வருகை தந்த 'சதொச' நிறுவன உயர் அதிகாரிகளும் கலந்துரையாடினர். இதன்போது கிலோ 70 ரூபா அடிப்படையில் நாளொன்றுக்கு பத்தாயிரம் கிலோ உருளைக் கிழங்கை 'சதொச' நிறுவனம் கொள்வனவு செய்வது என்று முடிவு செய்யப்பட்டது.

இத்தகைய முடிவுக்கு அமைவாக நேற்று முன்தினம் பகல் புன்னாலைக்கட்டுவன், ஈவினை, உரும்பிராய், குப்பிளான் பகுதிகளில் உள்ள உருளைக்கிழங்கு செய்கையாளர்கள் பத்தாயிரம் கிலோ வரையில் கிண்டி வைத்துவிட்டு காவல் இருந்த போதிலும் 'சதொச' நிறுவன ஊழியர்கள் யாரும் உருளைக்கிழங்கை கொள்வனவு செய்யவரவில்லை. உரிய ஏற்பாடுகள் குறித்து எவையும் தெரிவிக்கப்படாத நிலையில் மாலையில் விவசாயிகள் அவசரம் அவசரமாக தம்புள்ளை சந்தைக்கு அவற்றை லொறிகள் மூலம் அனுப்பி வைத்தனர். (வ-86)



தென்மராட்சி தெற்கு சகலகலாவல்லி வித்தியாலய வளாகத்தில் 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலையரங்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. கலையரங்கத்தைத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் திறந்து வைத்தார். (வ-9)

# பாதீனியக் களைகளை அழித்து விவசாய அபிவிருத்திக்கு உதவுக

*வடக்கு விவசாயப் பணிப்பாளர் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.மாவட்டத்தில் பாதீனியம் களை பரவியுள்ள பிரதேசங்களில் முக்கிய பத்து சந்திகளில் பாதீனியத்தைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் நிரந்தரத் தட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் காணப்படும் தகவல்களை கவனத்தில் எடுத்து வீடுகள், சொந்தக் காணிகள், விவசாய நிலங்களில் பரவியுள்ள பாதீனியக் களைகளை அழித்து விவசாய அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மன்னார் தவிர்ந்த யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் விவசாய நிலங்களில் இதன் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. வடமாகாணத்தில் 873 ஏக்கர் நிலத்தில் இது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்ட 763 ஏக்கரில் 75 ஏக்கர் அழிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் 107 ஏக்கரிலும் முல்லைத்தீவில் 2 ஏக்கரிலும் கிளிநொச்சியில் ஒரு ஏக்கரிலும் காணப்பட்ட பாதீனியக்களைகளில் வவுனியாவில் 33 ஏக்கரிலும் கிளிநொச்சியில் 1/2 ஏக்கரிலும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒரு ஏக்கரிலும் களைகள் அழிக்கப்பட்டுள்ளன எனவும் மாகாணப் பணிப்பாளர் தெரிவித்தார். (வ-7)

## வசமாக மாட்டினான் சைக்கிள் திருடன்

வலி.தென்மேற்கு.ஜன.25

பகலில் வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் திருடிச் சென்ற இளைஞனொருவன் வீதியால் சென்றவர்களின் உதவியுடன் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான். இந்தத் திருட்டுக் குறித்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் ஏற்கெனவே திருடப்பட்ட மேலும் ஐந்து சைக்கிள்களை அவனிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

இந்தத் துணிகரத் திருட்டு சுதுமலை வடக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது குறித்து கூறப்படுவதாவது:-

சைக்கிளில் சென்ற சுதுமலையைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி ஒருவர் சைக்கிளைத் தனது வீட்டுக்கு முன்பாக நிறுத்திவிட்டு உள்ளே சென்ற போது அந்த வீதியால் வந்த இளைஞன் ஒருவன் சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளான் இது குறித்து வீட்டிலிருந்து அவதானித்துக் கொண்டிருந்த பெற்றோர் திருடனைத் துரத்திச் சென்று வீதியால் சென்றவர்களின் உதவியுடன் அவனைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இளைஞனைக் கைது செய்து விசாரணையில் ஈடுபடுத்திய பொலிஸார் அவன் கொடுத்த தகவல்களை அடுத்து ஏற்கெனவே திருடப்பட்ட மேலும் 5 சைக்கிள்களைக் கைப்பற்றியுள்ளனர். குறித்த இளைஞன் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளான். (வ-115)

# தொழிலாளர் சீருடை அணிவது கட்டாயம்

*நல்லூர் பிரதேச சபை தீர்மானம்*

யாழ்ப்பாணம். ஜன.25

நல்லூர்ப் பிரதேசசபைத் தொழிலாளர்கள் அடுத்து வரும் இரண்டாவது வாரத்தில் சீருடை அணிய வேண்டும் என்று நல்லூர்ப் பிரதேச சபையில் செவ்வாய்க் கிழமை நடை பெற்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சீருடை அணிவது கட்டாயம் என்றும் தொழிலாளர்கள் சிலருக்கு சீருடை அணிவது விருப்பம் இல்லை. ஆனால் சீருடை அணிய வேண்டியது தவிர்க்க முடியாதது என்றும் கருத்துத் தெரிவித்த உறுப்பினர்கள் இரண்டு கிழமைகளில் இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர். (வ-7)

# யாழ்.கூட்டுறவுச் சங்கக் கிளைக்குழு தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை

*வாக்காளர் இடாப்புப் பட்டியல் பார்வைக்கு*

கொழும்புத்துறை. ஜன.25

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களுக்கான தேர்தலை நடத்தும் பொருட்டு அங்கத்தவர்களின் வாக்காளர் இடாப்புப்பட்டியல்கள் சங்கக் கிளைகளில் நேற்று முன்தினம் வியாழன் முதல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

> “ ”
>
> பங்குப்பணம் செலுத்தி உறுப்புரிமை பெற்ற அங்கத்தவர்களின் பெயர்களைப் கடமை நேரமாகிய காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையிட முடியும் என்று சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பட்டியல்களில் பங்குப்பணம் செலுத்தி உறுப்புரிமை பெற்ற அங்கத்தவர்களின் பெயர்களை விடுமுறை நாள்கள் தவிர்ந்த கடமை நேரமாகிய காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையிட முடியும் என்று சங்கச் செயலாளர் அறிவித் துள்ளார்.

தற்காலிகமாக மூடப்பட்டுள்ள முஸ்லிம்தெரு (3சி), ஓட்டுமடம்(4), வண்ணார்பண்ணை (5ஏ) ,யாழ்பாடி (10), கைலாச பிள்ளையார் (13) ,ஆனைப்பந்தி (14) ,ஆரியகுளம் (15), நீராவியடி (16) ,கொழும்புத்துறை (21) ,சுண்டுக்குளி (27), ஸ்ரேசன் சந்தி (28) ,மவுண் கார்மேல்(31) ,சென். அன்ரனீஸ் (33), சின்னக்கடை(35) ஆகிய கிளைகளுக்கான வாக்காளர் பட்டியலை காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2 ஆம் திகதி வரை இந்தப் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். நீண்டகாலமாக ஜனநாயக முறையிலான கிளைக் குழுத் தேர்தல் நடைபெறாது நியமன இயக்குநர் சபை மூலம் சங்கம் நிர்வகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

# யாழ்.மாநகர சபையில் பெரியார்களுக்குச் சிலை

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.மாநகர சபை வளாகத்தில் ஆறுமுக நாவலர் மற்றும் தனிநாயகம் அடிகளாரின் உருவச் சிலைகளை அமைக்க முடிவாகியுள்ளது.

இது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் யாழ்.மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. (ஒ-7)

# வட மாகாண அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை

*இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்*

யாழ்ப்பாணம்.ஜன.25

அரசஊழியர்களுக்கான விசேட கொடுப்பனவு அதிகரிப்பு ஜனவரி மாதத்திலிருந்து 1,200 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இம்முறை வட மாகாண அரச ஊழியருக்கு விசேட கொடுப்பனவு அதிகரிப்பு வழங்கப்படாதது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான விசேட கொடுப்பனவு 1,200 ரூபாவால் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏனைய மாகாணங்களில் விசேட கொடுப்பனவு அதிகரிப்பு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டபோதும் வட மாகாண அரசஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை.

அரச ஊழியர்களுக்கான விசேட கொடுப்பனவு பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் 1,200 ரூபா மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இந்தக் கொடுப்பனவு ஆறாயிரத்து 600 ரூபாவாக இருந்து தற்போது ஆயிரத்து 200 ரூபா அதிகரிப்பால் ஏழாயிரத்து 800 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதிலும் ஏனைய மாகாணங்களில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போதும் வடமாகாணத்தில் பெரும்பாலான கல்வி வலயங்களில் இது வரை வழங்கப்படவில்லை. எனவே இது தொடர்பில் விசாரணைமேற்கொள்ளவேண்டும். இது தொடர்பாக வடமாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகளும், வடமாகாணக் கல்வி அமைச்சரும் கவனத்தில் கொண்டு அதிகரித்த கொடுப்பனவு வழங்காத வலயங்களுக்கு அதனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-422)

# முறைசாராக் கல்விப்பிரிவுக்கு வளநிலையம் யாழில் வேண்டும்

*வடமாகாண கல்வி அமைச்சிடம் புத்திஜீவிகள் கோரிக்கை*

வலி. வடக்கு. ஜன. 25

யாழ்.மாவட்டத்திலும் முறைசாராக் கல்விப் பிரிவுக்கான வள நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய தேவையும் அவசியமும் உள்ளது. எனவே வடமாகாணக் கல்வி அமைச்சு இதில் அதிக அக்கறை எடுத்து செயற்படவேண்டும் என்று கல்வியியலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

வட மாகாண கல்வி அமைச்சால் மாங்குளம், மடு ஆகிய கல்வி வலயங்களில் முறைசாராப் பிரிவுக்கான வள நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அந்த வள நிலையங்களுக்கான உபகரணங்கள் உட்பட பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வகையில் வட மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள 12 கல்வி வலயங்களுக்கும் முறைசாராக் கல்விப் பிரிவின் தேவையும் செயற்பாடுகளும் அவசியமானதாக இருக்கும் நிலையில் இரு கல்வி வலயங்களின் முறைசாராக் கல்விப் பிரிவின் தேவைகள் மட்டுமே நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மிகுதியாக உள்ளதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் பகுதிகளுக்கான முறைசாராக் கல்விப் பிரிவின் வள நிலையங்களின் தேவைகள் உடனடியாக அவசியமானதாகக் காணப்படுவதாகவும், இதனை அதிகரித்த சனத்தொகை, பாடசாலைகளில் இருந்து விலகுவோரின் எண்ணிக்கை, என்பவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுத்த வேண்டும் என்றும் கல்வியாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (வ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிரி 'அவுட்'



மு.க.அழகிரி


சென்னை, ஜன.25
தி.மு.கவின் தென் மண்டல அமைப்பின் செயலாளர் பொறுப்பில் இருந்த மு.க.அழகிரி கட்சியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார் என்று தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் அறிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-
"தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துக் கொள்ள முற்பட்ட கட்சிகளின் தலைமை பற்றி அவதூறு கூறி, கூட்டணி ஏற்படுவதைக் குலைக்க முயற்சித்தவர்கள், சாதிச் சச்சரவுகள் கட்சிக்குள் ஏற்பட்டிருப்பது போன்ற பொய்த் தோற்றத்தை ஏற்படுத்தியவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
அவ்வாறு எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை கடுமையாக விமர்சித்தும், முறையற்ற விவாதங்களில் நேரடியாகச் செயற்பட்டு, கட்சியின் செயல் வீரர்களை தொடர்ந்து பணியாற்ற வேண்டாம் என்று கூறி குழப்பம் விளைவிக்க முயன்ற தென்மண்டல அமைப்புச் செயலாளர் மு.க.அழகிரி இனியும் கட்சியில் நீடிப்பது முறையல்ல. அதனால் அவரைக் கட்சியில் இருந்து தற்காலிகமாக நீக்கும் முடிவைக் கட்சித் தலைமை முடிவெடுத்துள்ளது.
கட்சியின் நன்மை கருதி எடுக்கப்பட்ட இந்த முடிவை கட்சியின் தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொண்டர்கள் அமைதி காக்க வேண்டும்

கட்சியின் நடவடிக்கை குறித்து மதுரை தி.மு.க. தொண்டர்கள் அமைதி காத்திட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் மு.க. அழகிரி. தி.மு.க.வில் இருந்து அழகிரி நீக்கப்பட்டதை அடுத்து அவரது ஆதரவாளர்கள் பலரும் அழகிரியைத் தொடர்பு கொண்டனர். அப்போது அவர் தொண்டர்களிடம், அனைவரும் அமைதியாக இருங்கள் என்று மட்டுமே சொன்னாராம். தேர்தல் இடம்பெறவுள்ளதைக் கருதி அழகிரியும், ஸ்டாலினும் ஒருங்கிணைந்து செயற்பட கட்சித் தலைமை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாங்கள் விரும்புவதாகவும் தொண்டர்கள் ஊடகங்களுக்குக் கருத் துத் தெரிவித்துள்ளனர். (ற)

# காங்கிரஸ் இல்லாத இந்தியா உருவாகும்

## பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி சூளுரை



நரேந்திர மோடி

கோரக்பூர், ஜன.25
காங்கிரஸ் இல்லாத இந்தியா உருவாகும் என்று தெரிவித்துள்ளார் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.
உத்தரப்பிரதேச மாநிலத்தில் கோராக்பூரில் நடந்த பா.ஜ.கவின் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் கூறுகையில்,
"நாடு முழுவதும் பா.ஜ.க. அலை வீசுகிறது. காங்கிரஸ் இல்லாத இந்தியா உருவாகப்போகிறது. அதற்கு அண்மையில் நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தல் முடிவுகளே சாட்சி.
காங்கிரஸின் தவறான கொள்கையால் நாட்டில் வறுமை அதிகரித்துள்ளது. காங்கிரஸ் ஏழைகள் அதிகாரத்திற்கு வருவதை ஏற்றுகொள்ளாது. ஆனால் தற்போது ஏழைகள் குறித்துப் பேசி வருகிறது. தேர்தல் வந்தால் மட்டுமே ஏழைகள் குறித்து அந்தக் கட்சிக்கு ஞாபகம் வரும். ஓர் ஏழைக் குடும்பத்தில் இருந்து தேநீர் விற்ற ஒருவன் தலைவராக வருவதை காங்கிரஸால் ஏற்று கொள்ள முடியவில்லை.
குஜராத் பெரும் வளர்ச்சி பெற்ற மாநிலமாக உருவாகியுள்ளது. அங்கு அனைவரும் 24 மணி நேரமும் மின்சாரம் பெற்று வருகின்றனர். இங்கு கடந்த 10 ஆண்டுகளாக மோதல்கள் எதுவும் இல்லை. ஆனால் காங்கிரஸ் ஆளும் உத்தரப் பிரதேச மாநிலத்தில் விவசாயத்திற்கு தேவையான உரங்களைக் கூட கள்ளச்சந்தையில் வாங்க வேண்டிய நிலை உள்ளது. குஜராத்தை போல உத்திரபிரதேசத்தை உருவாக்க சமாஜ்வாதி கட்சியும், காங்கிரஸும் தவறி விட்டன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# கூட்டணி குறித்து சோனியா ஆலோசனை

புதுடில்லி, ஜன.25
நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் அமைக்கப் படவுள்ள கூட்டணி தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர்களுடன் அந்தக் கட்சியின் தலைவி சோனியா காந்தி ஆலோசனை நடத்தியுள்ளார்.
அந்தக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் சுஷில்குமார் ஷிண்டே, ஏ.கே.அந்தோணி, குலாம் நபி ஆசாத், ஜெய்ராம் ரமேஷ் மற்றும் திக்விஜய் சிங், சோனியா காந்தியின் அரசியல் ஆலோசகர் அகமது படேல் ஆகியோர் பங்கேற்றனர். நாடாளுமன்ற தேர்தலில் எந்தெந்த கட்சிகளை, கூட்டணியில் சேர்த்துக்கொள்ளலாம் என அவர்கள் ஆலோசித்தனர் என்று தெரியவருகின்றது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர், ரன்தீப் சுர்ஜிவாலா, "கூட்டணி குறித்து விரைவில் இறுதிமுடிவு செய்யப்படும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மீண்டும் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும்

### மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் நம்பிக்கை

திருக்கோவிலூர், ஜன.25
மூன்றாவது முறையாகவும் காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியமைக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன்.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நிலையான ஆட்சி, நாட்டின் தேசிய ஒற்றுமை, மதச் சார்பின்மை ஆகிய கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் கட்சிகளுடன் காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைக்கும். 2004ஆம் ஆண்டு மற்றும் 2009 ஆம் ஆண்டில் அமைத்ததைப் போன்று இம்முறையும் ஒரு வெற்றிக் கூட்டணியை காங்கிரஸ் கட்சி அமைக்கும். தமிழகத்திலும் வெற்றி பெறும் வகையிலான நல்ல கூட்டணி அமையும். மத்தியில் மூன்றாவது முறையாகவும் காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமையும். புதுடில்லியில் கெஜ்ரிவால் அரசுக்கு காங்கிரஸ் கட்சி கொடுத்த ஆதரவு அந்த மாநில மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தான் என்பதைபுரிந்து கொள்ளவேண்டும். அதே சமயம் அவரின் தற் போதைய செயற்பாடுகள் முதலமைச்சர் பதவிக்கு அழகல்ல. அவரது ஆட்சியையும் செயற்பாட்டையும் காங்கிரஸ் கட்சி கூர்ந்து கவனித்து வருகின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)


# கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றிய
திருமதி சரஸ்வதி சிதம்பரநாதன்
(முகாமைத்துவ உதவியாளர், தேர்தல்கள் அலுவலகம், யாழ்ப்பாணம்)
அவர்கள் 22.01.2014 அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து பேரதிர்ச்சி அடைந்துள்ளோம்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உதவித் தேர்தல்கள் ஆணையாளரும், உத்தியோகத்தர்களும்,
(43937)(3.6.4) தேர்தல்கள் அலுவலகம், யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவலைகள்

நாளை - 26.01.2014

திருமதி சுதாதேவி செகரராஜசேகரன்
(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் (M.A) - வடக்கு - கிழக்கு மாகாணசபை UC. திருகோணமலை, P.S.-மானிப்பாய், P.S. - வலி.வடக்கு, சுதேச மருத்துவ திணைக்களம் - வடமாகாணம்)



தோற்றம்
24.01.1956

மறைவு
27.12.2013

கடந்த 27.12.2013 இல் மறைந்த எமது குடும்ப குலவிளக்கின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் நாளை (26.01.2014) ஞாயிற்றுக்கிழமை கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நினைவுகளின் மீட்டலில்
சகோதரர்கள்,
ப. செகரராஜசேகரன்
(கணவர் - 077 973 2745)

366, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.
(43956)(45.6.3)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 25 | 04 |
| 05 | 02 |
| 1955 | 2013 |

முல்லைத்தீவு, உன்னப்புலவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட
அமரர் கனகசபை சிறிஸ்கந்தராசா
(முன்னாள் வர்த்தகர்- சங்கீதா புடைவை மாளிகை)

திக்குத் தெரியாத காட்டினில் எம்மை,
விட்டுத் திடீரென மறைந்த சோதியே
சுற்றிச் சுழலும் வாழ்வின் நடுவினில்
முட்டித் தெறித்து முறிந்த அச்சாணியே!
எங்கள் தெய்வமே!!
அப்பா...
என்றும் உங்கள் அன்பு மழையினில் நனைந்து
நீங்கள் காட்டிய வழியினில் நடந்து
உங்கள் கனவினை மனதில் சுமந்து
நாங்கள் உயர்வோம் உங்களை நினைத்து
நிம்மதியாய் உறங்குங்கள் அப்பா

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிப் பிரார்த்தனை இன்று (25.01.2014) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும், மதிய உணவு உபசாரத்திலும் அனைவரையும் கலந்துகொண்டு அவரது விருந்தோம்பல் பண்பினை சிறப்பித்து அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை எம்முடன் இணைந்து வேண்டுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உன்னப்புலவு, முல்லைத்தீவு,
021 2290 160. (43940)(10.6.3)
குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
adv@uthayan.com
0215671111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிய சமாதானப் பேச்சுக்களில் மோதல் நிலை

நியூயோர்க், ஜன.25
சிரிய உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியாக ஐ.நா. சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேச்சுக்களில் சமரசம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாத நிலையே காணப்படுகிறது.
சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் - அஸாத் தலைமையிலான இராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இந்த போரை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு ஜெனீவாவில் பேச்சுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதல் நாளான நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் சமரசம் எதும் ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது. (ற)

## பலரைக் காப்பாற்றி தன்னுயிர் நீத்த சிறுவன்

நியூயோர்க், ஜன.25
ஆறு பேரின் உயிரை காப்பாற்றிய சிறுவன் தீயில் கருகி உயிரிழந்த சோகச் சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது.
அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள கிழக்கு ரோசெஸ்டர் பகுதியை சேர்ந்த 8 வயதுச் சிறுவன் டைலர் தூகன்.
இவன் பென்பீல்ட் நகரில் உள்ள தனது உறவினர் வீட்டில் நேற்று முன்தினம் தங்கியிருந்தான். அப்போது இரவு நேரத்தில் திடீரென படுக்கை அறையில் தீப்பிடித்தது. அதனையடுத்து தீயணைப்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக எரிந்து கொண்டிருந்த நெருப்புக்குள் பாய்ந்து சென்ற சிறுவன், தீயில் சிக்கியிருந்த 6 பேரை பத்திரமாக மீட்டு வெளியே அழைத்து வந்தான்.
ஆனால் வயதான தாத்தாவால் வெளியே வர முடியவில்லை. அந்தச்சிறுவன் அவரை தூக்கி கொண்டு வந்த போது தீயில் சிக்கியதால் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தான்.
6 பேரின் உயிரை காப்பாற்றிய சிறுவனின் வீரச்செயலால் பெருமை அடைந்த போதிலும் அவனின் சாவு அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற)

# தென்சூடானில் போர்நிறுத்தம்



தென்சூடானில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மோதல்களால் இடம்பெயரும் மக்கள்

ஜூமோ, ஜன.25
தென்சூடானில் ஏற்பட்டுள்ள மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அரச படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.
தென்சூடானில் ஜனாதிபதி சல்வார் கிர்ரின் ஆதரவு இராணுவத்துக்கும், துணை ஜனாதிபதி ரிக் மச்சரின் ஆதரவுப் படைகளுக்கும் இடையே கடந்த டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. எண்ணெய் வளம் மிக்க சில நகரங்களை மச்சரின் ஆதரவுப் படைகள் கைப்பற்றியதை அடுத்து அந்தப் பகுதிகள் மீது கிர்ரின் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்தார். அதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல்கள் வெடித்தன. தற்போது மச்சர் ஆதரவுப் படைகளின் வசமிருந்த போர் மற்றும் பெண்டியு நகரங்களைத் தாம் மீளவும் கைப்பற்றியுள்ளனர் என்று தென்சூடான் இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.
இருதரப்பினருக்கும் இடையே நடைபெற்றுவரும் மோதல்களில் சிக்கி ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.
இந்தநிலையிலேயே, மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் இரு தரப்பினருக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தை அடுத்து எதிர்வரும் 24 மணி நேரத்துக்குள் அனைத்து மோதல்களும் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரண அமைப்புகள் தடையின்றிச் சென்று பணியாற்ற முடியும் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## முதியோர் இல்லத்தில் தீ விபத்து:

### கனடாவில் மூவர் சாவு

க்யூபெக், ஜன.25
கனடாவில் முதியோர் இல்லம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். 30க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை.
க்யூபெக் நகரில் உள்ள இந்த முதியோர் இல்லத்தில் நள்ளிரவு திடீரென தீப்பிடித்துள்ளது. உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்புப் படையினர் 20 பேரை காப்பாற்றினர். உடல் கருகிய நிலையில் 3 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் நடைபெற்றுவரும் நிலையில் காணாமற்போனவர்கள் பற்றிய தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை. (ற)

## ம.ஆபிரிக்காவுக்கு இடைக்கால ஜனாதிபதி

லண்டன், ஜன.25
மத்திய ஆபிரிக்க குடியரசில் தேசிய இடைக்காலச் சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட கேதரின் சம்பா பன்சா இடைக்கால ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார். பதவியேற்றபின்னர் கருத்துத் தெரிவித்த அவர், "ஆயுதங்களைக் கைவிட்டு நாட்டுப்பற்றை அனைவரும் வெளிப்படுத்த வேண்டும். நாட்டில் நிலவும் அமைதியற்ற தன்மையை ஒரு போதும் பொறுத்துக் கொள்ள முடியாது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# விரோதப்போக்கை கைவிடுங்கள்

### தென்கொரியாவிடம் கோருகின்றது வடகொரியா

சியோல், ஜன.25
நம்பிக்கையின்மையையும் மோதல் போக்கையும் தூண்டும் விதமாக நடைபெற்று வரும் இராணுவ விரோதப் போக்கு நடவடிக்கைகளை தென்கொரியா நிறுத்துவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சீரடைவதற்கான ஒரு பரந்த இடத்தை ஏற்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ளது வடகொரியா.
இரு நாடுகளும் கீரியும் பாம்பும் போன்று செயற்பட்டு வருகின்றபோதும் அண்மைக் காலமாக சமாதான நடவடிக்கைகளை வடகொரியா முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது. அதன் ஒரு பகுதியாகவே நேற்றுமுன்தினம் வடகொரிய இராணுவத் தலைமையகம் ஒரு பகிரங்கக் கடிதத்தை தென்கொரியாவுக்கு அனுப்பியுள்ளது.
அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது.
"தென் கொரியா அமெரிக்காவுடன் இணைந்து நடத்தும் கூட்டு இராணுவப் பயிற்சிகளை நிறுத்த வேண்டும். இரு நாடுகளுக்குமிடையே பரஸ்பரம் தாக்கிக்கொள்ளும் போக்கினைக் கைவிட்டு சமாதான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இதுநாள் வரை வடகொரியாவின் சமாதான முயற்சிகளை ஒரு ஏமாற்றுப் பிரசாரம் என்று தென் கொரியா ஒதுக்கிவருகின்றது. வருத்தத்திற்குரிய விதமாக தென் கொரிய அரசு இன்னமும் எதிர்மறையான போக்கையும், தவறான அணுகுமுறையையும் கொண்டுள்ளது. சிந்தனையற்ற தவறான சந்தேகத்தினால் இந்த முறையும் தென் கொரியா வடகொரியாவின் உண்மையான முக்கியமான கோரிக்கையை நிராகரிக்கக்கூடாது" என்றுகூறப்பட்டுள்ளது.
அதேவேளை, ஆத்திரமூட்டும் தனது தாக்குதல்களுக்கு முன்னோடியாக சமரசப் பேச்சுகளை அளிக்கும் போக்கு வடகொரியாவிடம் கடந்த காலங்களிலும் காணப்பட்டது என்று அரசியல் ஆய்வாளர்கள் பலரும் இந்த முயற்சியையும் சந்தேகத்துடனே நோக்குகின்றனர். (ற)

# ஆஸி. வான்பரப்புக்குள் நாஸாவின் டிரோன்கள்

நியூயோர்க், ஜன.25
ஆஸ்திரேலிய வான்பரப்புக்குள் தமது ஆளில்லா விமானங்களைப் பறப்பில் ஈடுபடுத்துவதற்கு நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
வளிமண்டல சோதனை நடவடிக்கைக்காகவே அந்த விமானங்கள் பறப்பில் ஈடுபடவுள்ளன. எதிர்வரும் ஆறு வாரங்களில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்றும் நாஸா தெரிவித்துள்ளது.
இந்தத்திட்டத்துக்காக அமெரிக்காவின் விமானப் படைக்காக பயன்படுத்தப்பட்ட நவீன ஆளில்லா விமானமொன்றை நாஸா நிறுவனம் ஈடுபடுத்தவுள்ளது. 'போயிங்-737' ரக விமானத்துடன் ஒப்பிடக்கூடிய வகையில் நீளமான சிறகுகளைக் கொண்ட 'ஆர் கியூ - 4 குளோபல் கவாக்' என்ற இந்த விமானமானது உலகெங்கும் பறந்து சென்று இரகசிய இராணுவ புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுவதற்காகவும், புலனாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் எனப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டதாகும். (ற)

# அமெரிக்கா திரும்பும் எண்ணமே இல்லை

### எட்வேர்ட் ஸ்நோடன் திட்டவட்டம்

மொஸ்கோ, ஜன.25
அமெரிக்கா திரும்பும் எண்ணமே இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் அமெரிக்காவின் கண்களில் விரலை விட்டு ஆட்டிய அமெரிக்க உளவு அமைப்பின் முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடன்.
அமெரிக்காவின் இரகசிய உளவு நடவடிக்கைகளை பகிரங்கப்படுத்திய எட்வேர்ட் ஸ்நோடென் தற்போது ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார்.
ஸ்நோடென் வெளியிட்ட தகவல்கள் உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தின. அதன் விளைவாக அமெரிக்காவுக்கும், அதன் கூட்டணி நாடுகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.
ஸ்நோடனை எப்படியாவது கைது செய்துவிட வேண்டும் என்று அமெரிக்கா கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் நிலையில், அமெரிக்கா திரும்பும் எண்ணமே இல்லை என்று தெரிவித்துள்ளார் அவர்.
இதுகுறித்து தனது இணையப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது. "என் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து நியாயமான விசாரணை நடைபெறாது என்பது எனக்குத் தெரியும். உளவுப் பிரிவு ரகசியங்களை அம்பலப் படுத்திய [illegible] அமெரிக்காவில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின் படி பாதுகாப்பு இல்லை. எனக்கு அமெரிக்கா திரும்பும் எண்ணமே இல்லை" என்று தெரிவித்துள்ளார் அவர்.



எட்வேர்ட் ஸ்நோடன்



பனியின் தாக்கத்தால் உறைந்து போனாலும் மக்களின் மனதை கொள்ளை கொள்கின்றன நீர்வீழ்ச்சிகள். ஆர்ட்டிக் பிரதேசத்தில் பனியின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றமையால் அமெரிக்கா உட்பட பலநாடுகளில் பனிப் பொழிவு அதிகமாகக் காணப்படுகின்றது. அதிக குளிரின் காரணமாக உலகின் மிக அழகான நீர்வீழ்ச்சியான நயகராவே உறைந்து விட்டது என்றால் பாருங்களேன். அதே போன்று சீனாவில் உள்ள மஞ்சள் ஆற்றின் நீர் வீழ்ச்சியும் உறைந்து போயுள்ளது. உறைந்த நிலையில் கண்கொள்ளாக் காட்சியளிக்கும் அந்த நீர்வீழ்ச்சியைக் காண மக்கள் [illegible] வதுடன், உறைந்த நீர்வீ[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயர்கள் மீது குற்றச்சாட்டு; கூட்டமைப்பு கடும் கண்டனம்

மன்னார் மற்றும் யாழ் ஆயர்களுக்கெதிராக சிங்கள பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதையும் அறிக்கை விடுவதையும் வன்மையாகக் கண்டிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

போர்க் குற்றங்கள் தொடர்பாக அதனை ஆய்வு செய்யக்கூடிய அமெரிக்க பிரதிநிதி ஸ்டீபன் ரெப் இலங்கை வந்திருந்த பொழுது யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆயர்களைச் சந்தித்து போர்க் காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளையும் இன்றைய நிலைமைகளையும் கேட்டறிந்தார். இவை இரகசியமான விடயங்கள் அல்ல. இவை தொடர்பான தெளிவான அறிக்கைகளை ஆயர்கள் வெளியிட்டிருக்கின்றனர்.

போர் நடந்த காலத்தில் கொத்துக்குண்டுகள் பாவிக்கப்பட்டன என்பதும் இரசாயனக் குண்டுகள் பாவிக்கப்பட்டன என்பதும் இரகசியமான விடயங்கள் அல்ல. இத்தகைய இரசாயனக் குண்டுத்தாக்குதலில் பலர் எரியுண்டு சாவடைந்தனர் என்பதும் கொத்துக்குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்கள் என்பதும் யாவரும் அறிந்த உண்மைகள். அது மட்டுமன்றி நிலக்கண்ணிவெடிகளை அகற்றுகின்ற காலத்தில் கொத்துக்குண்டுகளின் உதிரிப்பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன என்பதும் பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகள்.

> ஆயர்கள் மீது அநாவசியக் குற்றங்கள் சுமத்துவது இலங்கை அரசு சர்வதேச ரீதியாக மேலும் அந்நியப்படுத்தப் படுவதற்கே வழிவகுக்கும்

மேற்படி சம்பவங்கள் நடைபெறவில்லை என்று இலங்கை. அரசு கூறுவதாக இருந்தால் அதனை மிகத் தெளிவாக நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்கப்பட்டதன் பின்னர் தவறாகப் பேசப்பட்டிருந்தால் அது குறித்துப் பின்னர் ஆராயலாம்.

இந்த நாட்டின் கௌரவப் பிரசைகள் என்ற அடிப்படையில் எமது அனைத்து உரிமைகளுக்காகவும் நாங்கள் குரல் கொடுப்பதை யாரும் தடுக்க முடியாது. அந்த வகையில் ஆயர்கள் மீது அபாண்டமாகப் பழிசுமத்துவதையும் மிரட்டுவதையும் ஏற்க முடியாது. ஆயர்கள் மீது அநாவசியக் குற்றங்கள் சுமத்துவது இலங்கை அரசு சர்வதேச ரீதியாக மேலும் அந்நியப்படுத்தப் படுவதற்கே வழிவகுக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ந)

## ஒன்றுகூடல்

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் வருடாந்த ஒன்றுகூடல் 2013 நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் விடுதி வளவில் வைத்திய அத்தியட்சகர் மருத் துவர் யோ.யதுநந்தனன் தலைமையில் நடைபெறும். யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள உள்ளார். (ந-51)

# தேவாரப் பண்ணிசை பயிற்சி வகுப்புகள்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி சிவதொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் ஒவ்வொரு சனி, ஞாயிறு கிழமைகளில் பிற்பகல் 4.30 மணி முதல் வட இலங்கை சங்கீத சபையினதும், அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாட விதானங்களுக்கு அமைவாக இலவச தேவாலயப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றது.

அதேசமயம் கொழும்புத்துறை சிவதொண்டன் நிலைய மகளிர் ஆச்சிரமத்திலும் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளில் மாலை 5 மணி முதல் இந்த இலவச தேவார பண்ணிசைப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

## பொங்கல் விழா

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஆனைப்பந்தி குருகுலமும் யாழ்.பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைப்பந்தி 'குருகுலம்' இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, சிறப்பு விருந்தினராக ஜே/78 கிராம அலுவலர் நா.சுந்தரராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

## மெய்வன்மைப் போட்டி

கைதடி வடக்கு நவபுரம் எழுதிடல் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் இடம்பெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாரும் , சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதனும் கலந்து கொள்வர். (ந-9)

# லயன்ஸ் கழகத்தின் கண் பரிசோதனை மருத்துவ முகாம்

இணுவில் அறிவாலயமும் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் கண் பரிசோதனை இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் கண் பரிசோதனைகளை கண் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் எஸ்.குகதாசன், ஆஸ்திரேலிய விசேட கண் வைத்திய பரிசோதனையாளர் வி.நித்திலா ஆகியோர் மேற்கொள்வர். (ந)

## ஆலோசகர் நியமனம்

கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட வெலிஓயா பிரதேச ஆலோசகராக பொலநறுவை திலகாலங்கார ஹிமி நியமிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு, வெலி ஓயாப் பகுதியில் இவர் மக்களுக்கு சேவை செய்பவராக அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் இதற்கான நியமனக் கடிதத்தை அமைச்சர் றிஸாத் பதியுதீன் கடந்த புதன் கிழமைதனது அமைச்சில்வைத்து வழங்கியிருந்தார். (ஐ-10)

# மோட்டார் சைக்கிளில் வந்து சங்கிலி அறுக்கும் முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், ஜன.25

வீதியால் நடந்து சென்ற பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுப்பதற்குத் திருடர்கள் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது. நீர்வேலி தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணைக் கீழே தள்ளிவிட்டு அவர் அணிந் திருந்த தங்கச் சங்கிலியை அறுப்பதற்கு முயற்சித்தனர்.

அந்த நேரத்தில் பெண் உரத்துச் சத்தமிட்டவாறு கழுத்தில் இருந்த சங்கிலியை கையால் பற்றிப் பிடித்துக் கொண்டார். தமது முயற்சி தோல்வியடைந்ததை அடுத்து திருடர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். (த-17)

## இரு நூல்கள் அறிமுக விழா

கோகிலா மகேந்திரனின் 'புலச் சிதறல் நெஞ்சம்', கலாநிதி ம.பிரவீணனின் 'ஏலியன் கதைகள்' ஆகிய இரு நூல்களின் அறிமுக விழா இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வு தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)





**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் அரியாலை, நாவலர் வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:075 039 7149

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 10.01.2014 இல் நடைபெற்ற 29 ஆவது பட்டமளிப்புவிழாவில் கலைமாணி(BA) பட்டம் பெற்ற அலன் பூபாலசிங்கம் ஆன் ஜூலியட் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல வளங்களையும் பெற்று உயர்வடைய இறைவனின் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.
வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தம்பிமார், அண்ணாமார், அத்தைமார், மாமாமார், மாமிமார், பெரியப்பா, சித்தப்பா, சித்தி, அப்பம்மா, அம்மம்மா
(43085)(3.6.4)

**ON-LINE JOBS CLASSES**
☎:077 672 7208

**காணி விற்பனைக்கு**
கரவெட்டி மத்தி, சரஸ்வதி வித்தியாலயம் வீதியில் 18 பரப்பு காணி (100 பனை உண்டு) விற்பனைக்குண்டு. இரு பக்கமும் பாதைகள் உண்டு
தொடர்பு:
0773 515 294

**காணி விற்பனைக்கு**
சாவகச்சேரி A9 றோட்டிலிருந்து 200 யார் தூரத்தில் கல்லடி வீதியில் 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு:072 670 5449

**பேக்கறி வாடகைக்கு**
இயங்கிக் கொண்டிருக்கும் பேக்கறி வாடகைக்குண்டு.
புதிய துர்க்கா பேக்கறி,
கலைவாணி லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

**சமையல் ஆள் தேவை**
யாழ்ப்பாணத்தை அண்டிய பிரதேசத்தில் புதிதாகத் திறக்கப்பட உள்ள றெஸ்ட்ஹவுஸ் ஒன்றுக்கு சகலவிதமான உணவு வகைகளும் சமைக்கத் தெரிந்த குக் மூன்று பேர் உடனடியாகத் தேவை.
தொடர்பு:077 614 0779/077 955 2597

**நாய்க் குட்டிகள் விற்பனைக்கு**
45 நாள்கள் நிரம்பிய றொட்வீலெர் நாய்க் குட்டிகள்(Rottweiler Puppies) மானிப்பாயில் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 493 3987

**IELTS** A1 B1 B2
MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
K.U Education,No 424 1/1,K.K.S Rd,Jaffna IELTS Centre

**கட்டடமும்/வீடும் வாடகைக்கு கொடுக்கப்படும்**
இல.15, சிவப்பிரகாசம் வீதியில் அமைந்துள்ள/ சரவணாஸ் விற்பனை நிலைய கட்டடமும், ஐயனார் கோயில் வீதியில் அமைந்துள்ள விசாலமான வீடும் உடன் வாடகைக்கு விடப்படும். வாகனத் தரிப்பிட வசதியுடன் சகல வசதிகளும் உண்டு. (நிறுவனங்களிற்கும் உகந்தது)
தொடர்பு:077 606 3397,021 222 1480, 071 811 3802

**பணி ஆள்கள் தேவை**
மானிப்பாயில் அமைந்திருக்கும் எமது நிறுவனத்துக்கு ஆண்/ பெண் பணியாளர்கள் தேவை.
தொடர்பு:076 680 6338


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத மீன்பிடியாளருக்கு லட்சக் கணக்கில் தண்டம்

யாழ்ப்பாணம், ஜன. 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வருடம் தடை செய்யப் பட்ட வலைகளைப் பயன் படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட வர்களிடமிருந்து 4 லட்சத்து 27 ஆயிரத்து 500 ரூபா தண்டம் அற விடப்பட்டுள்ளதாக முல் லைத்தீவு மாவட்ட கடற் றொழில் நீரியல் வளத்திணைக் கள உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்தார்.

**தண்டப் பணமாக 4 லட்சத்து 27 ஆயி ரத்து 500 ரூபா அறவிடப் பட்டுள்ளது. அத்துடன் 11 படகு கள் 10 இயந்திரங்கள், வலைகள் என்பன அரசுடைமையாக் கப்பட்டுள்ளன.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் எப்போதுமில்லாத அளவுக்கு கடந்த சில வருடங்களாகத் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் மற்றும் வலைகளின் பாவனைகள் அதிகரித்துள் ளன. இதனைத் தடுப்பதற்காக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் பொலிஸாருடன் இணைந்து பல்வேறு நடவடிக் கைகளை முன்னெடுத்திருந் தது.

இதன் காரணமாக கடந்த ஆண்டு 73 வழக்குகள் சட்ட விரோத வலைகளைப் பயன் படுத்தி மீன்பிடித்தமை தொடர் பில் நீதிமன்றில் பதிவு செய்யப் பட்டுள்ளன. 108 பேர் இதன் காரணமாக கைது செய்யப்பட் டிருந்தனர். இதில் 90 பேர் குற்றத்தை ஒப்புக் கொண் டிருந்தனர்.

இவர்களிடமிருந்து தண்டப் பணமாக 4 லட்சத்து 27 ஆயி ரத்து 500 ரூபா அறவிடப் பட்டுள்ளது. அத்துடன் 11 படகு கள் 10 இயந்திரங்கள், வலை கள் என்பன அரசுடைமையாக் கப்பட்டுள்ளன.

இந்த வருடம், தடை செய்யப் பட்ட மீன்பிடி வலைகளைப் பாவிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரி வித்தார். (க-5)

## இருளில் மூழ்கியிருக்கும் வவுனியாவின் பல வீதிகள்

### வீதி விளக்குகள் பொருத்தப்படாததால்

வவுனியா.ஜன.25

வவுனியாவில் உள்ள பெரும் பாலான வீதிகள் இருளில் மூழ் கியிருக்கும் நிலை தொடர்பாக பொதுமக்கள் விசனம் தெரி வித்துள்ளனர்.

பிரதான வீதிகளான ஏ-9 வீதி, ஹொரவப்பொத்தான வீதி, கண்டி வீதி, மன்னார் வீதி, செட்டிக்குளம் வீதி, நேரியகுளம் வீதி, கோயில்குளம் வீதி, பூந் தோட்ட வீதி, மகா றம்பைக் குளம் வீதி, கிடாச்சூரி வீதி ஆகிய பிரதான வீதிகள் உட்பட மேலும் பல வீதிகள் வீதி விளக்குகள் இல்லாது இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

**தினமும் இரவு வேளைகளில் இடம்பெறும் வீதி விபத்துக்கள், திருட்டுக்கள், கட்டாக்காலிகளின் தொந்தரவு ஆகியவற்றுக்கு இலக்காவோர் தொகை அதிகரிப்புக்கு வீதி விளக்குகள் இல்லாமையே காரணமெனக் கூறப்படுகின்றது.**

இது தொடர்பாக வவுனியா நகரசபை, பிரதேச சபையினர் ஆகியோர் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக மக் கள் தெரிவிக்கின்றனர். தின மும் இரவு வேளைகளில் இடம்பெறும் வீதி விபத்துக்கள், திருட்டுக்கள், கட்டாக்காலிகளின் தொந்தரவு ஆகியவற்றுக்கு இலக்காவோர் தொகை அதிகரிப்புக்கு வீதி விளக்குகள் இல்லாமையே காரணமெனக் கூறப்படுகின்றது.

இருள் சூழ்ந்த வீதிகளில் கலா சார சீரழிவுகள் இடம்பெறுவ தாகவும் தெரிவிக்கப்படுகின் றது. ஒருசில இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்பட் டுள்ளதைக் காண முடிகின்றது. ஆனால் ஏ-9 வீதியில் வவு னியா நகரிலிருந்து கனகரா யன் குளம் வரையும் ஹொர வப்பத்தான வீதி மற்றும் பல்வேறு குறுக்கு வீதிகளுக்கு வீதி விளக் குகள் பொருத்தப்பட வேண்டிய தேவையுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-402)

## ஓட்டோ உரிமையாளர்களுக்கு அறிவித்தல்

வவுனியா.ஜன.25

ஓட்டோ உரிமையாளர்கள் அவற்றுக்கான அனுமதிப் பத் திரங்களைப் பெறவரும்போது தமது வதிவிடத்தைக் கிராம அலுவலர் மூலமாக உறுதி செய்து வருமாறு வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா அறிவித்துள்ளார். பிரச்சினை கள் ஏற்படாத வண்ணம் பார்த் துக் கொள்ளும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஆண்டுக் கான வாகன அனுமதிப் பத்தி ரங்களை வழங்கும் நடவடிக் கைகள் இந்த மாதத் தொடக்கத் திலிருந்து வவுனியா பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதனைப் பெற விரும்புவோர் வேலை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை சமுகமளிக்க முடியு மெனப் பிரதேச செயலகத்தின் கணக்காளர் அறிவித்துள்ளார். (க-421)

## புதிய அதிபர் நியமனம்

தரணிக்குளம் ஆரம்ப பாட சாலைக்குப் புதிய அதிபர் நிய மிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சி.சத் தியசீலன் இந்தப் பாடசாலைக் கட்டடத்தைத் திறந்து வைத் திருந்தார்.

இந்த நிலையில் புதிய அதிபர் ஒருவர் வவுனியா வடக்கு கல்வி வலயத்தினால் நியமிக்கப் பட்டுள்ளார் எனவும் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் அவர் தமது கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டார் எனவும் வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசமூர்த்தி தெரி வித்தார். (க-421)

## கிளிநொச்சியின் தொன்மையான சின்னங்கள் காக்கப்பட வேண்டும்

### பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவிப்பு

அக்கராயன். ஜன. 25

கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மைச் சின்னங்கள் பாது காக்கப்பட வேண்டும். இவ் வாறு தெரிவித்தார் பேராசிரி யர் எஸ்.புஸ்பரட்ணம்.

கிளிநொச்சி மாவட்டம் கரைச் சிப் பிரதேச செயலகத்தில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப் பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொன்மையான தமிழர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. இந்த நிகழ்வில் பங்கு கொண்டுள்ள மாணவர் கள் இலங்கையின் மனித வரலாறும் நாகரிக வரலாறும் விஜயன் இற்றைக்கு 2 ஆயி ரத்து 600 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வந்தபோது ஆரம்பமானதாகப் படித்திருப்பார்கள். ஆனால் அந்த வரலாற்று நம்பிக்கையை மாற்றியமைத்த பெருமை இரணைமடுப் பிரதேசத்துக்கு உண்டு. பிரித்தானியர்கள் இலங்கையை ஆட்சி செய்த போது தொன்மையான கற் கால மனிதர்கள் வாழ்ந்ததாகக் கூறப்பட்டபோது அதனைப் பலர் மறுத்தனர். ஆனால் இலங்கையின் தொல்லியல் திணைக்கள பணிப்பாளராக இருந்த கலாநிதி தெரணிகல இரணைமடுப் பகுதியில் ஆய்வு நடத்தியபோது ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஆண்டுகளுக்கு

**பிரித்தானியர்கள் இலங்கையை ஆட்சி செய்த போது தொன்மையான கற் கால மனிதர்கள் வாழ்ந்ததாகக் கூறப்பட்டபோது அதனைப் பலர் மறுத்தனர்.**

முன்னர் மனிதன் வாழ்ந்ததற் கான நம்பகரமான தடயங்கள் காணப்பட்டதாகத் தெரிவித் தார்.

மனிதர்கள் வடக்கில் மாங் குளம், தெற்கில் மாந்தை, மேற் கில் வெற்றிலைக்கேணி வரை யும் பரந்து வாழ்ந்ததற்கான ஆதாரங்களை ஆய்வுகள் மூலமாக அவர் வெளிப்படுத் தினார்.

மேலும் தொன்மையான மனித வரலாற்று ஆதாரங்கள் இர ணைமடுப் பகுதியில் கிடைத் ததாகக் கூறவிரும்புகின்றேன். கற்காலப் பண்பாட்டைக் கொண்டவர்கள் தமிழர்கள் என்பதையும், தமிழகம் வட இலங்கையுடன் தொடர்பு கொண்டு இருந்ததையும் அண்மைக்கால ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

எனவே கிளிநொச்சி மாவட்டத் தின் தொன்மையான வரலாற் றினை அனைவரும் பாது காக்க வேண்டும் என்றுமேலும் அவர் தெரிவித்தார். (க-18)

## கசிப்பு விற்பனைக்குத் தண்டம்

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர் களுக்கு நீதிமன்றத்தினால் தண்டம் விதிக்கப்பட்டது.

பளைப்பகுதியில் 425 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த வயோதிபர் ஒருவருக்கு 5 ஆயி ரம் ரூபாவும், கிளிநொச்சிப் பகு தியில் ஒரு போத்தல் கசிப்பை வைத்திருந்தவருக்கு 15 ஆயி ரம் ரூபாவும் தண்டமாக விதிக் கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் இரண்டு போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்ட வர் தாம் சுற்றவாளி என மன் றில் கூறியதால் 30 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனு மதிக்கப்பட்டார்.

குறித்த மூவரையும் கிளிநொச்சி மற்றும் பளைப் பொலிஸார் கைதுசெய்து கடந்த 22 ஆம்திகதி கிளிநொச்சி நீதிவான் நீதிமன் றில் முன்னிலைப்படுத் தியமை குறிப்பிடத்தக்கது. (க-55)

## நிதர்சனின் குடும்பத்துக்கு நிதியுதவி

கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த சாவடைந்த நிதர்சனின் குடும்பத்துக்கு கனேடிய தமிழ் உறவுகள் ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்பாக வழங் கியுள்ளனர்.

திருநகரைச் சேர்ந்த வீரலிங்கம் நிதர்சன் என்ற சிறுவன் உயிரி ழந்ததால் அவரது குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு பல்வேறு அமைப்புக்கள் உதவி வருகின்றன. அந்த வகையில் புலம்பெயர்ந்து வாழும் கனே டிய உறவுகளால் அனுப்பி வைக்கப்பட்ட 40 ஆயிரம் ரூபா உயிரிழந்த சிறுவனின் சகோ தரியிடம் வழங்கப் பட்டது.

சாவடைந்த சிறுவனின் தந் தையாகிய சு.வீரலிங்கம் பயங் கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு சிறைச் சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (க-55)

## நெருக்கடிகளுக்கு மத்தியில் கிளி. முருகானந்தா சாதனை

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பல சாதனைகளைப் படைத்து கிளிநொச்சி முருகா னந்தாக் கல்லூரி கிளிநொச்சி கல்வி வலயத்தில் முன்னணிப் பாடசாலையாகத் திகழ்வதாக கண்டாவளைக் கோட்டக்கல்வி அதிகாரி ஸ்ரீ.இராஜகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டபோதிலும் அதற் குரிய வளங்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் கிடைக்கின்ற வளங்களின் உச்சக்கட்டப் பயன் பாட்டைக் கொண்டு இந்தக் கல்லூரி பல்வேறு சாதனை களை ஈட்டி வருகின்றது.

போரின்போதும் அதன் பின் னரான காலப் பகுதியிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து சாதனை களைப் படைத்து கண்டாவ ளைப் பிரதேசத்திலே ஒரு முன்னணிப் பாடசாலையாக இந்தக் கல்லூரி விளங்கி வரு கின்றது. இது கண்டாவ ளைக்கு மட்டுமல்லாது முழு மாவட்டத்துக்கும் பெருமை தரு வதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

முரசுமோட்டை முருகானந் தாக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினமும் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றிருந்தன. இதில் கலந்துகொண்டு உரையாற் றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (க-55)



*மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்களுடன் பணியாற்றும் தொண்டர்களுக் கான பயிற்சிப் பட்டறை*

## உளவளத்துணை நிலையத்தினால் பயிற்சிப் பட்டறை

### கிளிநொச்சி அரச செயலகத்தில்

சமூக சேவைகள் அமைப்பின் தேசிய உளவளத்துணை நிலை யத்தினால் மாற்றுத் திறனாளி கள் மற்றும் முதியவர்களுடன் பணியாற்றும் தொண்டர்களுக் கான பயிற்சிப் பட்டறை கிளி நொச்சி அரச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற் றது.

இப்பட்டறையில் தேசிய உள வளத்துணை நிலையத்தின் திட்ட இணைப்பாளர் எம்.எவ். எம்.அசார் முதன்மை வளவா ளராகக் கலந்து கொண்டார்.

மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்களுடன் பணியாற் றும் தொண்டர்களிடம் காணப் படும் திறனை உளவளத் துணை அடிப்படையில் மேம்படுத்தல் இப்பட்டறையின் நோக்கமெனத் தெரிவிக்கப்பட்டது. (க-18)

## தொலைபேசி ஒலித்ததால் மறியல்

கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக் குகள் நடைபெற்றுக் கொண்டி ருந்தபோது கைத்தொலை பேசியை ஒலிக்க விட்டவருக்கு அன்றைய தினத்து தண்டனை யாக வழக்கு விசாரணைகள் முடியும் வரை அவரை மறிய லில் வைக் குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் உத்தரவிட் டார். கடந்த 22 ஆம் திகதி வழக்கு விசாரணை ஆரம்ப மாகிய போது தொலைபேசியை ஒலிக்க விட்டவருக்கு எதிராக பொலிஸார் வழக் குத்தாக்கல்செய்திருந்தனர். [illegible] தினத்து வழக்கு விசாரணைகள் முடியும் வரை மறியலில் வைக் குமாறு உத்தரவிட்டார். (க-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமலையில் சிரமதானம்

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட செல்வநாயகபுரம், உதயபுரி கிராம பிள்ளை யார் கடைவீதி பகுதிகள் சமுர்த்தி செயலணி யினரால் சிரமாதான மூலம் துப்புரவு செய்யப்பட்டன. (ச-40)

## சட்டவிரோத வலைகள் பொலிஸாரிடம் சிக்கின

ஏறாவூர்.ஜன.25

ஏறாவூர்ப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட முறக்கொட்டாஞ் சேனை வாவியில் தடைசெய் யப்பட்ட வலைகள் கைப்பற் றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தகவல் ஒன்றின் அடிப்படை யில் சட்ட விரோதமான மீன்பிடிக்காக நேற்று முன் தினம் இரவு வாவியில் விரிக்கப் பட்டிருந்த நிலையில் இந்த வலைகள் கைப்பற்றப்பட்டன.

சுமார் 20 ஆயிரம் ரூபா பெறு மதியான மூன்று துண்டு வலைகளே இவ்வாறு கைப்பற் றப்பட்டன.

எனினும் கைப்பற்றப்பட்ட வலை களுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை என்று பொலிஸார் கூறினர்.



முறக்கொட்டாஞ் சேனையில் கைப்பற்றப்பட்ட வலைகள்

சட்டவிரோதமாக, தடை செய் யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பாவித்து சூழலுக்கு நாசமேற் படுத்துவோர் மீது சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# தமிழர் நிலங்கள் அவர்களுக்கே குத்தகைக்கு

### தென்னமரவாடி மக்களின் நிலையை நேரில் சென்று பார்வையிட்டார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன்

யாழ்ப்பாணம், ஜன. 25

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் இணைப்புக் கிராமமாகவுள்ள தென்னமரவாடியில், தமிழ் மக் களின் வயல் நிலங்களை பெரும் பான்மையின மக்கள் அபக ரித்து வைத்துக் கொண்டு, அந்த நிலங்களை தமிழ் மக்களுக்கே குத்தகைக்கு விடுவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத் தின் குச்சவெளி பிரதேச செய லக பிரிவினுள் அமைந்துள்ள மேற்படி கிராமத்தில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு பெரும்பான் மையின மக்கள் அதனைப் பயன்படுத்தி வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

1984 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அங்குள்ள மக்கள் தமது வயல் நிலங்களில் விவ சாயம் செய்து அறுவடை செய்ய குறுகிய காலம் இருந்த போது, அப்போது ஏற்பட்ட கல வரத்தால் இடம்பெயர்ந்த மக் கள் தற்போது மீளக்குடியேறி யுள்ள நிலையில் அவர்களின் பூர்வீக நிலங்கள் பல சிங்களவர் களால் ஆக்கிரமிக்கப்பட்டுள் ளது.

**இடப்பெயர்வுக்கு திணிப்பு**

தற்போதும் சிறுகடல், வயல் நிலங்கள், தோட்டக் காணிகள் என்று அனைத்து வகை வாழ் வாதார வழிகளும் முடக்கப் பட்டு நுட்பமான முறையில் இடப்பெயர்வு அவசிய நிலைக் குள் திணிக்கப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக் கின்றனர்.

ஊர்காவற்படையினரால் அப கரிக்கப்பட்ட 22 ஏக்கர் நிலத் தில் பயிர்ச்செய்கை இடம்பெறு கிறது. பனிக்கவயல்குளம் என்ற சிறியகுளம் சுமார் 45 ஏக்கர் தமிழ்மக்களின் நிலத்துக்கு விவ சாயம் செய்ய உதவியது. ஆனால் தற்போது அந்தக் குளத்தை மூடி பெரும்பான் மையின மக்களால் விவ சாயம் செய்யப்பட்டு வருவ தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொல்லவெளி, பெருமாள் பிலவு, துவரமுறிப்பு, நல்ல தண்ணி ஊத்துப்பிலவு ஆகிய பகுதிக ளில் சுமார் 300 ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது.

"-"

**தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு பெரும்பான்மையின மக்கள் அதனை பயன்படுத்தி வருகின்றனர்.**

அந்தப் பகுதியில் 240 ஏக்கர் வயல் நிலத்தில் 120 ஏக்கர் நிலப்பரப்புக்கான அனுமதிப் பத்திரம், 1975 ஆம் ஆண்டு 60 பேருக்கு வழங்கப்பட்டது. அந்த அனுமதிப் பத்திரத்தை தாங்கள் வைத்துள்ள நிலை யில் பெரும்பான்மையின மக் கள் அதில் அத்துமீறி தொழில் செய்வதாக அந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்களிடத்தில் சென்று வயல் நிலம் எங்களுக்குரியது என்று தெரிவித்தால், குத்தகைக்கு எங்கள் காணியையே தருவ தாகச் சொல்கின்றார்கள் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மக்களின் பாதிப்புக்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் நேரில் சென்று பார்வையிட் டுள்ளார். (ச-5)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
லட்சுமி
தம்பிப்பிள்ளை

திதி : நவமி

தோற்றம்
24.09.1925

மறைவு
12.01.2011

ஆண்டுகள் மூன்று ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்
எம்மனதில் என்றுமே நிறைந்துள்ளாய் அம்மா!
எப்பவுமே பிள்ளைகள் பற்றியே நினைப்பாயே அம்மா!
இப்பவும் எங்களை நினைப்பாயா அம்மா?
நீ நடந்த இடமெல்லாம் பார்த்து மனம் ஏங்குதே அம்மா!
உங்கள்குரல் கேட்காமல் விடியுதில்லையே அம்மா!
தேற்றுவாரின்றி கலங்கி நிற்கின்றோம் அம்மா!
உங்கள் ஆன்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

70/6, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(43924) (7.6.3)

## திருத்தப் பணி மந்தகதியில்

### மக்கள் விசனம்

மட்டக்களப்பு,ஜன.25

கல்முனை, சாஹிர் வீதியில் இடம்பெற்றுவரும் திருத்தப் பணிகள் மந்த கதியில் நடை பெற்று வருவதால் போக்குவ ரத்துக்கு நெருக்கடி ஏற்படுகின் றது என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

பல நாள்களாக இந்தப் பணி வீதி அபிவிருத்தித் திணைக்க ளத்தினூடாக முன்னெடுக் கப்பட்டுவருகின்றது. அசமந்தப் போக்குடன் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதனால் இந்த வீதியினூடாக பயணிக்கமுடியாத நிலை ஏற் பட்டுள்ளது. இந்த வீதி குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-10)



திருத்தப்பணி இன்றி காணப்படும் கல்முனை, சாஹிர் வீதி

## சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உற்பத்தி

மிளகு, இஞ்சி, மஞ்சள் போன்ற ஏற்றுமதிப் பயிர்களை உற் பத்தி செய்யும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பிர தேச செயலகப் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டம் மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு முத லாம் கட்டத்தில் கமுகு ஆயிரத்து இருநூறு கன்றுகளும், கறுவா ஐயாயிரம்கன்றுகளும்நடப்பட் டுள்ளதுடன் இரண்டாம் கட்டத் தில் கமுகு மூவாயிரம் கன்று களும், மிளகு ஆயிரம் கன்றுக ளும், கறுவா இரண்டாயிரம் கன்றுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மூன்றாம் கட்டத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இஞ்சியும், மஞ்சளும்நடப்படவுள்ளனஎன்று மட்டக்களப்பு மாவட்டப்பணிப் பாளர் பி.உலகநாதன் தெரிவித் தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை, ஏறாவூர் பற்று, ஆரையம்பதி, வாகரை, ஓட்டமாவடி பிரதேச செயலகங் களில் வைத்து தெரிவு செய்யப் பட்ட பயனாளிகளுக்கு கன்று கள் வழங்கப்பட்டன. (ச)



மட்டக்களப்பு மாவட்ட விவசாய பணிப்பாளர் பி.உலகநாதன் பய னாளி ஒருவருக்கு மரக்கன்று வழங்கினார். அருகில் ஓட்ட மாவடி பிரதேச சபை தவிசாளர் கே.பி.எஸ்.ஹமீட், பிரதேச செயலகஉதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ் ஆகி யோர் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அபிவிருத்திப் பணிகளில் அரசு முதலமைச்சருடன் ஒத்துழைக்கிறதாம்

ஜெனிவா, ஜன.25

வடமாகாண தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் பெரிய அபிவிருத்திப் பணிகளில் வடமாகாண முதலமைச்சருடன் அரசாங்கம் ஒத்துழைத்து வருகின்றது.

இவ்வாறு இலங்கை அரசு தேசிய நல்லிணக்கம் தொடர்பாக எடுத்துவரும் பணிகளை ஐ.நாவில் பங்கேற்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விளக்குகையில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஜெனிவாவில் கடந்த செவ்வாயன்று கூறினார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான தேசிய செயற்றிட்டத்தின் படி அரசாங்கம் மனித சக்திக்கு சாத்தியமான எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது என்று கூறிய வீரதுங்க காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு சமீபத்தில் அதன் அமர்வுகளை நடத்தியிருப்பது பிணக்கின் காரணமாக இறந்தவர்கள் காணாமற்போனவர்கள் மற்றும் மக்களுக்கு மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டமை, அதன் முடிவுகள் விரைவில் வெளியிடப்படவிருப்பது போன்ற விடயங்களையும் பிரதிநிதிகளுக்கு விரிவாக விளக்கினார்.

அண்மையில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மற்றும் உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் ஆகியவர்கள் அரசின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந்திருந்தமை பற்றியும் குறிப்பிட்ட வீரதுங்க புலம்பெயர்ந்தவர்கள் தொடர்பான மனித உரிமைகள் அறிக்கையாளர் இலங்கை வரவிருப்பது பற்றியும் விளக்கினார். கல்வி தொடர்பான விசேட அறிக்கையாளர் இலங்கை வரவிருப்பது பற்றியும் ஏனைய சிறப்பு அறிக்கையாளர்கள் இலங்கைக்கு வந்து ஆய்வு நடத்த அழைப்பது குறித்து அரசு உரிய கவனம் செலுத்தி ஆராய்ந்து வருவதாகவும் கூறினார்.

கலந்துரையாடலில் கலந்துகொண்ட பல நாடுகளின் பிரதிநிதிகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இலங்கை அரசு எடுத்து வரும் அக்கறையைப் பாராட்டியதாக ஜெனிவாவில் இலங்கை தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இலங்கைக்கு சர்வதேச நாடுகள் உதவி புரிய வேண்டும் என்றும் மனித உரிமை பிரச்சினையில் இலங்கையுடன் ஆக்கபூர்வமாக தொடர் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று வற்புறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வீரதுங்க தொடர்ந்து பேசுகையில் சர்வதேச மட்டத்தில் தெரிவிக்கப்படும் ஆக்கபூர்வமான யோசனைகள் கருத்தில் கொள்ளப்படும். நல்லிணக்கத்துக்கான தீர்வினை ஓர் இரவுக்குள் உருவாக்கி விட முடியாது. பேனையின் ஒரு கிறுக்கலில் தீர்வை ஏற்படுத்த முயல்வது நீடித்த செயற்பாட்டுக்கு குந்தகமாகவே இருக்கும் என்று கூறினார். பிரச்சினையில் சிக்கலான சில விடயங்களை அவர் பிரதிநிதிகளுக்கு விளங்கப்படுத்துகையில் மொழிச் சிக்கல், பொது சேவையில் சிரேஷ்ட தமிழ் நிர்வாக அலுவலர்களுக்கு இருக்கும் தட்டுப்பாடு. அவ்வாறானவர்கள் பொதுசேவையில் ஈர்க்கப்படுவதை 1980 ஆண்டளவில் இருந்தே விடுதலைப் புலிகள் தடுத்து வந்திருந்தார்கள். இதனால் முன்னைய காணி பதிவுகள் அழிக்கப்பட்டு காணி உரிமைகளை நிர்ணயிப்பதில் பெரிய சிக்கல்கள் ஏற்பட்டிருந்தது என்றார். பெறுமதியான உட்கட்டுமான அழிப்புகள் மற்றும் சகல சமூகத்தினரதும் உணர்வுகளை கருத்தில் எடுக்க வேண்டியிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் நிலையான ஓர் அரசு இருப்பது அதிர்ஷ்டவசமாகும். அதற்கு தொடர்ந்து மக்கள் ஆதரவு இருந்து வருகின்றது. சில பரிந்துரைகள் இன, மத மற்றும் அரசியல் ரீதியிலான வேறுபாடுகளுக்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்த வேண்டியவையாகவும் இருக்கின்றன - என்றார். (ய)

# ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதைதான்

*ஐரோப்பிய நாடுகளைச் சாடுகிறார் ஜனாதிபதி*

யாழ்ப்பாணம், ஜன. 25

"இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் ஐரோப்பிய நாடுகள் பேசுவதானது, ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுத கதைக்கு ஒப்பானது".

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த நாட்டின் அனைத்துச் சமூகங்களும் கடந்த காலத்தில் எவ்வளவு மோசமான பாதிப்புக்களை எதிர்கொண்டன என்பதைப் பற்றிய அறிவில்லாமல் ஐரோப்பிய நாடுகள் மனித உரிமைகளைப் பற்றிக் கதைப்பதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பு, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா, பாடசாலை அதிபர் லெப்டினன்ட் கேணல் கோதை நகுலராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஜனாதிபதி ஒருவர் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டமை இதுவே முதற் தடவையாகும்.



*ஜனாதிபதி மஹிந்த*

**நாட்டை நிர்மூலமாக்க அனுமதியாதீர்**

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, தாய் நாட்டின் மீது அன்பு செலுத்துங்கள் என்று அங்குள்ள மாணவர்களிடம் கேட்டுக் கொண்டதுடன், தாய் நாட்டை நிர்மூலமாக்க யாரையும் அனுமதிக்க வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

வடக்கு, தெற்கில் கடந்த காலங்களில் சிறுவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தார்கள். அவர்களது அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டிருந்தன. வடக்கு, கிழக்கில் சிறுவர்கள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடக் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தனர்.

பணம் வைத்திருந்தவர்கள் தங்களது பண பலத்தைக் கொண்டு தாய்நாட்டை விட்டு வெளியேறினர் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, வடக்கு, கிழக்கினுள் உள்நுழைவதற்கு பயங்கரவாதிகள் எவரையும் அனுமதிக்கப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க் காலத்தில் தமிழ் மக்களும் துன்பங்களை அனுபவித்தனர்.

**வடக்கில் உரிமை வழங்கப்பட்டுள்ளது**

இன்று வடக்கிலுள்ள சிறுவர்களது உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு, அவர்களுக்கான கல்வி வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் பல்கலைக்கழகத்துக்கு வடக்கிலிருந்தே அதிகளவானோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதையும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார்.

இந்தப் பாடசாலையின் பெயர் வரக் காரணமான, சேர் பொன்னம்பலம் இராமநாதன், சிங்கள மக்களது உரிமைக்காகவும் பாடுபட்ட ஒருவர். வெசாக் பூரணை தினத்தை பொது விடுமுறையாக அறிவிப்பதற்காக போராடியவர் அவர் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ச-5)

## நாளாந்தம் 1,000 பேர் உயிரிழப்பு

நாட்டில் நாளாந்தம் 1,000 பேர் உயிரிழக்கின்றனர். இதில் 650 பேர் வரை தொற்றா நோய்களால் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச வைத்தியசாலைகளில் நாளாந்தம் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். நாடு முழுவதும் 668 சுகவாழ்வு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. (ச)

# இனித் தனியார் பஸ்களுக்கு முற்கொடுப்பனவு அட்டை

கொழும்பு, ஜன.25

தனியார் பஸ்களில் பஸ் கட்டணமாக பணம் செலுத்துவதற்கு பதிலாக முற்கொடுப்பனவு அட்டைகள் வழங்கும் நடைமுறையை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தனியார்போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் சி.பி. ரத்நாயக்க நாடு முழுவதும் தனியார் பஸ்களில் முற்கொடுப்பனவு அட்டையை உபயோகிப்பதற்கு அனுமதிகோரி முன்வைத்த பத்திரத்துக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பஸ் உரிமையாளர் சங்கங்கள் உள்ளிட்ட ஏனைய பஸ் சங்கங்களின் விருப்பத்துக்கமையவே அமைச்சர் இந்தச் சேவையை நடைமுறைப்படுத்த விருப்பம் தெரிவித்தார்

இந்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ள தேசத்தின் மகுடம் கண்காட்சியுடன் இணைந்ததாக நாடு முழுவதுமுள்ள தனியார் பஸ்களுக்கான முற்கொடுப்பனவு அட்டைகளை அமைச்சர் சி.பி. ரத்நாயக்க அறிமுகம் செய்துவைக்கத் தீர்மானித்துள்ளார்.

மொபிட்டல்மற்றும்மக்கள்வங்கி ஆகியவற்றுடன் இணைந்து அறிமுகம் செய்துவைக்கப்படவுள்ள இந்த முற்கொடுப்பனவு அட்டைகளுக்காக வெகு விரைவில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

தனியார் பஸ் சேவையினூடாக நாளாந்தம் 200 மில்லியன் ரூபா வரை வருமானம் கிடைக்கிறது. எனினும் பஸ் நடத்துநர்களின் முறைகேடான செயற்பாடுகள் மற்றும் கப்பம் செலுத்துதல் போன்ற அசம்பாவிதங்களால் நாளாந்தம் 10 மில்லியன் ரூபா முதல் 20 மில்லியன் ரூபா வரை வருமானம் இழக்கப்படுகிறது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதே வேளை பயணிகளுக்கான மிகுதிப் பணத்தை பஸ் நடத்துநர்கள் வழங்காமையும் பிரச்சினையாக இருந்து வருகின்றது.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வாகவே முற்கொடுப்பனவு அட்டைகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
29ம் ஆண்டில்
யாழ். கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

துரித 3 மாத கால பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

* **கேக் ஐசிங் வடிவமைப்புகளும் உணவு தயாரித்தலும்** : பட்டர், றோயல், Parchment, Frosting, Fondant, Water Icing வகைகள். Sugar Flowers. மற்றும் பலவகையான உணவுகள், 6 வகையான கேக், பீஸா (Pizza), சிற்றுண்டிகள், சர்பத், ஐஸ்கிறீம், புடிங், சுப், மற்றும் பல.
* **கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்** : 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல் (Hair Straightening) Re- Bonding, முடி சுருட்டுதல், Perming, முடி நிறமூட்டுதல் (Hair Colouring), பலவிதமான முடி வெட்டுதல்கள், Oil Massage.
* **FACIALS** (முக அழகுக்கலை) பல வகை.
* கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure) nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), Waxing, தமக்குத்தாமே FACIAL செய்தல்.



* **BRIDAL DRESSINGS:** இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறையும் பயிற்றுவிக்கப்படும்.

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

* (B)பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.



கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 29-01-2014
புதன் காலை 9.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 01-02-2014
சனி காலை 9.00 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாரம்பரிய நிலத்திலிருந்து குடியகற்றும் இன ஒழிப்பின் மறுவடிவம் உயருமா?

★ ஒரு சமூகத்தை-மக்கள் கூட்டத்தை-அவர்களின் பாரம்பரிய நிலத்திலிருந்து குடியகற்றுவதும் ஒருவகை இன ஒழிப்பே.

★ இந்துக் கோயில்களை அழிப்பதும், அதன் மூலம் அவர்களது மத வழிபாட்டுச் சுதந்திரத்துக்குத் தடை ஏற்படுத்துவதும் திட்டமிட்ட இன அழிப்பின் ஓர் அம்சமே.

இந்த முக்கிய கருத்துக்களை வெளியிட்டிருப்பவர் மலேசிய நாட்டின், பினாங் மாநிலத்தின் பிரதி முதலமைச்சர் பி.இராமசாமி.

அவரின் இந்தக் கருத்துக்களை கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்றும் முக்கியத்துவம் வழங்கிப் பிரசுரித்து உள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள், பிரேரணைகளாகக் கொண்டுவரப்பட உள்ள நிலையில்-

விவகாரம் மிகச் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ள இவ்வேளையில்-

மலேசிய மாநிலங்களில் ஒன்றின் பிரதி முதலமைச்சரின் கருத்துக்கள் பல தரப்புகளின் கவனத்தை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கலாம்.

பூனை கண்ணை மூடிக் கொள்வதனால், பூலோகம் ஒரு போதும் இருண்டு போவதில்லை. அதே போன்று இலங்கை அரசு, தான் சொல்பவையும் நினைப்பவையும் எல்லாமுமே சரியானவை, விவாதத்துக்கு உரியவை அல்ல என்ற நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டிய பரவலான புறச்சூழல் உருவாகி வருகிறது என்பதனை மலேசிய அரசியல் பிரமுகரின் வீச்சான கருத்து முன்னிலைப்படுத்துகிறது.

போரின் போது, மனித உரிமைகள் மீறப்படவில்லை என்ற தனது நிலைப்பாட்டை, மேலோங்கச் செய்வதற்கு "அரும்பாடு" பட்டுவரும் அரச தரப்பு அதிகாரிகளும் விசுவாசிகளும், மலேசிய அரசியல் பிரமுகர் வெளியிட்டுள்ள கருத்துக்களுக்குக் கண்டனம் தெரிவிக்கவே செய்வர். அது இல்லையெனில் அதனைப் பொருட்படுத்தாமல் தெரிந்தும் தெரியாதது போன்று ஓரம் கட்டிவிடுவர்.

எதுவானாலும், மலேசிய அரசியல் தலைவர்களில் ஒருவரான, பிரதி முதலமைச்சர் பி.இராமசாமி வெளியிட்ட கருத்துக்கள், இலங்கைத் தமிழ் மக்களின் மனித உரிமைகள் சீண்டப்படுவதனை மிகப் பெரிய அளவில், காத்திரத்துடன் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

இலங்கையில் போரின் போதும் அதன் பின்னரான இப்போதும் நிலக் கபளீகரம் கேட்பார், தடுப்பார் இன்றி வேகவேகமாக நடத்தப்பட்டதும், இப்போது அமைதி நிலவும் போது கூட அது தொடர்வதும்-

அவற்றைத் தட்டிக் கேட்கவோ, நியாயம் வழங்கவோ யாருமில்லை. பாட்டும் நானே பாவமும் நானே என்ற நிலை நின்று செயற்படும் சக்தியிடம் இருந்து, பாதிக்கப்பட்ட, தொடர்ந்தும் பாதிக்கப்படும் தமிழ் மக்கள் நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்க்க இயலாத நிலையே உயர்ந்து நிற்பது கண்கூடு. இத்தகு நிலையில், அனைத்துலக நியாயவான்களின் ஆதரவை, உதவியை நாடுவதனை விட வேறு மார்க்கமில்லை என்பதனையே வெளிப்படுத்தி நிற்கிறது.

இவற்றுக்கு மறுவளத்தில், தமிழர் பிரதேசங்களில் பௌத்த விகாரைகளை அமைப்பதில் அரசின் ஆசீர்வாதத்துடன் வடக்கு, கிழக்கிலும், தெற்கு மேற்கிலும் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. நாட்டின் பல பாகங்களிலும் மற்றொரு சிறுபான்மையினரான இஸ்லாமிய மக்களின் மத சுதந்திரம் கபளீகரம் செய்யப்படுகிறது. அவர்களின் வழிபாட்டு இடங்கள் தாக்கப்பட்டும் தகர்க்கப்பட்டும் வருகின்றன.

போர் முடிவுற்று, ஐம்பத்தைந்து மாதங்கள் கடந்துவிட்டன. ஆயினும் தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான, அவர்களிடம் இருந்து பிரிக்க முடியாத-பறிக்க முடியாத-(Inalienable) உரிமைகளை சிதைத்தது போதாது என்று-

அவர்களின் பூர்வீகக் காணிகளையும் கபளீகரம் செய்யும் ஏற்பாடுகளில் வெகு மும்முரமாக, தனக்குள்ள ஆட்சி அதிகாரங்களைக் கையில் எடுத்து வேகவேகமாகச் செயற்படுகிறது இந்நாட்டு அரசு.

இதனை வலது கையால் செய்து கொண்டு இடது கையால், அனைத்துலக மனித உரிமைகளைத் தான் மீறவில்லை என்று அனைத்துலக நாடுகளுக்கு தம்பட்டை கொண்டு பேரொலியுடன் முழங்கும் நிகழ்ச்சி நிரலை ஒப்பேற்ற வெகுவேகமாகச் செயற்பட்டு வருகிறது அரசு.

எதற்கும், நியாயம் எந்தப் பக்கத்தில் அதிக எடை கொண்டதாக உள்ளது என்பதனை, ஐ.நா.மனித உரிமை ஆணையகத்தின் மார்ச் மாதக் கூட்டத் தொடர் வெளிப்படுத்தும், வெளிப்படுத்த வேண்டும். அதுவே, இங்கு வாழும் தமிழ் மக்க[illegible] ஆவலாக மட்டு[illegible] வேண்டுதலாகவும் உள்ளது.

# காலத்தை இழுத்தடிக்க முனைகிறது இலங்கை

சிந்தா

நம்பகமான உள்ளூர் விசாரணைக்குழுவொன்றை அமைத்து போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களையிட்டு விசாரணை நடத்த, எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில், சர்வதேச விசாரணைக் குழுவொன்றை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பிரிட்டன்பிரதமர் வெளிப்படையாக அவரது பொதுநலவாய மாநாட்டுக்கான இலங்கை வருகையின் போதும், அதன் பின் பிரிட்டன் நாடாளுமன்றத்திலும், அறிக்கைகள் விடுத்த தைத் தொடர்ந்து கனடா, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளும், அதற்குச் சார்பான கருத்துகளையும், பரப்புரைகளையும் மேற்கொண்டு வருகின்றன.

மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணத்தின் பின்னரான அறிக்கைகளும், நடவடிக்கைகளும், அவர் எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்க விருக்கும் இலங்கை பற்றிய பூரண அறிக்கையும் இலங்கை ஆட்சியாளர்களுக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளன. இவற்றால் ஏற்படப்போகும் பின் விளைவுகளை எப்படி எதிர்நோக்குவது என்பதைக் காட்டிலும், இப்படியான பாதகமான செயற்பாடுகள் நடைபெறா வண்ணம் பார்த்துக்கொள்வதற்கும் இதர எதிர்ப்பு நாடுகளின் வேகத்தைத் தணித்து சாந்தப்படுத்தவும் என்ன செய்யலாம் என்பதே ஆளும்தரப்பின் முதலும், முக்கியமானதுமான தேவையாக உள்ளது.

**கால அவகாசம் கோரும் அரசு**

சர்வதேசம் கூறுவதுபோல் 2012 - 2013களில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை நிறைவேற்ற முயன்றால் சில உரிமைகளையாவது தமிழர்களுக்கு வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்ட இலங்கை ஆளுந்தரப்பு - அந்த நிர்ப்பந்தத்திலிருந்து தப்புவதற்கு கால அவகாசம் பெற்று தனது வழமையான தந்திர ஜாலங்களைப் பயன்படுத்தி எதிர்வரும் மார்ச் மாதம் வரப்போகின்ற கண்டத்திலிருந்து மீளுவதற்கான உத்தி ஒன்றைத் தேடிக் கொண்டிருந்த இலங்கையரசு, வழக்கம்போல் தமிழ் அரசியல் தலைமைகளைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தத் தீர்மானித்தது.

**அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசு**

அத்தீர்மானத்தின் பின் னுள்ள குள்ளநரித்தனம்தான் ஜனாதிபதி அண்மையில் வெளியிட்ட அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய மக்கள் மாநாடு என்ற பெயரில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஏற்பாட்டில் நடத்தப்பட வுள்ள மாநாடு.

இந்த மாநாட்டில் அரசியல்வாதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பினர், மாணவர் அமைப்பினர், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுவர் என்றும், இம்மாநாடு எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெற வேண்டும் எனவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்றும் தகவல்கள் [illegible].

இதில் எத்தனை தில்லுமுல்லுகள், திருகுதாளங்கள், குள்ளநரித்தனங் கள்? தமிழ்த் தேசியப் பற்றுள்ள அரசியல் வாதிகளையும், தமிழ் உணர் வுள்ள ஏனையோரையும் படுகுழியில் தள்ளி விடும் நுட்பமான தந்திரம் இந்த ஏற்பாட்டில் உள்ளடங்கியுள்ளது என்பதை அறியமுடியாத மட்டிமடையர்கள் என்றே, தமிழ்த் தலைவர்களையும், தமிழ் மக்களையும், ஜனாதிபதியும், அவரது சகாக்களும் கருதுவது இன்றைய கால யதார்த்தத்தின் அதி உச்ச கேலிக்குரிய விடயமாகும்.

**எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை**

இந்த மாநாட்டின் பலதரப்பட்ட பரிமாணங்களை நாம் ஆராய்ந்தோமானால் முதலில் வருவது இதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள காலம். அது இலங்கைக்குப் பாதகமான தீர்மானம் மேற்கொள்ளப்படக்கூடிய ஐ.நா. மனித உரிமைக் குழு நடைபெறுகின்ற காலப் பகுதி. இம்மாநாட்டில் தமிழ்ப் பிரதிநிதிகள் பங்குபற்றி அவர்களது தேவைகளை எடுத்துக் கூற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது அவர்களது நியாயமான சர்வதேச தரத்திலான நிவாரணங்களும், உரிமைகளும், வழங்கப்படக்கூடிய தீர்மானம் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புண்டு. எனவே, தீர்க்கமான முடிவொன்றை இனப்பிரச்சினைக்குக் காண முடியும். ஆகவே சர்வதேச நாடுகள் இலங்கை அரசிற்கெதிரான அழுத்தங்களையும், நடவடிக்கைகளையும், இடை நிறுத்திக் கால அவகாசம் வழங் குங்கள் என்று உலக நாடுகளைக் கோர முடியும.

அடுத்ததாக இம்மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்படவுள்ள அமைப்புகளின் அளவுக்கதிகமான எண்ணிக்கை - ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துகளையும் பேரினவாத முனைப்புகளையும் கொண்ட இவ்வமைப்புக்களின் எண்ணிக்கை நிச்சயமாக முன்பு ஜனாதிபதி யால் அமைக்கப்பட்ட திஸ்ஸ விதாரண சர்வகட்சி மாநாடு மற்றும் தற்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பவற்றைவிட பல மடங்கு அதிகமாக இருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. திஸ்ஸ விதாரணவின் தலைமையிலான பல கட்சிக்குழுவின் தீர்மானம் பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள் ளது.

சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்க அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு அறிக்கையின் அமுலாக்கம் ஐ.நா. சபையின் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தின் பின்னும் நடைமுறைக்கு வரவில்லை. இவை ஒவ்வொன்றும், பலநூறு தடவைகளுக்கு மேல் கூடி ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்ட விடயங்கள். இருப்பினும், ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவுக்கு அமையவே நடைமுறைப்படுத்தப் படாமல் தாமதப்படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட கலந்துரையாடல்கள். இந் நிலையில், பெரும் எண்ணிக்கையிலான பிரதிநிதிகளையும், பல்வேறு முரண்பாட்டுக் கருத்துகளையும் கொண்ட இலக்கு நிர்ணயிக்கப்படாத - தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள மாநாடு எதைத் தீர்மானிக்கப் போகிறது?


**முடிவுகள் எட்டாமலே முடியப்போகும் மாநாடு**

1984இல் காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியால் முன்மொழியப்பட்ட சர்வகட்சி மாநாடு இரண்டு வருடங்களுக்கு மேலாக கூடிப் பேசி எதுவித முடிவும் எட்டப்படாமல் முடிவுக்கு வந்தது அதே போல் இந்த மாநாடும், 2-3 வருடங்களின்பின் பயனற்றதாக முடியும் என்பது தெளிவு. மேலும் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின்பேரில் அரசமைப்பில் உள்ளடக்கப்பட்ட 13ஆம் திருத்த அரசியல் யாப்பு விதியையே அமுலாக்கம் செய்யாத இந்த அரசு, சர்வதேச மனித உரிமைப் பேரவையால் அமுலாக்கம் செய்யப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையே நடைமுறை செய்ய மறுக்கும் அல்லது தாமதித்துப் போக்குக் காட்டும் இந்த அரசு, எந்தவித சர்வதேச தீர்மானமோ, மற்றும் சட்டவலுவோ இல்லாத வெறும் தேசிய மாநாட்டு தீர்மானங்களையா நிறைவேற்றப்போகிறது? இம்மாநாடு காலத்தை இழுத்தடிக்கும் வெறுமனே கூடி முடிவின்றிக் கலையும் என்பதுதான் எமது பட்டறிவு கற்றுத்தந்த பாடமாகும்.

> ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்க விருக்கும் இலங்கை பற்றிய பூரண அறிக்கையும் இலங்கை ஆட்சியாளர்களுக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மினோசினி
யாழ்.பல்கலைக்கழகம்

# கற்பித்தல் செயற்பாட்டில் முதன்மை பெறும்

## வகுப்பறை உளநலம்

இன்றைய கல்வித் துறையை நோக்கினால் உளவியலையும், கல்வியையும் பிரிக்க முடியாதளவுக்கு உளவியலின் முக்கியத்துவம் கல்வித் துறையில் உணரப்பட்டுள்ளது.

மாணவர் தமது அறிவு, திறன்கள், மனப்பான்மை, விழுமியங்கள் ஆகியவற்றை வளர்த்து நற்குடி மக்களாக வாழ உதவும் பணியே கற்பித்தல் என்று கல்வியியலாளர் கூறுவர். கல்விச் செயற்பாடுகளான கற்றல், கற்பித்தல் போன்றவை, இடம்பெறுகின்ற இடமாக காணப்படுவது வகுப்பறை ஆகும். எனவே இந்த வகுப்பறையில் உளநலம் பேணப்பட வேண்டியது அவசியமானது.

வகுப்பறை என்னும் போது அங்கு ஆசிரியர், மாணவர், வகுப்பறைச் சூழல் என்கின்ற விடயங்கள் பிரதான இடம் வகிக்கின்றன. என்னென்ன விடயங்கள் முக்கியத்துவம் வகிப்பினும் ஓர் வகுப்பறையினதோ அல்லது பாடசாலையினதோ அல்லது ஓர் கல்வித்துறையினதோ இலக்காக அமைவது மாணவர்களுக்கு கற்பித்து அவர்களில் விரும்பத்தகு நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதாகும். எனவே வகுப்பறையில் உளநலம் என்ற விடயத்தில் மாணவர்களின் உளநலம் பிரதான இடத்தை வகிப்பதோடு, அதில் செல்வாக்கும் செலுத்துகின்றது. ஏனைய பிரதான காரணிகளாக ஆசிரியரும், வகுப்பறைச் சூழலும் அமைந்து காணப்படுகின்றன.

வகுப்பறையில் உளநலம் என்ற விடயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஓர் பிரதான விடயமாக வகுப்பறைச் சூழல் அமைந்து காணப்படுவது அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஆய்வாளர் மில்கியும், அவரோடு Catharin H.Warner என்பவரும் இணைந்து 10,700 முதலாம்தர மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் அவர்களது ஆசிரியர்களையும் வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து நான்கு பிரதான உளநலக் காரணிகளில் வகுப்பறைச் சூழல் மிகப் பிரதான செல்வாக்கைச் செலுத்துகிறது என்ற முடிவுக்கு வந்தனர். கற்றல், வெளியார்ந்த பிரச்சினைகள், ஆளிடை நடத்தைகள்(நண்பர்கள் உருவாக்கல்), உள்ளார்ந்த பிரச்சினைகள் (பதகளிப்பு,கவலை) போன்றவை காணப்படுகின்றன என்று குறிப்பிடுகின்றனர். இதில் முக்கிய காரணியாக மில்கி கூறுவது யாதெனில் கற்பித்தல் உபகரணங்கள் மாணவர்களுக்கு பற்றாக்குறையாக இருக்கக்கூடாது என்பதாகும். அடிப்படை மூல வளங்களாக பேப்பர்கள், பென்சில், கணினிகள், சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், வாத்தியங்கள், ஓவியங்கள் போன்றன காணப்படுகின்றன. இவை சரியாக இல்லாத விடத்து மாணவரின் உளநலம் ஆரோக்கியமானதாக காணப்படாது, அவர்களது செயற்றிறன் குன்றும் என்பது இவரின் கருத்து. இது தவணைப் பரீட்சைகளின் வெளியீடுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டது.

### வகுப்பறைச் சூழல்

அடுத்ததாக வகுப்பறைச் சூழல் என்ற விடயத்தில் விருத்தி செய்யப்பட வேண்டியது வகுப்பறை உருவாக்கமாகும். வகுப்பறை உருவாக்கம் என்பது சுவருக்குச் சாயமடித்தல், நாற்காலி மேசைகளை அடுக்கி வைத்தல், வர்ணப் படங்களை சுவரில் தொங்கவிடல் என்பவற்றுடன் மட்டும் முடிந்து விட, அதற்கும் அப்பாற்பட்டு, அதிலுள்ள மாணவர்களுக்கு என்ன செய்யப் போகின்றோம் என்ற கேள்வியில் இருந்து அடுத்த கட்டத்துக்கு நகர்கிறது வகுப்பறை என்ற உலகம்.

வர்ணங்களும், தளபாட ஒழுங்கமைப்பும், காட்சிப்படுத்தல்களும் வகுப்பறைச் சூழலில் முக்கியப்படுத்தப்பட்ட போதிலும் அதற்கும் அப்பால் மாணவரின் உளத்தை உற்சாகப்படுத்தித் தரமான கற்றல் சூழல் உரு வாக்கப்பட வேண்டியது முக்கியமானது. தரமான கற்பித்தல் சூழலானது மிகத்திறன் குறைவாக உள்ள மாணவர்களையும் சுறுசுறுப்புடன் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வைக்கும் என்பது ஆய்வுகளிலிருந்து புலனாகின்றது.

வெறுமையாக எதுவுமே இல்லாத வகுப்பறையில் கற்கும் மாணவரின் வினைத்திறனுக்கும், காட்சிப்படுத்தல்கள் அடங்கிய வகுப்பறையில் கற்கும் மாணவரின் வினைத்திறனுக்கும் இடையே பெரிய வேறுபாடுகள் உணரப்பட்டுள்ளன. அதாவது காட்சிப்படுத்தல்கள் உள்ள அறையில் கற்கும் மாணவர் காட்சிப்படுத்தப்படாத வகுப்பறையில் கற்கும் மாணவரை விட அதிக வினைத்திறனுடன் சுறுசுறுப்பாக செயற்பட்டமை ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது. எனவே அதுவும் சுவரில் தொங்கவிடப்படும் பற்றுத் துணைப் பொருள்களும் படங்களும் வெறும் அழகை நிரப்புவதாக இல்லாமல் மாணவர்கள் ஏங்கித் தவிக்கின்ற கல்வித் தேவையையும், அறிவுத் தேவையையும் வலுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு அமையும் போது மாணவனுக்கும் வகுப்பறைச் சூழலுக்குமிடையே மிக நெருக்கமான உணர்வு ஏற்பட்டு அவன் உளநலத்துடனும், வினைத்திறனுடனும் கற்க வழி ஏற்படும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

### வகுப்பறை உளநலம்

அடுத்து வகுப்பறையில் உளநலம் என்ற விடயத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஆசிரியர் என்ற எண்ணக்கருவை நோக்கினால் ஆசிரியரின் உளநலம், கற்பித்தல் நடவடிக்கைகள், வழிகாட்டல் நடத்தைகள் போன்ற ஒவ்வொரு செயற்பாடுகளும் வகுப்பறையில் உளநலம் என்ற விடயத்தில் செல்வாக்குச் செலுத்தும்.

ஆசிரியர் சுய தன்னிச்சையின்றி மனக்குறைகளுடன் காணப்படும் போது அவை மாணவர்களின் உளநலத்தையும் பாதிக்கும். மில்கி என்பவரது கருத்துப்படி பாடசாலைச் சூழல், நிர்வாக நடவடிக்கைகள் ஆசிரியரது உளநலனில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்துகின்றன என்று கூறுகிறார். அதாவது ஆசிரியர்கள் தங்கள் கல்லூரி தங்கள் மேல் அக்கறை செலுத்தவில்லை அல்லது தங்களது செயற்பாடுகளுக்கு தேவையானவற்றை வழங்கவில்லை என்று உணரும் காலப் பகுதியில் அவர்கள் மன அழுத்தத்துக்கு உட் படுவர் என்றும் அந்த அழுத்தங்கள் அவரது மாணவர்மேல்தான் பிரயோகிக்கப்படுகின்றன என்றும் இவர் மேற்கொண்ட ஆய்வில் இருந்து தெரிய வந்துள்ளது. இவை மாண வரின் நடத்தைகளை வெகுவாகப் பாதிக்கும் காரணியாக அமைந்து காணப்படுகிறது.

### ஆசிரியரின் நடத்தை

ஆசிரியரின் நடத்தைகளைப் பற்றி நோக்கின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைப் பொறுத்த வரையில் பிரதானமான மற்றும் நேரடியான பங்காளிகளாக ஆசிரியரும், மாணவரும் காணப்படுகின்ற போதிலும் இந்த இரு சாராருக்கும் வெவ்வேறான பொறுப்புக்களும் வகி பங்குகளும் காணப்படுகின்ற போதிலும் ஒரு வகுப்பறையை வழி நடத்துவதில் அதிகளவான பொறுப்பு ஆசிரியருக்கே இருக்கிறது. ஆசிரியரது வழிகாட்டல்களும், செயற்பாடுகளும் சரியானதாகவும், பொருத்தப்பாடுடையதாகவும் அமையும் போதே வகுப்பறையில் உளநலம் என்பது சாத்தியமானதாக அமையும். அணு விஞ்ஞானியான ஐன்ஸ்ரீன் என்பவர் இயற்பியல், சார்பியல் போன்றவற்றுக்கான நோபல் பரிசைப் பெற்ற போது பத்திரிகையாளர் அவரைப் பேட்டி கண்டபோது அவர் தன் வெற்றிக்கு தனது சேர் ஐசாக் நியூட்டன் மற்றும் அணு ஆசிரியர்கள் தந்த வெளிச்சமே காரணமெனக் கூறினார். இது மாணவர் நடத்தையில் ஆசிரியரின் செல்வாக்கைப் புலப்படுத்து கின்றது.

ஆசிரியர் கற்றலுக்கு வழிகாட்டுபவர், உதவுபவர், வழி செய்து கொடுப்பவர், வலு இணைப்புச் செய்பவர் என்பவற்றுக்கு இணங்க வகுப்பறைக் கற்றல், கற்பித்தலில் ஆசிரியரின் பங்களிப்பு முக்கியமானதும் அவசியமானதுமாகும். ஒரு வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் வெற்றிகரமான தாக அமைவதற்கு ஆசிரியர் மேற் கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம். பின்வரும் செயற்பாடுகளை முறையாகவும் பொருத்தப்பாடாகவும் ஓர் ஆசிரியர் செய்வாரானால் வகுப்பறை உள நலம் பேணப்படுவதோடு


> சுவரில் தொங்க விடப்படும் பற்றுத் துணைப் பொருள்களும் படங்களும் வெறும் அழகை நிரப்புவதாக இல்லாமல் மாணவர்கள் ஏங்கித் தவிக்கின்ற கல்வித் தேவையையும், அறிவுத் தேவையையும் வலுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்

கற்றல் இலக்குகளும் துரிதமாக எட்டப்படும்.

அந்த வகையிலே ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகளாக திட்டமிடல், வகுப்பறை முகாமைத்துவம் பேணல், பொருத்தமான கற்பித்தல் சாதனங்களைச் சரியாகப் பயன்படுத்தல், ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கல், பயிற்சிகளை வழங்குதல், திருத்துதல், பின்னூட்டல் வழங்கல், வகுப்பறை விதிமுறைகளை ஏற்படுத்தல், கேட்புலத் தொடர்பை ஏற்படுத்துதல், பரிசு, பாராட்டு, தண்டனைகளை நீதியான முறையில் வழங்கல், மாணவர்களின் சந்தேக நிவர்த்திக்கு நேரம் வழங்கல் , மாணவர்களுக்குப் பொறுப்பு வழங்கல், சுய கற்றலுக்கு ஊக்கமளித்தல், தொடர் மதிப்பீடும் கணிப்பீடும், கற்பித்தல் நுட்ப முறைகள் போன்ற விடயங்கள் முக்கியமானவை. அத்தோடு ஆசிரியரின் தோற்றப் பொலிவும் உரையாடல் நுட்பங்களும் கூட மாணவ உள திருப்தியில் செல் வாக்குச் செலுத்துவதாக நவீன ஆய்வுகள் கூறுகின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளை ஓர் ஆசிரியர் சரியாகக் கைக் கொள்ளும் போது மாணவரின் உளநலம் பேணப்படுவதோடு ஆசிரியருக்கும் தனது கடமையைச் சரிவரச் செய்தேன் என்ற திருப்தி நிலையும் ஏற்பட்டு வகுப்பறையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனுடன் அமைவதோடு வகுப்பறையின் மொத்த உளநலமும் பேணப்படும். எனவே வகுப்பறையில் உளநலத்தைப் பேணி கற்றல் இலக்குகளை இலகுவாக அடைய வேண்டும் என்றால் வகுப்பறைச் சூழல், வகுப்பறை உருவாக்கம் என்பன சாதகமாகக் காணப்படுவதோடு ஆசிரியரின் நடத்தைகளும், வகி பங்கும் முக்கிய இடத்தை வகிப்பது மேற் கூறப்பட்ட விடயங்களின் ஊடாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் அதிரடி இலாபம் உண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**இடபம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார்.

**மிதுனம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களை நம்பிப் புதுப் பொறுப்பை ஒப்படைப்பார்.

**கடகம்:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாக முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். பழைய பிரச்சினைகளைத் தீர்க்கப் புதிய வழியை யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் நிம்மதி உண்டு.

**சிங்கம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். அரசாங்கத்தாலும், அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**கன்னி:** சோர்வு நீங்கித் துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். பழுதான மின்னணுச் சாதனங்களை மாற்றுவீர்கள். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார்.

**துலாம்:** சாதாரணமாகப் பேசப்போய் சண்டையில் முடியும். முன் கோபத்தால் பகை உண்டாகும். தர்மசங்கடமான சூழ் நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். சிலர் உதவி கேட்டு நச்சரிப்பார்கள்.

**விருச்சிகம்:** சின்னச் சின்ன வேலைகளையும் அலைந்து முடிக்க வேண்டி வரும். உங்கள் வாயைச் சிலர் கிளறி வேடிக்கை பார்ப்பார்கள். அதிகம் பேச வேண்டாம். அசதி, சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**தனுசு:** தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பீர்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் உங்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வரும்.

**மகரம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள்.

**கும்பம்:** கடந்த இரண்டு நாள்களாக இருந்த அலைச்சல், பதற்றம், கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த வேலைகளை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.




## தை-13 ஞாயிற்றுக்கிழமை | 26.01.2014

திதி: தசமி பி.ப.03.09 வரை
நட்சத்திரம்: அனுசம் மு.இ.10.45 வரை
சுபநேரம்: 09.36-11.06 வரை
இராகுகாலம்:05.06-06.36 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### அருட் குருவும் அவதாரமும்

எவ்விடத்தில் இறைவனின் திருப்பெயர்கள் ஓதப் பெறுகின்றனவோ அவ்விடம் புனிதமடைகின்றது எனில், இறைவனுடைய திருநாமத்தை எப்போதும் ஓதி வருகிறானே பக்தன் அவன் இன்னும் எவ்வளவு புனிதம் வாய்ந்தவனாக இருக்க வேண்டும்! அவனிடமிருந்ததன்றோ நமக்கு ஆன்மிக உண்மைகள் வருகின்றன! எனவே அந்த மகானை மிகுந்த மதிப்போடும் பயபக்தியோடும் நாம் அணுக வேண்டியது அவசியமாகிறது. சிறந்த உண்மைகளைக் கூறும் ஆசான்கள் உலகில் மிகச் சிலரே. இருப்பினும் இத்தகைய மகான்கள் உலகில் இல்லாத காலமே இல்லை எனலாம். மனித வாழ்க்கை எனும் பசுஞ்சோலையில் மலர்ந்த வாடா மலர்கள் அன்றோ இவர்கள்! "கைம்மாறு கருதாக் கருணைக் கடல்" "ஆசார்யம் மாம் விஜாநீயாத்– அர்ஜுனா ! என்னை ஆசான் என்று நீ உணர்வாயாக!" என்று ஸ்ரீகிருஷ்ணர் பாகவதத்தில் கூறியுள்ளார். இம்மகான்கள் இம் மண்ணுலகில் இல்லாமற் போவாராயின் அக்கணமே இவ்வுலகு பயங்கர நரகமாக மாறி, அழிவை நோக்கி விரைந்து செல்லும்.

ஆசான்களிடையே, சாதாரணமாக விளங்கும் ஆசான்களை விட, மிக உயர்ந்தவர்களாயும், மேன்மை வாய்ந்தவர்களாயும் உள்ள சிறந்ததோர் ஆசாரியப் பிரிவு உலகில் இருந்து வந்துள்ளது. இவர்களைத் தாம் நாம் கடவுளின் அவதாரம் என்கிறோம். இம்மேலோர்கள் ஒருவனைத் தீண்டினால் போதும்; அக்கணமே அவனிடம் ஆன்மிகச் சக்தி கிளர்ந்தெழுகிறது. அது மட்டுமல்ல. இவர்கள் தாம் விரும்பிய மாத்திரத்திலேயே பிறரிடம் தெய்வீக ஆற்றல்களை எழச் செய்கின்றனர். இவர்களிடமிருந்து கட்டளை வந்தாற் போதும்; உடனே கயவனும் கடைப்பட்டவனும் மகான்களாகின்றார்கள். இவர்களே ஆசான்களுக்கெல்லாம் ஆசானாக இருப்பவர்கள், இறைவன் மனித வடிவில் காணப்படுவது இவர்களிடத்தில்தான். இறைவனை இவர்கள் மூலமாக அன்றி வேறு எந்த வகையிலும் நாம் காண இயலாது. ஆகவே, இவர்களே உண்மையில் நம்து வழிபாட்டுக்குரியவர்கள்; நம்மால் வணங்குதற்குரியவர்கள்.

# பெண்ணின் காலுக்குள் புதைந்திருந்த தங்கப் புதையல்

தென் கொரியாவைச் சேர்ந்த பெண் ஒருவரின் கால் மூட்டுக்குள் தங்கம் புதைந்திருந்தது தெரியவந்துள்ளது.

தென் கொரியாவைச் சேர்ந்த 65 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கடும் மூட்டு வலியின் காரணமாக மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.

அப்போது ஸ்கான் செய்து பார்த்த போது, அவரது கால் மூட்டில் ஏராளமான தங்க ஊசிகள் இருப்பது தெரிய வந்தது.



மூட்டுவலியால் பாதித்த முழங்கால் 'ஸ்கான்' செய்த காட்சி

இதற்குமுன் கடும் கால் வலியின் காரணமாக அக்குபஞ்சர் முறையில் மருத்துவபரிசோதனைகள் எடுத்துக் கொண்டுள்ளார். அப்போது பயன்படுத்தப்பட்ட ஊசிகள் தான் இவை என்பது தெரியவந்துள்ளது.

## செவ்வாயில் புதுமையான பாறைகள்

செவ்வாய்க் கிரகத்தில் கியூரியாசிட்டியின் உதவியுடன் புதுமையான பாறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக ரோவர் என்ற விண்கலத்தை அனுப்பியது.

அது செவ்வாயின் நிலப்பரப்பில் உள்ள பாறைகளைப் படம் எடுத்து அனுப்பியது.

இதுகுறித்து நாசா விஞ்ஞானி ஸ்டீவ் ஸ்குவேர்ஸ் குறிப்பிடுகையில், அந்தப் பாறையின் விளிம்புகள், வெண்மை நிறமாகவும் மையப்பகுதி அடர் சிவப்பு நிறத்துடனும் காணப்படுகிறது.

இதுபோன்ற பாறையை இதற்கு முன் கண்டதில்லை, இதில் கந்தகம் மற்றும் மெக்னீஷியம் அதிகளவில் காணப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோதத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | | 1 | 3 | 5 | 7 | | |
| | | | 2 | | | | | 5 |
| 1 | 4 | | | 9 | 6 | 3 | | |
| | | | 4 | 7 | | | 5 | 3 |
| | | | 6 | | 8 | | | |
| 4 | 5 | | | 2 | 3 | | | |
| | | 9 | 3 | 1 | | | 2 | 8 |
| 7 | | | | | 2 | | | |
| | | 3 | 5 | 4 | 9 | | 1 | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 9 | 4 | 1 | 6 | 8 | 2 | 3 |
| 8 | 4 | 2 | 5 | 3 | 9 | 1 | 6 | 7 |
| 1 | 6 | 3 | 2 | 7 | 8 | 5 | 4 | 9 |
| 4 | 1 | 8 | 6 | 2 | 7 | 9 | 3 | 5 |
| 2 | 5 | 6 | 8 | 9 | 3 | 4 | 7 | 1 |
| 3 | 9 | 7 | 1 | 4 | 5 | 6 | 8 | 2 |
| 9 | 3 | 1 | 7 | 6 | 4 | 2 | 5 | 8 |
| 7 | 8 | 4 | 9 | 5 | 2 | 3 | 1 | 6 |
| 6 | 2 | 5 | 3 | 8 | 1 | 7 | 9 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டேலாவின் காதில் குட்டி முயல்

மண்டேலாவின் அந்தச் சிலையில் அரசு அதிகாரிகள் தங்களது பெயர்களையும் கையெழுத்தையும் பொறிக்க அனுமதி மறுத்த காரணத்தினாலும் தாங்கள் முயலின் உருவத்தைச் சேர்த்ததாக சிலையை வடிவமைத்த சிற்பிகள் கூறுகிறார்கள்.


நெல்சன் மண்டேலாவின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள அவரது சிலையின் வலது காதில் குட்டி முயலின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளமை தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தென்னாபிரிக்க மக்களது மட்டுமல்லாது உலக மக்களின் அன்பைப் பெற்ற நெல்சன் மண்டேலா கடந்தாண்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி சாவடைந்தார். அவரைக் கௌர விக்கும் விதமாக பிரிட்டோரியா விலுள்ள யூனியன் கட்டடத்திற்கு வெளியே அவரது பிரமாண்டமான உருவச் சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் வலது காதில் பித்தளையால் ஆன குட்டி முயலின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அதைத் தொலைநோக்கி கொண்டோ அல்லது அதிநவீன கமராவைக் கொண்டோ தான் பார்க்க முடியும். அதனை உடனே அகற்றுமாறு தென்னாபிரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் அதனை வைத்தது ஏன் என்பதற்கு சிலையை வடிவமைத்தவர்கள் காரணம் கூறுகின்றனர். மிகவும் விரைவாகச் சிலையைத் தாங்கள் முடிக்க வேண்டும் என்று அதிகாரிகள் தங்களை அவசரப்படுத்தியதும் இதற்குக் காரணம் என்று தெரிவிக்கின்றனர். ஆபிரிக்க மொழியில் முயல் என்றால் 'விரைவாக' என்று பொருள். மிகவும் பிரம் மாண்டமான அந்தச் சிலையின் காதில் தங்களது படைப்பின் அடையாளமாக ஒரு சிறு முயலை வைத்தமை, எந்த வகையிலும் அந்தச் சிலையின் மேன்மையை குறைக்கவில்லை என்று அதை உருவாக்கிய சிற்பிகள் கூறுகிறார்கள்.



மண்டேலாவின் அந்தச் சிலையில் அரச அதிகாரிகள் தங்களது பெயர்களையும் கையெழுத்தையும் பொறிக்க அனுமதி மறுத்த காரணத்தினாலும் தாங்கள் முயலின் உருவத்தைச் சேர்த்ததாக சிலையை வடிவமைத்த சிற்பிகள் கூறுகிறார்கள்.

ஆனால் அவர்களின் கூற்றை தென்னாபிரிக்க அரசின் பேச்சாளர் மறுத்துள்ளார். தங்களது பெயரையோ அல்லது கையெழுத்தையோ பொறிக்க அந்தச் சிற்பிகள் அனுமதி கோரி விண்ணப்பிக்காத போது, அரசு அதற்கு மறுத்தது என்று அவர் கூறுவது சரியல்ல என்று அவர் தெரிவித்துள்ளார்.


# 2,300 ஆண்டுகள் பழைமையான சித்திரவதைக் கூடங்கள் கண்டுபிடிப்பு!





2,300 ஆண்டுகள் பழைமையான சித்திரவதைக் கூடங்களைக் கொண்ட நிலவறையொன்று துருக்கியின் புர்ஸா நகரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த நிலவறையில் சித்திரவதைக் கூடங்களுடன் இரத்தம் உறைந்திருந்த கிணறொன்றும் படுகொலைக் குழியொன்றும் காணப்படுகின்றன. இந்த நிலவறைச் சித்திரவதைக் கூடங்கள் உலுடாங் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இப்ராஹிம் யில்மாஷ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த நிலவறையானது கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக நம்பப்படும் கட்டடங்களுடன் தொடர்பைக் கொண்டிருந்தன. அச்சமயம் வாய்பேச முடியாதவர்களாகவும், காது கேட்காதவர்களாகவும் இருந்தவர்களே சாவுத் தண்டனைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்ததாகவும் அவர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட கைதிகளின் தலைகளை வெட்டிக் கிணற்றில் வீசிய பின் எஞ்சிய உடல் பகுதிகளை அந்தக் கைதிகளது உறவினர்களிடம் கையளித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.இந்நிலையில் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள நிலவறைச் சித்திரவதைக் கூடங்களை அருங்காட்சியகமாக மாற்றி 2016 ஆம் ஆண்டுக்குள் திறந்து வைக்க அகழ்வாராய்ச்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.


# சீதாப்பழம் அனைவருக்கும் நல்லது



**இந்தப் பழத்தின் பங்கு அதிகம். சீதாப்பழத்தைச் சாப்பிட்ட பிறகு தோல், விதைகளைத் தூக்கி எறியாதீர்கள். விதையை அரைத்து, பாசிப்பருப்பு மாவில் கலந்து தலையில் தேய்த்து வந்தால், பேன், பொடுகு நீங்கும். கூந்தல் மிருதுவாகும்.**

சீதாப்பழத்தை, கர்ப்பிணிகள் சாப்பிட்டு வந்தால் உடல் வலிமையாவதுடன், பிறக்கும் குழந்தையின் வளர்ச்சியும் நல்ல நிலையில் இருக்கும். சருமத்தை அழகாக்கும். தோலுக்கும் முகத்துக்கும் பளபளப்பைக் கொடுக்கும். இதில் உள்ள மக்னீசியம், உடலில் நீர்ச் சத்தைத் தக்கவைக்கும். பக்கவாதம், மாரடைப்பு, புற்றுநோய் எதிர்ப்புச்செயல்களில் இந்தப் பழத்தின் பங்கு அதிகம். சீதாப்பழத்தைச் சாப்பிட்ட பிறகு தோல், விதைகளைத் தூக்கி எறியாதீர்கள்.
விதையை அரைத்து, பாசிப்பருப்பு மாவில் கலந்து தலையில் தேய்த்துவந்தால், பேன், பொடுகு நீங்கும். கூந்தல் மிருதுவாகும். பழத்தின் தோல் பற்சிதைவு, ஈறுகளில் ஏற்படும் வீக்கம் மற்றும் வலிகளுக்கு நல்லநிவாரணி. மலச்சிக்கலைக் கட்டுப்படுத்தும். இந்த மரத்தின் பட்டைகள், நீரிழிவு நோய்க்கு நிவாரணியாகவும், இதன் இலைகள் நோய்த்தடுப்புக்கு மருந்தாகவும் பயன்படுகின்றன.
சீதாப்பழம் உடலுக்குக் குளிர்ச்சியைத் தருவதால், இரவு நேரங்களில் சாப்பிடும்போது, வெந்நீரில் சிறிது நேரம் ஊறவைத்து அதன் வெப்பநிலை சற்று உயர்ந்தவுடன் சாப்பிடலாம். எல்லா வயதினரும் உண்ணக்கூடியது. குறைந்த விலையில் கிடைக்கக்கூடியது.


# உடல் ஆரோக்கியத்துக்கு கயிறு அடியுங்கள்



இன்று தொப்பைப் பிரச்சினையால் அவதிக்குள்ளாகும் பெண்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்கள் தினமும் கயிறு அடித்தல் பயிற்சி செய்து வந்தால் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் கரைந்து, தொப்பைப் பிரச்சினையும் படிப்படியாகக் குறையும். கயிறு அடிப்பதால் ஏற்படும் நன்மைகள் என்ன? முதலில் உடலில் உள்ள தேவையற்ற எடை குறைகிறது. சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் ஆரோக்கியத்தையும், வளர்ச்சியையும், உடலுக்குப் புத்துணர்வையும் தருகிறது. உள் உறுப்புகளுக்கும், நரம்புகளுக்கும் தக்க பயிற்சி கிடைப்பதால் அவற்றின் செயல்பாடுகள் சீராகின்றன. உடலின் ரத்த ஓட்டத்தைச் சீராக்குவதுடன், இதயத்துக்கும், நுரையீரலுக்கும் வலுவூட்டம் கொடுக்கிறது. கை, கால், தொடைப் பகுதி தசைகள் அதிக சக்தி பெறுகின்றன. மூட்டு வலி, கணுக்கால் வலி நீங்குகிறது.
தொடர்ச்சியான இடுப்பு வலி உள்ளவர்களுக்கு அது குறைவதுடன், முதுகெலும்பின் எலும்பு முடிச்சுகள் பலம் பெறுகின்றன. இரத்த ஓட்டம் சீராகிறது. ஆரோக்கியம் மற்றும் அழகைப் பராமரிக்க கயிறு அடித்தல் உதவுகிறது. மிக முக்கியமாக ஆழ்ந்த உறக்கத்துக்கு இது அருமருந்தாகும். அதனால் நீங்களும் கயிறு அடித்தல்தானே என எண்ணாமல் ஆரோக்கியமான வாழ்வுக்கு இதனைச்செய்து பயன்பெறுங்கள். ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் துள்ளிக் குதிப்பது கர்ப்பப்பை இறக்கத்துக்குக் காரணமாவதால் வயதானவர்கள் இதைத் தவிர்ப்பது நல்லது.

# டுபாயின் பூர்ஜ் கலிஃபாவில் சாகச நிகழ்ச்சிகள்

டுபாயில் செங்குத்தான கட்டடத்தின் சுவர் மீது நடந்த மொடல் (MODEL)- களின் அணிவகுப்பு பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.
உலகின் மிக உயர்ந்த கட்டடமாகக் கருதப்படும் பூர்ஜ் கலிஃபாவின் மீது பயிற்சி பெற்ற நடன மற்றும் ஆக் ரோபேட் (ACROBAT) கலைஞர்கள் என்ற போதும் இந்த நிகழ்ச்சி தங்களுக்கு சவாலா னதாக இருந்தது என்று அவர்கள் கூறினர். புவியீர்ப்பு விசையை எதிர்த்து தங்கள் உடல் எடையை சமாளிப்பதுதான் பெரும் சாகசமாக இருந்தது என அவர்கள் கூறினர்.



பெற்ற கலைஞர்கள் ஏறி சாகசங்களை செய்து காட்டி மக்களை மகிழ்வித்தனர். ஆக்ரோபேட் (ACROBAT) கலைஞர்கள், பிரபல ஃபேஷன் பிராண்ட் (FASHION BRAND)-களின் ஆடைகளை அணிந்து கொண்டு ஆகாயத்திலிருந்து தொங்கியபடி சாகசங்களை நிகழ்த்தினர். இவர்கள் பயிற்சி

உலகத்தின் பல இடங்களிலிருந்து அங்கு வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் இதனைக் கண்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். கடந்த ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பித்த டுபாய் (SHOPPING) திருவிழாவின் ஒரு பகுதியாகவே இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## அதிபர்

## திரு. இராசையா இராசசேகரம் (SLPS-1)

## அவர்களின்

# மணிவிழா சிறப்பு மலர் - 25.1.2014

### அருளாசிச் செய்தி



எமது அன்பிற்குரியவரான கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் முதல்வர் க.இ.இராசசேகரம் அவர்கள் அறுபது அகவை நிறைவெய்தி ஓய்வுபெறும் செய்தி அறிந்தோம்.

க.இ.இராசசேகரம் அவர்கள் கல்விப் புலத்திலும், சமூக உறவியலிலும் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் நிறைந்தவர். தாம் பணியாற்றிய இடங்களில் எல்லாம் பணித்தடம் வலுவாகப் பதியும் வண்ணம் கனதியான பணி செய்தவர்.

இதே போல் இறை நம்பிக்கையும், எம் இந்துப் பண்பாட்டினின்று விலகாமல் ஒழுக வேண்டும் என்ற பிடிப்பும் மிக்கவர். கணினி இணையம் சார்ந்த விஷயங்களிலும் ஈடுபாடு கொண்டு தம் கல்விப்பணிக்கு அவற்றைத் துணையாகக் கொண்டவர்.

இத்தகு பண்பாளருக்கு நிகழும் மணி விழாவை வாழ்த்தி அவரது வாழ்வு இன்னும் இன்னும் நிறைய சேவை ஆற்றி செழுமையான புகழோடு அமையவும் மனைவி, மக்களுடன் மகிழ்ந்திருக்கவும் முருகன் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றோம்.

நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்கள்.

### வாழ்த்துச் செய்தி



யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியினது அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் க.இ.இராசசேகரம் அவர்களது மணிவிழாவையொட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கடந்த ஆறு வருடங்களாக யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியினது அதிபராகச் சிறப்பான பணியினை இவர் ஆற்றியுள்ளார். அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்தவரான இவர் விஞ்ஞானப் பயிற்சி பெற்ற கலைப்பட்டதாரியாவார். இவரது சேவைக் காலத்தில் பாடசாலை அடைந்துள்ள வளர்ச்சி பாராட்டுதற்குரியது. இவர் தனது சேவைக் காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு இப்பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் முன்னிலை வகிப்பதற்கும் வழிவகுத்தவராவார்.

இவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் தொடர்ந்து கல்வித்துறைக்கும், சமூகத்திற்கும் அரும்பணியாற்றவும் இறைவனை வேண்டுகின்றோம்.

செ.உதயகுமார்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்.கல்விவலயம்.

### நல்மாணாக்கர்களின் நாயகனுக்கு வாழ்த்துக்கள்



எமது கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் புகழ்பூத்த பாடசாலையாக யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி விளங்குகின்றது. யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலேயே கல்வி கற்று, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலே ஆறு வருடங்களாக அதிபராகச் சிறப்புற பணி யாற்றி ஓய்வு பெறுகின்ற அதிபர் க.இ.இராசசேகரம் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கோப்பாய் பிரதேசத்தில் சமூகப் பணிகளிலே மிகுந்த ஆர்வத்துடன் தன்னுடைய பங்களிப்பை வழங்கிக் கொண்டிருப்பவர் க.இ.இராசசேகரம் அதிபர் அவர்கள். 34 வருடங்கள் தொடர்ச்சியாகக் கல்விப் புலத்தில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி பல நல் மாணாக்கர்களை உருவாக்கிய பெருமை அவரைச் சார்ந்ததாகும். இவருடைய ஓய்வு காலம் சிறப்பாக அமையவும், இவர் சமய, சமூகப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றவும் இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

ம.பிரதீபன்
பிரதேச செயலர்
கோப்பாய் பிரதேச செயலகம்.

### மணிவிழா நாயகனுக்கு ஒரு சொல்லாரம்



இன்று தனது முப்பத்து நான்கு வருட கல்விச் சேவைக்கால அகவையினை நிறைவு செய்கின்றார் எங்கள் கோப்பாய் மத்தி யா/கிறிஸ்தவ கல்லூரியின் அதிபர் க.இ.இராசசேகரம் அவர்கள்.

இவர் தனது ஆரம்ப சேவையினை வன்னிப் பிரதேசத்தில் ஆரம்பித்தது மட்டுமன்றி தற்போது இடம் பெயர்ந்து வந்த வன்னிப் பிரதேச மாணவர்களையும் பாரபட்சமின்றி தனது பாடசாலையில் இணைத்து இணையில்லாச் செல்வமாம் கல்விச் செல்வத்தினை இன்முகத்தோடு மாணவர்களுக்கு வழங்கித் தனக்கென ஒரு தனியிடத்தினை உருவாக்கி மங்காப் புகழுடன் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அஞ்சா நெஞ்சுடன் 34ஆவது வருட சேவையினை கோப்பாய் பிரதேசத்தில் நிறைவு செய்கின்ற மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துரை நல்குவதில் நான் பெருமிதமும் பூரிப்பும் அடைகின்றேன்.

சி.பாலசுந்தரம்
கிராம அலுவலர், கோப்பாய் மத்தி.




## திரு. க.இ.இராசசேகரம் அதிபர் (தரம்-1)

Sc.Trd, B.A., Dip in Ed

அதிபர்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

கோப்பாய் கோட்ட
அதிபர் சங்கத் தலைவர்

பிறப்பு 1954.01.25
கோப்பாய் மத்தி

தந்தை - இராசையா தாய் - இரத்தினேஸ்வரி

**கல்வி**

ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி:
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பட்டப்படிப்பு:
பேராதனை பல்கலைக்கழகம்

பட்டப்பின் படிப்பு:
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**சேவை விவரம்**

1979.10.12 - 1980.01.31 வரை வரணிக்குளம் பாலிநகர் ம.வி
1980.02.01 - 1982.05.17 வரை நட்டாங்கண்டல் G.T.M.S
1982.05.18 - 1983.02.27 வரை பாண்டியன்குளம் ம.வி
1983.02.28 - 1984.12.31 வரை பலாலி ஆசிரியர் கலாசாலை
1985.01.01 - 1989.03.31 வரை பூநகரி ம.வி
1989.04.01 - 1996.03.10 வரை நீர்வேலி C.C.T.M.S
1996.03.11 - 1996.07.21 (அதிபர்) வரை புத்தூர் M.M.T.M.S
1996.07.22 - 2002.05.23 (அதிபர்) வரை நீர்வேலி C.C.T.M.S
2002.05.24 - 2007.11.11 (அதிபர்) வரை அச்செழு சைவப்பிரகாசா
2007.11.12 - 2014.01.24 (அதிபர்) வரை யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

### வாழ்க பல்லாண்டு



அகவை அறுபதை எட்டி ஓய்வுபெறும் மதிப்புக்குரிய அதிபர் க.இ.இராசசேகரம் அவர்களை கல்லூரிச் சமூகம் நன்றியுடன் பாராட்டுகிறது.

இக்கல்லூரியிலேயே தனது ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்கல்வியைக் கற்றுத் தேறி பட்டம் பெற்று டிப்ளோமாவையும், ஆசிரியர் பயிற்சியையும் பெற்றுத் தன்னைக் கல்விப் பணிக்காக அர்ப்பணித்தவர். தனது 34 வருடக் கல்விப்பணியில் ஆசிரியராகவும் அதிபராகவும் ஆற்றிய பணிகள் எண் ணிலடங்கா.

தான் கல்விகற்ற கல்லூரியிலேயே அதிபராக இருந்து ஓய்வுபெறும் மதிப்பார்ந்த க.இ.இராசசேகரம் அவர்களின் ஓய்வுகாலம் அவர் தம் மனைவி பிள்ளைகளுடன் மகிழ்ச்சிகரமாக அமைய ஆண்டவன் ஆசியுடன் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.

ச.வேலழகன்,
அதிபர்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.


### துணிச்சல் மிக்க அதிபர்



எமது கல்லூரியின் அதிபராகக் கடந்த ஏழு வருடங்களாகக் கடமையாற்றி இன்று மணிவிழாக் காணும் க.இ.இராசசேகரம் அவர்கள் கிறிஸ்தவ கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்குகின்றார். இவர் எமது கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் மாணவர்களின் உயர்கல்வி வளர்ச்சிக்கும் பௌதீக வள அபிவிருத்திக்கும் அயராது பாடுபட்டவர். இவரது காலத்திலேயே கடந்த வருடம் 23 மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்புப் பெற்றுள்ளனர். கல்லூரியின் நீண்டகாலக் கனவாகிய கல்லூரிச் சுற்று மதிலின் ஒரு பகுதி கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. பௌதீக வள அபிவிருத்தியிலும், இணைபாட அபிவிருத்தியிலும் அக்கறையுடன் செயற்பட்டவர். வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை வழங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கண்டிப்புடன் கலந்த அரவணைப்புடன் நிர்வாகப் பணியாற்றி இன்று மணிவிழாக் காணும் எங்கள் மதிப்பிற்குரிய அதிபர் அவர்கள் தமது ஓய்வு காலத்தில் மகிழ்வுடன் வாழ இறையாசி வேண்டுகின்றேன்.

சி.சிவலிங்கம்
பிரதி அதிபர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

### என்றும் வளமுடன் வாழ்க



எங்கள் கல்லூரியின் அதிபர் க.இ.இராசசேகரம் அவர்கள் தனது 60ஆவது அகவையில் இன்று ஓய்வு பெறுகின்றார். அதிபராக இருந்து எங்களை அன்புடன் அரவணைத்து கல்லூரியை வழிநடத்தியவர். ஒவ்வொருவரிடமும் மறைந்து கிடந்த திறமைகளை இனம் கண்டு உரிய பொறுப்புக்களை வழங்கி கல்லூரிக்கு அரிய பணி புரிந்தவர். கல்வி அபிவிருத்தி, பௌதிக வள விருத்தி என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தி கல்லூரியின் தேவைகளைப் பூர்த்தி செய்து தந்துள்ளார். கணினிக் கற்கை மற்றும் இணையதளப் பயன்பாடுகளுக்கு கூடிய முக்கியத்துவம் கொடுத்து அத்துறைகளின் தேவைகளையும் பூர்த்தி செய்து தந்துள்ளார். அவர் ஓய்வு காலத்தில் மகிழ்ச்சியுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றேன்.

ம.கணேசானந்தன்-
தலைவர் - ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

### கல்வியை வளர்த்த வள்ளலே வாழ்க!



காலத்தால் அழிவுறா கல்விச் செல்வத்தை தான் பெற்றதுமன்றி அதை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்கும் உயர்ந்த, ஆசிரியராகப் பின் அதிபராக பணியாற்றி இன்று ஓய்வு பெறும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் க.இ.இராசசேகரம் அவர்களை நானும் வாழ்த் துவதில் மகிழ்வடை கின்றேன்.

17 வருட காலங்களாகத் தனது ஆசிரியப் பணியில் இவர் தன்னை அர்ப்பணித்து ஆற்றிய சேவைகளுடன் தொடர்ந்து 17 வருடங்கள் அதிபர் பதவியை ஏற்று பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் உயர்வுக்கும் இவர் ஆற்றிய பணிகள் பாராட்டத்தக்கவை.

இன்று தன் பணியில் இருந்து இவர் ஓய்வு பெற்றுக் கொண்டாலும் தொடர்ந்தும் நல் ஆசானாக சமுதாயத்தில் திகழ்ந்து மாணவர்களின் உயர்வுக்கு தன்னாலான பணிகளை தொடர்ந்தாற்ற இறைவன் இவருக்கு நல் உடல், உள ஆன்மீக சுகங்களை வழங்கி இவரை ஆசீர்வதிக்க நானும் இறைவனை வேண்டி இறை ஆசி கூறி நிற்கின்றேன்.

பேரருட்திரு இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர், ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

### செயல் வீரனுக்கு வாழ்த்துக்கள்



கோப்பாய்க் கோட்டத்தின் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றான யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் 17 வருட ஆசிரிய சேவையையும் 17 வருட அதிபர் சேவையையும் நிறைவு செய்து இன்று இளைப்பாறுகின்றார். இப்பாடசாலையில் தனது ஆரம்ப, இடைநிலை, உயர்தரக் கல்விதனைப் பெற்று கடந்த 7 வருடங்களாக இப்பாடசாலையை வழிநடத்தி அதன் வளர்ச்சிக்குத் துணை நின்றவர்.

கோப்பாய் கோட்ட அதிபர் சங்கத் தலைவராக இருந்து ஏனைய அதிபர்களுக்குத் தனது வயது மூப்பினாலும், ஆளுமையாலும் வழிகாட்டியாக நின்று கோட்டச் செயற்பாடுகளில் பல வழிகளில் ஒத்துழைப்பு நல்கியவர் அவரது சேவையைக் கௌரவித்து அவரது ஒத்தாசைகள் தொடர்ந்து கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் தனது ஓய்வு காலத்தை குடும்பத்தினருடன் குதூகலமாகக் கழித்து நோய்நொடியின்றிப் பல்லாண்டு காலம் இனிதே வாழ வாழ்த்துகின்றேன்.

ஏ.எஸ்.சற்குணராஜா
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டக் கல்வி அலுவலகம், கோப்பாய்.

### சிறந்த கல்வியியலாளருக்கு வாழ்த்துக்கள்



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபரும், கோப்பாய் கோட்ட அதிபர் சங்கத் தலைவரும், எனது நீண்டநாள் நண்பரும், ஆளுமைமிக்க சிறந்த கல்வியியலாளருமான க.இ.இராசசேகரம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

ஆசிரியராக, அதிபராக பணியாற்றிய காலங்களில் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிலும், ஒழுக்கக் கட்டுப்பாட்டிலும் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்பவர். இறுதிக் காலத் தில் தான் கல்வி கற்ற கல்லூரியிலேயே அதிபராகச் சேவை வழங்கி இன்று ஓய்வு பெறுகின்றார். கல்விச் செயற்பாடுடன் மட்டுமன்றி சமூக சேவையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

இவரது சேவை கல்விச் செயற்பாடுகளுக்கு மட்டுமன்றி, ஓய்வு வேளையிலும் சமய, சமூக தேவைகளுக்கு மேலும் பயன்பட நீண்ட ஆயுளையும், மனபலத்தையும் வழங்க இறையருளை வேண்டி இவ்வேளையில் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க பல்லாண்டு!

- லயன் Dr.வை.தியாகராஜா MJF, J.P.
சர்வதேச லயன்ஸ் கழகங்களின் பிராந்திய ஆலோசகர்.

### வரலாற்றுப் பெருமையை எழுத்துருவாக்கிய செம்மல்

எமது சங்கத் தலைவரும், பாடசாலையின் பழைய மாணவரும், அதிபருமாகிய க.இ.இராசசேகரம் அவர்கள் அகவை அறுபதில் தனது சேவையை நிறைவு செய்கின்றார்.

பாடசாலையின் 160ஆவது ஆண்டு விழாவினை கொண்டாடி பாடசாலையின் பழமையினையும், பெருமையினையும் அறியச் செய்தவர். தனது ஆளுமையினால் பெற்றார். ஆசிரியர், மாணவர், பழைய மாணவர் ஆகியோர் துணை கொண்டு பௌதிக வளங்களைப் பெருக்கியவர். இவரது காலத்தில் விஞ்ஞானத் துறைக்கு கணிசமான மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றுள்ளனர். எமது பாடசாலையின் நிகழ்வுகளை உலகறியச் செய்வதற்காக இணையத்தளம் இவர் காலத்தில் வடிவமைக்கப்பட்டது.

பலவழிகளிலும் பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்காற்றி ஓய்வுபெறும் எமது அதிபரின் ஓய்வுகாலம் சிறப்புற்று அமைய இறைவனின் நல்லாசிகளை வேண்டி வாழ்த்துகிறோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

## ஆசிரியர் நலன்புரி கழகம், பழைய மாணவர் சங்கம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

(43863) (10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில் இரண்டாம் ஆண்டு



மலர்வு
23.10.1952

உதிர்வு
15.02.2012

## அமரர் கந்தையா சண்முகராசா

(உரிமையாளர், அம்பாள் ஸ்ரோர்ஸ், வீரமாகாளி அம்மன் கோயிலடி, **சன் சுப்பர் மாக்கற்**)

**தீதி: தசமி 25.01.2014**

எங்கள் ஒளி விளக்காய்த் திகழ்ந்த
திருவிளக்கே அப்பா!
கணப்பொழுதில் ஆறவில்லை
எம்துயர் எமை ஆறாத்துயரில்
ஆழ்த்தி மீளாப் பயணம் சென்ற தந்தையே!
உங்கள் நினைவு எம்
நெஞ்சை விட்டு அகலாது



(சி.11545) (45.6.3)

34/1, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# தசாஹ் கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் விஜய ஸ்ரீ தை மீ முதலாம் நாள் (15.01.2014)
செவ்வாய்க்கிழமை பின்னிரவு சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## பிரம்மஸ்ரீ இ.வெங்கடேச ஐயர்

(இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கணிதர்)

அவர்களது கிருஹயக்ஞம், சமாராதனை நாளை (26.01.2014) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

(43641)(2.6)

சோதிடபரிபாலன மடம், கொக்குவில். குடும்பத்தினர்.

# ஆண்டொன்று ஓடிப் போனதே

திருமதி
## அன்னபூரணி தம்பிராசா



தோற்றம்
10.04.1930

மறைவு
04.02.2013

சாவகச்சேரி சிவன்கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும்,
வவுனியா வைரவ புளியங்குளத்தில் வசித்தவரும்
ஓய்வுபெற்ற வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி
ஆசிரியையுமான திருமதி அன்னபூரணி தம்பிராசா

எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற் செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும் சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கியொரு வார்த்தையேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீர் ஆறெல்லாம் அதிலோர் எழுத்தை அழித்திடுமோ.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


த.மனோகரன்
077 132 7362

(43109) (7.6.3)

# வருட நிறைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மனம் மகிழ
1946.01.24

கதி கலங்க
2013.02.04



மனிதத்தை உணர்த்திய உத்தமர்
அமரர்
## சின்னட்டி முருகையா

வருடமொன்று கடந்ததுவோ வஞ்சகனவன் வெற்றி கண்டானோ
வாஞ்சையுடன் வாழ்ந்த உங்களையா நாம் இழந்துபோனோம்?
வேண்டும் நீங்கள் எங்களுக்கு, மீண்டும் நீங்கள் வேண்டும்
வேண்டுதல் நிறைவேறும் வேளை, வந்திடுங்கள் எங்களுக்காக.
ஓரவஞ்சகமின்றி யாவரையும் அணைத்திருந்தீர்கள்,
ஒன்றும்விடாது எல்லாவற்றையும் செய்தும் தந்தீர்கள்
ஓய்வில்லாது ஓடியும் திரிந்தீர்கள் இவையெல்லாம்
ஓலமிட எமை வைத்து நீங்கள் சென்றுவிடத் தானா?
ஓரிருநிமிட இடிபோல ஓய்ந்துபோனதே உங்கள்மூச்சு
தர்மத்தின் விளக்கமே, ஒழுக்கத்தின் விழுமியமே
வறுமையின் செல்வமே, ஏழ்மையின் நேர்மையே
மானிடத்தின் சிகரமே, எல்லாமான உங்கள் வாழ்வு
பாடமாகட்டும் எமக்கெல்லாம், வெண்பிரம்பாகட்டும் பாதைதனில்.
அன்னாரது வருடநிறைவு ஆத்மசாந்திப் பிரார்த்தனை
இன்று (25.01.2014) சனிக்கிழமை
அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது.

(43870)(12.6.3)

அளவெட்டி மேற்கு, அளவெட்டி. குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
17.08.1942



மறைவு
27.01.2011

## அமரர் இராமு சுப்பிரமணியம்
(சின்னத்தம்பி)

கணமது நிமிடமாகி நிமிடமது மணியதாகி
மணியது நாள்களாகி நாள்களது வாரங்களாகி
வாரமது வருடங்கள் ஆகி
கடந்ததே மூன்றாண்டுகள் அழகான உன்வதனம்
நாம் அகிலத்தில் உள்ளவரை அழியாது எம் நெஞ்சில்.

(43906)(45.6.3)

596/5, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீஸ்வரத்தில் நூல் நிலையம் அமைக்க ஏற்பாடு

அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக, திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் மண்டபத்தில் நூல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அங்கத்தவர்களுக்கு நூல் இரவல் கொடுக்கும் பகுதி ஊடாக இலவசமாக நூல்கள் வழங்கப்படவுள்ளன.
இந்த நூல் நிலையப் பணியை விஸ்தரிக்கும் பொருட்டு அடியார்களிடம் இருந்து நூல்கள், சஞ்சிகைகளை நிர்வாகத்தினர் எதிர்பார்க்கின்றனர்.
எதிர்வரும் சிவராத்திரி தினத்தன்று (27.02.2014) ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்களிடம் இருந்து பயனுள்ள நூல்களை நிர்வாகத்தினர் எதிர்பார்க்கின்றனர்.
நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் கலாசார மண்டபம், திருக்கேதீஸ்வரம் மற்றும் திருவாசக இல்லம் 31ஏ. ஜானகி ஒழுங்கை, கொழும்பு - 04 என்ற முகவரியில் அவற்றை ஒப்படைக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நிறைவு விழா

மன்னார் மறைமாவட்டத்தின் 33 ஆவது ஆண்டு நிறைவு விழா தோட்ட வெளி மறைசாட்சியர் அன்னை ஆலயத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வின் நன்றித்திருப்பலி மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை தலைமையில் மறைமாவட்டத்தில் பணியாற்றும் சகல அருட்பணியாளர்களின் கூட்டிணைவில் காலை 7.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். (ந.56)

## நாயால் கடியுண்டு சகோதரர்கள் காயம்

பாடசாலை சென்ற மாணவ சகோதரர்களை நாய் துரத்தித் துரத்திக் கடித்துக் காயப்படுத்தியது. இந்தச் சம்பவம் நேற்று மீசாலை வடக்கில் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் மதுஷன் (வயது-10) பத்மநாதன் மதீஷன் (வயது-12) ஆகிய சகோதரர்கள் நாயினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். (ஓ-9)

## பூக்களுக்கு தட்டுப்பாடு

வவுனியாவில் பூக்களுக்கும், பூமாலைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.
கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சி காரணமாக பெருமளவான பூமரங்கள் அழிவடைந்துள்ளதால் இத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விசேட தினங்களின்போது பூமாலைகளைப் பெறுவதில் இடர்கள் காணப்படுகின்றன.
பூமாலை கிடைத்தாலும் ஒரு பூமாலை 300 ரூபா தொடக்கம் 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.
இதேவேளை ஆலயங்களிலும் பக்தர்கள் பூக்களை வழங்குவது குறைவடைந்துகாணப்படுகின்றது.
தற்போது இங்குள்ள மக்கள் புதிய பூமரக் கன்றுகளை நடுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். (க-402)

# மரண அறிவித்தல்கள்



## துரைச்சாமி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், அநுராதபுரம்)

உடுவில், லவ் லேனைப் பிறப்பிடமாகவும் கல்வயல், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி சுப்பிரமணியம் நேற்று (24.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி-லோகாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லமுத்துவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை யா/சாவ. டிறிபேக் கல்லூரி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகதாசன் மீனாம்பிகை, வெற்றிவேல் மற்றும் தாட்ஷாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வர்களான பொன்னையா (அதிபர்), சுந்தரம்பிள்ளை (பிரதம எழுதுவினைஞர்) மற்றும் அம்மாக்குட்டி (கனடா), சிவக்கொழுந்து (லண்டன்), கிருஷ்ணானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற இராசரத்தினம் (அதிபர்) மற்றும் ஸ்ரீநிவாசன் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்) ஆகியோரின் சகலனும், யூட் செந்தூரனின் (வத்தளை, கொழும்பு) பாசமிகு தந்தையும், றிபேக்காவின் அன்பு மாமனும், அபிஷேக், எப்சிபா, அபிஷாணி ஆகியோரின் அன்புப் பேரனும், லூட்ஸ்வாஸ் தம்பதியரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.01.2014) சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சாவகச்சேரி கற்குளி ஒழுங்கையில் உள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் உள்ள கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி செ.சுப்பிரமணியம் (மனைவி),
இ.இரவீந்திரன் (பெறாமகன்),
(அதிபர், யா/கல்வயல் சண்முகானந்தா வித்தி.)

கற்குளி ஒழுங்கை,
சாவகச்சேரி. (சி/7637) (10.6.3)

## திருமதி சரஸ்வதி (பேபி அன்ரி) சிதம்பரநாதன்

(தேர்தல் திணைக்களம், யாழ்ப்பாணம்)



அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிதம்பரநாதன் 22.01.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற இலங்கையர் செல்லையா மற்றும் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சிதம்பரநாதனின் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுரேகாவின் (சூட்டி) அன்புத் தாயாரும், திலகவதி, கமலாவதி, மனோகரன் (யா/கொடிகாமம் மத்தியகல்லூரி), காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன், லீலாவதி, இராமநாதன், துரைராஜன், யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, சிதம்பரநாதன் (பிரான்ஸ்), சரஸ்வதி, குலசேகரம் (ஓய்வுநிலை ஆசிரியர்), சரஸ்வதி, நேசநாதன், கைலாயநாதன், ஏகாம்பரநாதன் (டென்மார்க்), மங்கையர்க்கரசி, யோகநாதன் (மின்சாரசபை, சாவகச்சேரி), சிவகுருநாதன் (ஜேர்மனி), சாந்தநாயகி (டென்மார்க்), அகிலேஸ்வரி (டென்மார்க்), கலாசோதி (நோர்வே), சுமதி (கனடா), காலஞ்சென்றவர்களான நடராஜன், யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், சின்னப்பிள்ளை, இன்பராணி, திரவியமலர் (டென்மார்க்), காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் சூரியகுமாரி (பிரதேச செயலகம், சாவகச்சேரி), பிறேமா (ஜேர்மனி), விநாயகமூர்த்தி (டென்மார்க்), பார்த்தீபன் (டென்மார்க்), முகில்வண்ணன் (நோர்வே), ஜெகத்ஜெயன் (கனடா) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், பிரான்ஸைச் சேர்ந்த யோகேந்திரா, சிறிகஜேந்திரா, சிறிரவீந்திரா, சிறிசுவேந்திரா, சிறிமேகேந்திரா, பவளேந்திரா, ஜெயந்திமலர், சுகிர்தமலர், லண்டனைச் சேர்ந்த நந்தகுமார், ரூபகுமார், இதயவேணி, சந்திரமலர், பிறேமகாந்தன், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கெங்காதரன், சர்மிளா, திரிவேணி (கனடா), குணாளன் (சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), ஜெயந்தினி (மேன்முறையீட்டு மேல்நீதிமன்றம்,யாழ்ப்பாணம்) ஆகியோரின் சிறியதாயும், லோமா (பிரான்ஸ்), தீபா (ஆஸ்திரேலியா), பிறிமிலா (பிரான்ஸ்), சங்கீதா (லண்டன்), சீமா (நோர்வே), சோபா, ஆர்த்தி, சிந்துஜா (இராமநாதன் நுண்கலைப்பீடம்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (26.01.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் பாலாவிதாள்வு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: சசிகுமார் (நீதிமன்றம் - கிளிநொச்சி)
077 925 1440
அர்ச்சுனன் (யாழ்.பல்கலைக்கழகம்,
முகாமைத்துவபீடம்) 077 315 1592
பிரதீபன் (கமநல சேவைகள் திணைக்களம் (யா)
யாழ்ப்பாணம் 077 737 4925 (43923)(12.3.8)

தகவல்:
குடும்பத்தினர்,
அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
இ.இராஜமகேந்திரன்
அவர்களின் அன்புத் தந்தை
**தம்பையா இராசேந்திரம்**



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சோமாஸ் கந்தப்பெருமானை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி-புத்தூர். (43925)(7.6.3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் பொன்னம்பலம் சண்முகரத்தினம்
(ஓய்வுபெற்ற கணித ஆசிரியர்)

தோற்றம்
03.03.1943

மறைவு
26.12.2013

கடந்த 26.12.2013 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் பொன்னம்பலம் சண்முகரத்தினம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் இன்று (25.01.2014) சனிக்கிழமை நடைபெறும். இந்த நிகழ்வில் உறவினர், நண்பர்கள், அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
மானிப்பாய் வீதி, தாவடி, கொக்குவில். (43934)(5.3.6)
குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆரோக்கியநாதர் திருமாவளன் (திரு)

மலர்வில் மகிழ்ந்தது:
26★10★1975

மறைவில் வெந்தது:
25★01★2009

ஈரைந்து மாதங்கள் கருவில்
உருவாய் திருவாய் மலர்ந்தாய்
இன்று உன் நினைவுத் தீயில்
வெந்து மடிகின்றோம்
ஐந்தாண்டுகள் நெருப்பாற்றில் நீந்துகின்றோம்
மகனே, மீண்டுமொருமுறை திருமுகம் காட்டாய்

64, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம். (43961)(2.6.3)

சி.ஆரோக்கியநாதர் (தந்தை)
குடும்பத்தினர்.

## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல்

பின்வரும் நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

01. யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகம்
02. மல்லாகம் நீதிமன்ற வளாகம்
03. சாவகச்சேரி நீதிமன்ற வளாகம்
04. ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகம்

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றக் கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூ 100/= ஐயும், மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூ.25000/= ஐயும் செலுத்தி **05.02.2014** புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி **05.02.2014** பிற்பகல் 3 மணிவரை ஆகும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

[illegible] பிரேமசங்கர், தவிசாளர்/ மேல் நீதிமன்ற நீதிபதி,
மேல் நீதிமன்ற கேள்விச்சபை, மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம். (C/11571)(2.3.6.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி இராஜமனோகரி அருந்தவநாதன்
அவர்களின் தந்தையும் எமது ஆசிரியர்
திருமதி ஜெகஜோதி இராஜமகேந்திரன் அவர்களின் மாமனாரும் ஆகிய

**தம்பையா இராசேந்திரன்**

அவர்கள் 23.01.2014 இல் காலமானார். அன்னாரின்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.
ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி. (43941) (12.6.3)

## ஈராண்டு நினைவுகளில்

அமரர் அருட்தந்தை

**இ.பீற்றர் துரைரட்ணம்**



"கோதுமை மணி மண்ணில் விழுந்து
மடிந்தாலொளிய பயன் தராது" என்ற
மறையுண்மைக்குப் பொருள் கொடுத்து
இவ்வுலகில் இறைபணியாம்
பிறரன்புப் பணிபுரிந்து
இறைவனுக்கும் பணிபுரிய வான் வீடு
சென்ற அருட்பணி இ.பீற்றர்
துரைரட்ணம் அடிகளாரை
அவரது மறைவின் இரண்டாம்
வருடத்தில் நினைவுகூர்ந்து
பரமபதத்தில் அவர் இளைப்பாற
இறைவனைப் பணிவோம்.

மண்ணில் 02.08.1943 — விண்ணில் 25.01.2012

(C/11573)(2.6)

குடும்பத்தினர்.

## பதைபதைக்கும் 90 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
23.09.1977

விண்ணில்
25.10.2013

**கணேசன் சிறீதரன்** (கனடா)

(3 ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

வானம் கொண்ட நீலம் போல என் வாழ்வில் கலந்தவனே
தாரம் மட்டுமல்ல - எனக்கு தாயும் நீயே என்றாயே
ஒருநாள் பொழுதேனும் உன் குரல் கேட்கத் தவறியதில்லை
இன்று 90 நாள்கள் போனதையா
அனுதினமும் உன்னைத் தேடி அணு அணுவாய்த் துடிக்கின்றேன்
ஓடி வா என் உயிரே உன் குட்டியம்மாவிடம்

உங்கள் ஆத்மா சாந்தி பெற இன்னும்
கண்ணீரின் பாதையில் பயணிக்கும் உன் அன்பு

கொட்டடி. (43957)(2.6)

மனைவி
S.சாங்கீதா

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை சுப்பிரமணியம்

(Mechanical Engineer, Department of Labour Factory Division)



அளவெட்டி வடக்கு, தோரையடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமான காசிப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (24/01/2014) வெள் ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான காசிப்பிள்ளை -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை -வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், ஜானகி, மோகன், யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகுமார், சுமித்திரா, மயூரன் ஆகியயோரின் அன்பு மாமனும், சிதூசன், மகிஷா, ஆரணன், வித்யா, வாமணன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான முருகேசம்பிள்ளை, திருமதி தனலட்சுமி, நல்லதம்பி, வைரமுத்து மற்றும் சதாசிவம் ஆகி யோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நாளை (26.01.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியில் இருந்து அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப. 10.00 மணி யளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

37. Fernando Road,Colombo. 06
2360323.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

## மல்லாகத்தில் இன்று மருத்துவ முகாம்

அளவெட்டி, ஜன. 25

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாதாந்த நடமாடும் மருத்துவ சேவை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு J/212 மல்லாகம் தெற்கு நரியிட்டான் இளைய நிலா சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இங்கு மருத்துவப் பரிசோதனைகள், ஆலோசனைகள் என்பன இடம்பெறவுள்ளன. (ஓ-36)

## சோளம் உற்பத்தியில் செட்டிகுளம் ம.வி.

சோளத்தை உற்பத்தி செய்து வருமானம் ஈட்டுவதில் செட்டிகுளம் மகாவித்தியாலயம் முன்மாதிரியாக விளங்குவதற்கு பெற்றோர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் ஒதுக்கப்பட்டுள்ள சில பகுதிகளில் சோளப் பயிர்ச்செய்கை சில ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்றது. இதன் மூலமாகப் பாடசாலைக்குப் பெருமளவு வருமானம் கிடைக்கின்றது. அத்துடன் சோளம் உற்பத்தி தொடர்பான அறிவையும் பாடசாலை மாணவர்கள் பெறக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பாடசாலையில் வாழை, தென்னை ஆகியனவும் பயிரிடப்பட்டுள்ளன. இவற்றைப் பராமரிக்க ஆசிரியர்களும் மாணவர்களும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். பாடசாலை நிகழ்வுகளின் போது இங்கு கிடைக்கும் வாழைப் பழம், தேங்காய் என்பன பயன்படுத்தப்படுவது தொடர்பாகப் பெற்றோர் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (க-402)

## ஒரே கூட்டம் 3 தலைவர்கள்

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் சிறப்புக் கூட்டம் அடுத்தடுத்து மூன்று உறுப்பினர்கள் தலைமையில் நடைபெற்றுச் சாதனை படைத்துள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் சிறப்புக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. இறை வணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமாகி தவிசாளரின் தலைமையுரையை அடுத்து கடந்த மாதக் கூட்ட அறிக்கை செயலாள ரால் வாசிக்கப்பட்டது.

இதன்போது கூட்டத்துக்குத் தலைமை வகித்த பதில் தவிசாளருக்குக் கிடைத்த அவசர அழைப்பை அடுத்து அவர் கூட்டத்திலிருந்து வெளியேறியதால் வாக்குகளின் அடிப்படையில் கூடுதலான வாக்குகளைப் பெற்ற ஆ.சி. கணேச வேல் தலைமையில் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

குறித்த நேரத்துக்குப் பின் பதில் தவிசாளர் திரும்பிவந்ததை அடுத்து அவர் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. மதிய போசனத்துக்காக ஒரு மணியுடன் நிறுத்தப்பட்ட கூட்டம் மீண்டும் 2 மணிக்கு ஆரம்பமானது. கூட்ட மண்டபத்துக்கு வந்த பதில் தவிசாளர் முக்கியவிடயமாக வெளியே செல்ல வேண்டியிருப்பதால் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறு கூறிச்சென்று விட்டார்.

மாலை நேரக் கூட்டத்துக்கு உறுப்பினர் ஆ. சி.கணேசவேல் சமூகமளிக்காமையால் யாருடைய தலைமையில் கூட்டத்தை நடத்துவது என்று உறுப்பினர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில் கே. கௌரிகாந்தன் தலைமையில் கூட்டத்தை நடத்தலாம் என்று உறுப்பினரொருவர் தெரிவித்ததை அடுத்து அவர் தலைமையில் மாலை நேரக் கூட்டம் நடைபெற்றது. (வ-115)

## 9 ஆம் வருட நினைவுகள்

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

மலர்வு 09.06.1949 — உதிர்வு 18.01.2005

திதி: 25.01.2014



அமரர் **சின்னத்துரை மகாலிங்கம்**

(தொழில்நுட்பவியல் கல்லூரி முன்னாள் பிரதம எழுதுநர், கௌரவ செயலாளர், ஊழியர் ஐக்கிய நாணயச் சங்கம் கொக்குவில்)

அன்புகாட்டி அறிவு ஊட்டி..
இன்பமுடன் நாம் வாழ
இனிய வழிகாட்டிய எம் தெய்வமே!
ஆண்டுகள் பல கடந்தாலும்
ஆறாது உன் நினைவலைகள்...
கலையாத நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்...

குடும்பத்தினர்.
ஏழாலை மேற்கு, ஏழாலை. (15958(10.6)

## கண்ணீர் அஞ்சலி



நீதியரசர்
**சுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா**
அவர்கள்
(மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்)

முப்பத்திநான்கு ஆண்டுகளாய் மண்மேல் நீதி ஓச்சி நின்று
ஒப்பரும் நீதியரசரென்று மக்கள் உவப்புடன் போற்றிய மேலோய்!
தனக்கென தோன்றிய உண்மையை தகைமையாய் எடுத்துரைக்கும்
செப்பரும் தொண்டின் மேலோய்!
சிறப்புற ஊழியர் நலனைக்காத்து - இப்புவி
விட்டகன்று சென்று நீதித்தாய் தனை அணைந்தாய்!
பாரினில் புரிந்த சேவையைப் பார்த்து மகிழ்ந்த தெய்வங்கள் கூட
போதும் உன்பணி என்று தன்பக்கம் அழைத்து விட்டனவோ!
தப்பாது உனது நினைவை நாமும் தாங்கியே வாழ்வோம் ஐயா!

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும்
உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். (43954) (2.6)

உத்தியோகத்தர்கள், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

## பாலர், தரம் 1, 2, 3, 4 பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு ஓர் நற்செய்தி

உங்கள் பாலர்களின் மேலதிக அறிவையும் திறமைகளையும் அதிகரிக்கக்கூடிய ஆக்கங்களையும், உங்கள் குடும்ப அங்கத்தவர்களின் 7 வகைத் திறன்களுக்கான பணப்பரிசில்களுடன் கூடிய போட்டிகளையும் உள்ளடக்கிய **"ஒளி அரசி"** எனும் அரசியல், பாலியல் கலவை அற்ற ஜனவரி மாத சஞ்சிகை தற்போது புத்தகசாலைகளிலும், பத்திரிகை முகவர்களிடமும் உள்ளது. கேட்டுப்பெற்றுக் கொண்டு பயன் பெறுவீர்களாக.

தொடர்புகளுக்கு
கொழும்பு : 071 4273035
வடக்கு : 071 6182182

### வீடு விற்பனைக்கு

யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் 3 ½ பரப்புக் காணியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட (5 படுக்கை அறை, 2 குளியலறை, சமயலறை, விசாலமான வரவேற்பறை, கராஜ் என்பன) வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்
077 711 6522
(43958)(6.2.)

### விற்பனைக்கு

உழவு இயந்திரமும், பெட்டியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 400 1829
([illegible])

### அறைகள் வாடகைக்கு

ஒரு நாளைக்கு ஒருவருக்கு ரூபா 500/= இணைந்த குளியலறையுடன்
Hotel Villa City,
422, Galle Road, Col-6.
தொடர்பு: 072 255 2222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணத்தில் தமிழ்க் கட்சிகள் ஐ.தே.கவில் போட்டியிட வேண்டும்

## அழைப்பு விடுக்கிறார் யோகராஜன் எம்.பி.


யோகராஜன் எம்.பி

கொழும்பு,ஜன.25
மேல்மாகாணசபைத் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகள் தனித்துக் களமிறங்குவதால் தமிழர்களின் வாக்குகள் சிதறடிக்கப்படும்.
எனவே, மேல் மாகாணத்திலுள்ள தமிழ்க் கட்சி கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட வேண்டும் என்று கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.
கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் கூட்டணியாக களமிறங்கியமையால், அந்த மாகாணத்தில் இரண்டு தமிழ்ப் பிரதிநிதித்துவங்கள் கிடைத்தன.
ஆனால் மேல் மாகாணத்தில் தமிழ்க் கட்சிகள் தனித்துப் போட்டியிடுவதால் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்படும்.
எனவே, மேல் மாகாணத்தில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் ஐ.தேக.வுடன் இணைந்து போட்டியிட்டு தமிழ் மக்களின் வாக்குளைச் சிதறடிக்காது தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைத் தக்க வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச-சி)

# தமிழக மீனவர் கைது நடவடிக்கை தொடரும்

## பேச்சுக்கு 15 பேர் கொண்ட குழு நாளை பயணம்

கொழும்பு,ஜன.25
இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினைக்கு பேச்சு மூலம் நிரந்தர தீர்வொன்று எட்டப்படும் வரை இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறும் தமிழக மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடரும் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.
இந்தியாவுக்குச் சென்று பேச்சை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ண நேற்றுமுன்தினம் செய்தியாளர் மாநாட்டை நடத்தியுள்ளார்.

> "-"
> நான் கடற்படைக்கு எந்தவித தயவு தாட்சண்யம் இன்றி அவர்களை கைது செய்யுமாறு உத்தர விட்டிருக்கிறேன்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டுஉரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கை, இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுதல், விடுதலை செய்யப்படுதல் தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சுக்கள் முடிந்துள்ள போதும் 500 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்து வருவதை செய்மதி நிழற்படமூடாக கண்டோம்.
அத்துமீறி வரும் தமிழக மீனவர்களை பேச்சு நடைபெற் றுள்ள நிலையில் கைது செய்ய வேண்டுமா? என என்னிடம் கேட்டார்கள்.
எனினும் நான் கடற்படைக்கு எந்தவித தயவு தாட்சண்யம் இன்றி அவர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்டிருக்கிறேன்.
இதேவேளை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட கடற் றொழில் சம்மேளன பிரதிநி திகள் உட்பட 15 பேர் கொண்ட குழு தமிழக மீனவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக சென் னைக்கு புறப்பட்டுச் செல்ல வுள்ளது.
-என்றார். (ச)

# மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும் அபாயம்

## தேசிய மின்பாவனையாளர்கள் இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு,ஜன.25
மின்சாரத் துறையில் தலைதூக்கியுள்ள சிக்கல்களால் இந்த ஆண்டில் மீண்டுமொரு தடவை மின் கட்டணங்கள் உயர்வடைவதற்கான சாத்தியக் கூறு காணப்படுகின்றது என்று தேசிய மின் பாவனையாளர்கள் இயக்கம் தெரிவிந்துள்ளது.
நீர்மின் உற்பத்தியின் பற்றாக்குறையால் மின்சார சபைக்கு மின்கட்டணங்களை உயர்த்த வேண்டி ஏற்படும் என்று தேசிய மின் பாவனையாளர்கள் இயக்கத்தின் ஆலோசகர் பந்துலசந்திரசேகர தெரிவித்தார்.
எனினும் ஒரு போதும் மின் கட்டணங்களை உயர்த்துவதற்கு திட்டமிடவில்லை என்று மின்சார சபை தெரிவித் துள்ளது.

> "-"
> ஒரு போதும் மின் கட்டணங்களை உயர்த்துவ தற்கு திட்டமிடவில்லை என்று மின்சார சபை தெரிவித் துள்ளது.

மேலும், தேசிய மின்சாரத் தொகுதிக்கு விநியோகிக்கப்படும்மின்சாரம் குறைவடையும் போது மின்சாரத்தை விலைக்கு வாங்குவதென்பது சாதாரணமானதொரு செயலே என்று மின்சார சபையின் பேச்சாளரொருவர் கூறினார். (ச-22)


STUDY IN MALAYSIA
HIGHER STUDIES University & College
Sports Management
Business Management Commerce
Hospitality,Travel & Tourism Management
Banking and finance
Gem/Jewlry/Arts
Engineering
Building constrution
Computing
Clothing/Manufacturing Technology
Cricket coaching
HND,BBA,B.com,BBM,BA,MA,BEng,LLB,MBBS, MA,MSc,MBA,PhD
MEMBER OF UCAS
MINIMUM-O/L
*NO NEED IELTS
*NO NEED SPONSOR
*COURSE FEES AFTER VISA
INTERNATIONAL CITY COLLEGE
No: 07 ,W.A.SILVA MAWATHA, WELLAWATTE,COLOMBO-06.
TEL: 0114 594 104 Hot:077 1250789, Fax : 011 2582722
E-mail: citycollegelanka@gmail.com - Web:icclanka.com

# பெண்களுக்கு அபராதம்

கொழும்பு.ஜன.25
அம்பாறை, எக்கல்ஓயா பிரதேசத்தில் டெங்கு நுளம்பு உருவாகக் கூடிய வகையில் வீட்டுச் சூழலை வைத்திருந்த இரு பெண்களுக்கு அபராதமாக 3 ஆயிரம் ரூபாவைச் செலுத்துமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி செல்வி எம்.எஸ். பிரிங்கி நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டார்.
தமண எக்கல் ஓயா பிரதேச சிவில் பாதுகாப்பு குழுவினர் பொலிஸாருக்கு தெரிவித்த முறைப்பாட்டையடுத்து குறித்த வீடுகளில் குப்பைகளை துப்பரவு செய்யாமல் அசுத்தமாக டெங்கு நுளம்பு உருவாகக் கூடிய விதத்தில் வைத்திருந்த வீட்டு உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# தென்பகுதி மாணவர்களுக்கு பார்வை குறைபாடு அதிகம்

கொழும்பு.ஜன.25
கொழும்பு, கண்டி உள்ளிட்ட தென்பகுதிப் பிரதேசங்களில் வாழும் மாணவர்களை விட வும் வடமாகாண மாணவர்கள் மத்தியில் கண்பார்வை தொடர் பான குறை பாடுகள்மிகவும்குறைவு என்றுகண்பார்வை விஞ்ஞானம் தொடர்பான கல்லூரியின் கண் பரிசோ தனை நிபுணர் நரேஷ் பிரதான் தெரிவித்தார்.
வடபகுதி மாணவர்கள் மத்தியில் கணனி மற்றும் கையடக்கத் தொலைபேசிப் பாவனை குறைவும், அவர்கள் மத்தியில் காணப்படும் மரக்கறி மற்றும் கீரை வகைகளை அதிக மாக உட்கொள்ளும் பழக்கமும் இதற்குப் பெரிதும் உதவியுள்ளன என்று அவர் கூறினார்.
கண்பார்வை தொடர்பான மாநாடு சனிக் கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத் தில் ஆரம்பமாக வுள்ளது. இந்த மாநாடு தொடர்பாக ஊடகங்களுக்குத் தெளிவு படுத்துவதற்கான செய்தியாளர் மாநாடு கொழும்பில் நடைபெற்றது.
அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கொழும்பு, கண்டி உள்ளிட்ட தென்பகுதி பிரதேசங்களில் வாழுகின்ற மாணவர்களில் பெரும்பகுதியினர் கணினி, கையடக்கத் தொலைபேசி மற்றும் தொலைக்காட்சிகளில் பெரும் பகுதி நேரகாலத்தைத் தினமும் செலவிடுகின்றனர். இதன் காரணத்தினால் தூரப் பார்வைக்கான வாய்ப்பு தின மும் அவர்களுக்கு மிக வும் குறைவாக உள்ளது.
இவ்வாறான பிரச்சினைகள் வடபகுதி மாணவர்கள் மத்தி யில் மிகவும் குறைவாக உள் ளன. நாம் கிளிநொச்சி மாவட் டத்தில் 46 ஆயிரம் மாணவர் களதும், முல்லைத்தீவு மாவட் டத்தில் 67 ஆயிரம் மாணவர்களதும், மன்னார் மாவட்டத் தில் 40 ஆயிரம் மாணவர்களதும் பார்வை தொடர்பாகப் பரீட் சித்துள்ளோம். இவர்களில் கண்பார்வை தொடர் பான பிரச்சினைக்கு முகம் கொடுப்பவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர் - என்றார். (ச)

## கண்ணீர் அஞ்சலி



நீதியரசர்
எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா
(தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்றம்)

அரச சட்டவாதியாய், மேல் நீதிமன்ற நீதிபதியாய் அதன் தலைவராய் இலங்கை நீதித்துறையில் பல பதவிகளை வகித்து திடீரென மரணமெய்திய செய்தி கேட்டு கலங்கி நிற்பதோடு, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீதிபதிகள்.

வீடு வாடகைக்கு
நாவலர் வீதியில் (நல்லூர், கச்சேரிக்கு அண்மை யில்) 4 அறைகள் (3 இணைந்த குளியலறை) மாபிள் பதித்த, பெரிய அளவிலான வாகனத்தரிப்பிடம், வேலையாளுக்கான தனியான அறை, மலசலகூடம் போன்ற நவீன வசதியுடைய வீடு வாடகைக்குண்டு.
அலுவலகங்கள், நிறுவனங்களுக்கு முன்னுரிமை.
தொடர்பு: 077 935 2968,077 788 0911

விற்பனையாளர் தேவை
யாழ். நகரில் இயங்கும் புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் [illegible] தேவை.
தொடர்பு: 077 5556904

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியக்குருக்கள் தர்ப்பரானந்தேஸ்வரக் குருக்கள் (கம்பர்)



துன்னாலையைப் பிறப்பிடமாகவும், நல்லூரை (கோயில்வீதி) வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியக்குருக்கள் தர்ப்பரானந்தேஸ்வரக் குருக்கள் நேற்று (24.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியக்குருக்கள் - வாலாம்பிகை அம்மா தம்பதியரின் அன்புமகனும் மீனாட்சிஅம்மாவின் கணவரும், காலஞ்சென்ற சபாரெத்தினக்குருக்களின் சகோதரனும் புவனேஸ்வரி அம்மாவின் அன்பு மைத்துனரும் வதனா, சாதனா, காஞ்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிசங்கர், வைகுந்தவாசக்குருக்கள், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் கோயில் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

380, கோயில் வீதி, நல்லூர்.
தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரணைமடு

வியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட கமக்காரர் சம்மேளனச் செயலாளர் முத்து சிவமோகன், யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் வழங்குவதன் அடிப்படையில் இரணைமடுக் குளத்தை புனரமைக்க வேண்டாம் என்று கூட்டத்தில் கோரினோம் என குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுத் தண்ணீரை கொண்டு செல்வதை ஏற்கமுடியாது. இதற்கென ஏற்கனவே வழங்கப்பட்ட அறிக்கைகள் விவசாயிகளைப் புறம்தள்ளி தயாரிக்கப்பட்டுள்ளன. எமது குளத்தை எமது தேவைகளுக்காக மட்டுமே அபிவிருத்தி செய்ய வேண்டும். அதன் பின்னர் எமது பிரதேசத்தை அவதானித்து யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் வழங்குவது பற்றி வேறு ஒரு சந்தர்ப்பத்தில் முடிவெடுக்கலாம் என்று கூட்டத்தில் தெரிவித்தோம் - என்றார்.

இப்போது இந்தத் திட்டத்தை நிறுத்தும்படி கூறியுள்ளோம். ஆசிய அபிவிருத்தி வங்கி எமது நலனைக் கருத்தில் கொண்டு அறிக்கையைத் திருத்தம் செய்யுமானால் அது பற்றி மீண்டும் ஆராயமுடியும் என்றும் திட்டவட்டமாகக் கூறியதாக சிவமோகன் மேலும் தெரிவித்தார்.

இது பற்றி கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கருத்து வெளியிடுகையில், இந்தத் திட்டம் குறித்து கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுடன் கலந்துரையாடினோம். அவர்கள் இது குறித்து பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள்.

விவசாயிகளை பொறுத்த மட்டில் இந்தத் திட்டத்துக்கு முன்னர் அவர்கள் சம்மதம் தெரிவித்த போதும் தற்போது அந்த நிலைப்பாட்டில் இருந்து மாறியுள்ளார்கள். யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீர் கொண்டு செல்வதானால் இந்தத் திட்டத்தை அனுமதிக்க முடியாது என்று அவர்கள் கூறிவிட்டனர்.

அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கிக்கொண்டு தான் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே எனது கருத்து என்றார்.

இந்தக் கூட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டப் பணிப்பாளர் குரூஸ், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பணிப்பாளர் பாரதிதாசன் மற்றும் அரச அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-18)

### 151 தமிழக

தலுக்கு அமைய ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று விடுவித்தது.

நேற்று விடுவிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரையும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திடம், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் பாரப்படுத்தியுள்ளனர்.

திருகோணமலையில் கடந்த 17 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்ட 111 மீனவர்களும், அவர்களின் 15 படகுகளுடன் இன்று இந்தியக் கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் 10 ஆம் திகதி முல்லைத்தீவு அளம்பில் கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் 111 இந்திய மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர். அதன் பின்னர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த ஜனவரி 17 ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றில் 111 இந்திய மீனவர்களை முற்படுத்தியபோது, அவர்களை விடுதலை செய்யுமாறு நீதிவான் ரீ.சரவணராஜா உத்தரவு பிறப்பித்திருந்தார். ஆனாலும் மீனவர்கள், தமது படகுகளையும் விடுவித்தால்தான் தாம் திரும்பிச் செல்வோம் எனத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் மீனவர்களின் படகுகளை விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. 111 மீனவர்களும், அவர்களின் படகுகளுடன் இன்று இலங்கைக் கடற்படையால், இந்தியக் கடலோரக் காவல் படையினரிடம் கையளிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை,கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி 6 படகுகளுடன் 22 மீனவர்களும், மறு நாள் 30 ஆம் திகதி 3 படகுகளுடன் 18 மீனவர்களும் நெடுந்தீவுக் கடற்பரப்பில் எல்லைதாண்டி வந்து மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறி இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள், ஊர் காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் 40 மீனவர்கள் மீதான வழக்கும் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய குறித்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டதுடன் அவர்களின் உடைமைகளும் திரும்பக் கையளிக்கப்பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட 40 மீனவர்களும் நேற்று நண்பகல், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளனர். (த-5)

### இறுதிப் போரின்

பொங்கல் விழா

வடக்கு மாகாண சபையில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொங்கல் விழா மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பொங்கல் விழா நாளை மறுதினம் அமர்வு இடம்பெறுவதற்கு முன்னதாக நடைபெறவுள்ளது. காலை 8.30 மணிக்கு வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்தில் இது இடம் பெறவுள்ளது.

சமர்ப்பிக்கப்படாத நியதிச் சட்டங்கள்

வடக்கு மாகாண சபை பொறுப்பேற்று நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும், இன்னும் அமர்வு நடத்தப்படுவதற்குரிய அல்லது வேறு எந்தவொரு நியதிச் சட்டங்களும் சபை அமர்வில் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.

கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற அமர்வின்போது, 27ஆம் திகதி (நாளை மறுதினம்) இடம்பெறும் அமர்வில் 3 நியதிச் சட்டங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்திருந்தார். ஆனாலும் நாளை மறுதினம் இடம்பெறவுள்ள அமர்வில் எந்தவொரு நியதிச் சட்டங்களும் சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலை வரை வடக்கு மகாணப் பேரவைச் செயலகத்துக்கு, சபை உறுப்பினர்களுக்கான நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டு அனுப்புவதற்கு எந்தவொரு நியதிச் சட்டமும் சமர்ப்பிக்கப்படவில்லை.

பிரேரணைகள்

இந்த அமர்வில் ஆளுங் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களால் 16 பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. பிரேரணைகளும் அவற்றைச் சமர்ப்பிக்கும் உறுப்பினர்களும்:-

★ து.ரவிகரன்-மக்கள் தமது உறவுகளை நினைவு கூர முள்ளிவாய்க்காலில் நினைவுச் சின்னம் அமைத்தல், புதுக்குடியிருப்புப் பிரதேச வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்துதல்.

★அன்ரனி ஜெகநாதன்- முல்லைத்தீவு மாவட்டத்தில் காணியற்ற மக்களுக்காக காணிக் கச்சேரி நடத்துதல்

★ க.சிவாஜிலிங்கம்-தமிழ்த் தேசத்தில் நடந்ததும், நடந்து கொண்டிருப்பதும் இலங்கை நாட்டினால் மேற்கொள்ளப்படுவதும் இன அழிப்புத்தான் என்பதைச் சர்வதேசத்துக்குச் சுட்டிக்காட்டுகின்றோம். இலங்கை அரசின் உள்நாட்டுப் பொறி முறையில் நம்பிக்கையில்லை. அதனால் உள்நாட்டுப் பொறி முறையினூடான விசாரணையை, தீர்வை முற்றாக நிராகரிக்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள், இன அழிப்பு ஆகியவற்றை விசாரணை செய்ய சர்வதேச விசாரணையை ஐ.நா. சபையின் துணையுடன் உருவாக்க அனைத்துலக சமூகத்தை வேண்டுகின்றோம்.

★திருமதி அனந்தி சசிதரன்-போரில் அரச அதிபர்களின் தரவுகளின் பிரகாரம் காணாமற்போன ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் தொடர்பில் நியாயமான கணக்கெடுப்பை மேற்கொண்டு, இன அழிப்புக்கான ஆதாரத்தை ஜெனிவாவுக்கு நாம் கொண்டு செல்லல். திருக்கேதீஸ்வரத்தில் தோண்டப்படும் மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை.

★க.சர்வேஸ்வரன்-போர்க்கால அவசர நிலையைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட பிராந்திய ஆணையாளர் அலுவலகங்களை மூடுதல். அவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதியைப் பயனுள்ள திட்டங்களுக்குப் பயன்படுத்துதல்.

வடக்கு, கிழக்கில் வீதிகளின் பெயர்கள், நிறுவனங்களின் பெயர்கள் எழுதப்படும்பொழுது தமிழ் மொழி முதலிலும், சிங்களம் இரண்டாவதாகவும், ஆங்கிலம் மூன்றாவதாகவும் எழுதப்படவேண்டும்.

வலி.வடக்கு மற்றும் முத்துஐயன் கட்டுக்குளத்துக்கு அண்மையில் படையினரால் முன்னெடுக்கப்படும் பண்ணைகளை வடக்கு மாகாண அரசு பொறுப்பு எடுக்க வேண்டும். கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து, பண்ணையை உருவாக்க வடக்கு அரசு முனைய வேண்டும்.

ச.சுகிர்தன்-வவுனியா பூந்தோட்டத்திலுள்ள கூட்டுறவுக் கல்லூரி,மன்னார் கூட்டுறவுச் சபை ஆகியவற்றில் உள்ள இராணுவத்தினர் வெளியேற வேண்டும்.

★அ.பசுபதிப்பிள்ளை-புழுதியாற்று ஏற்று நீர்ப்பாசனத் திட்டம், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்தை மீள ஆரம்பித்தல், பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீள ஆரம்பித்தல், மாற்றுத் திறனாளிகளின் நிலையத்தைச் சபை கையேற்றல் (த-5)

### புதைகுழி

பட்டதையடுத்து, குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகா ரிகள் குழுவொன்று நேற்று புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டுள்ள பகுதிக்கு நேரடியாகச் சென்று முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

குறித்த புதைகுழியைத் தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ள அநுராதபுரச் சட்ட வைத்திய நிபுணர், புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டுள்ள பகுதிக்குப் பொறுப்பான கிராம அலுவலர் ஆகியோரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி கள் நேற்று விசாரணை களை மேற்கொண்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரி விக்கின்றன.

மன்னார் நீதிவானின் உத்தரவுக்கு அமைவாக பெட்டிகளில் அடைக்கப்படும் மனித எலும்புக்கூடுகளை வைப்பதற்கு மன்னார் வைத்தியசாலையில் ஒரு இடத்தை அடையாளப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் மனிதப் புதை குழியிலிருந்து இதுவரை 44 மனித எழும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் இன்று புதைகுழி தோண்டும் பணி இடம்பெறவுள்ளது. (த-56)

### வடக்கு

நீதியமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் , நாட்டில் அதிகாரப் பகிர்வைச் சில இனவாத - தீவிரவாதச் சக்திகளும், கட்சிகளும் பலமாக எதிர்த்து வருகின்ற போதிலும், அதனை வரவேற்கும் மிதவாத மற்றும் நடுநிலை பேணும் அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் உள்ளதென்பதை ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுளார்.

1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஜூலைக்கலவரத்தைத்தொடர்ந்து இந்தியாவின் ஏற்பாட்டில் அதிகாரப் பகிர்வுக்கு வழிகோலிய அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாகவும்,போர்க்கால சூழ்நிலையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் அதனை வடக்கு-கிழக்கில் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்நோக்கியதாகவும் அமைச்சர் கூறினார்.

ஜனநாயக ரீதியான தேர்தல் ஒன்றின் ஊடாக முதன் முதலாகத் தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபை தனது பொறுப்புக்களை சிறப்பாக நிறைவேற்றுமென அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். அதன் முதலமைச்சர் பதவியை வகிக்கும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் மிகவும் திறமையான வர் எனத் தாம் அறிந்து வைத்திருப்பதாக நீதிபதி எனர்ஸ்ட் பெட்ரிக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் நீதியமைச்சின் செயலாளர் திருமதி. கமலினி டி சில்வா, மேலதிக செயலாளர் குமார் ஏக்கரத்ன, வெளிவிகார அமைச்சின் அதிகாரிகள், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ரஹ்மத் மன்சூர் ஆகியோரும் பங்குபற்றினர். (த-10)

### நுளம்புவலைக்

டப்பட்டிருந்த நுளம்பு வலையின் கயிற்றால் கழுத்தைச் சுற்றி விளையாடியுள்ளார். அப்போது கயிறு திடீரெனச் சிறுமியின் கழுத்தை இறுக்கியதால் அவர் மயக்கமடைந்தார். இதனை அடுத்துப் பெற்றோர் சிறுமியை மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். ஆயினும் அவர் இடைவழியில் உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணையை மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். இதனை அடுத்து குறித்த சிறுமியின் மரணம் தொடர்பாக பூரண விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தி யசாலையில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். சட்ட வைத்திய அதிகாரி எஸ். சிவரூபன் பிரேத பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் நேற்று மாலை சடலம் உறவினர்களிடம் ஒப்படைக் கப்பட்டது. (த-400-51)

### ஜெனிவாச்

வித்துள்ளது.

அமைச்சர்கள் பலரும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். இன்னும் பல அமைச்சர்கள் அடுத்து வரும் சில நாள்களில் பயணங்கள் மேற்கொள்வார்கள். போருக்குப் பிந்திய இலங்கையின் நிலை குறித்த உண்மையான கள நிலைவரத்தை வெளிநாட்டு அரசுகளுக்கு விளக்குவதே இந்தப் பயணங்களின் நோக்கம்' என்று மூத்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டும் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராகப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது. இந்த வருடம் பிரேரணை மிகக் கடுமையானதாக இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளமையினால், அதனை எதிர்கொள்வதற்கு இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்துள்ளதுடன், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இந்த மாதக் கடைசியில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதன் அடுத்த கட்டமாக அமைச்சர்கள், அடுத்து வரும் சில நாள்களில் பயணங்கள் மேற்கொள்ளவுள்ளார்கள் என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் கூறினார். (த-5)

### கடை

மேலதிக விசாரணைக்காகச் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். பொகவந்தலாவையைச் சேர்ந்த குமாரசுவாமி வேலு (வயது - 52) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆவரங்காலில் உள்ள உணவு நிலையம் ஒன்றில் பணியாற்றும் இவர் காய்ச்சல் காரணமாகச் சிகிச்சை பெற்றிருந்தார் என்று ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-11-17)

### இலங்கை

யைத் தீர்க்கும் முகமாக இரு நாட்டு அரசுகளுக்கு மிடையில் கடந்த 15 ஆம் திகதி பேச்சு இடம்பெற்றது. இதன் பின்னர் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையிலான பேச்சு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒத்திவைப்பு

கடந்த 20 ஆம் திகதி இந்தப் பேச்சு சென்னையில் இடம் பெறும் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது. அது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை என்று இலங்கைத் தரப்பு மீனவர் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

இதன் பின்னர் குறித்த பேச்சு ஒத்தி வைக்கப்பட்டு இந்த மாதம் 27 ஆம் திகதி இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் எதிர்வரும் 27 ஆம் திகதி திட்டமிட்டபடி பேச்சு இடம்பெறுமா என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்ட பேச்சுக்கு இன்னும் 2 தினங்களே உள்ள நிலையில், பேச்சுக்கான திகதியை இலங்கை அரசு இன்னும் எழுத்து மூலம் உறுதிப்படுத்தவில்லை.

பேச்சு கட்டாயம் இடம்பெறவேண்டும்

இது தொடர்பாக இந்திய அதிகாரிகள் இலங்கை அரசைத் தொடர்பு கொண்டு பேசிய போதும் உறுதியான பதில் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் டில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன், இரு தரப்பு மீனவர்கள் பங்கேற்கும் பேச்சு நடைபெற வேண்டும் என்ற விருப்பத்துடன் மத்திய அரசும், தமிழக அரசும் நடவடிக்கை எடுத்து வருகின்றன. ஆனால் பேச்சுத் திகதியை இலங்கை அரசு, இந்திய வெளியுறவுத்துறைக்கு தெரிவிக்கவில்லை என்று கூறினார்.

எனவே திட்டமிட்டபடி இந்திய - இலங்கை மீனவர்கள் இடையிலான பேச்சு 27 ஆம் திகதி நடைபெறுதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி பேச்சுக்குச் செல்லும் 15 பேர் கொண்ட இலங்கை மீனவர் குழுவில் மீனவர் தலைவர்கள் 10 பேர் உள்ளடங்குகின்றனர். இவர்கள் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நீர்கொழும்பு, புத்தளம் மற்றும் திருகோணமலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.25
வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக 'பி' பிரிவு அணியை எதிர்த்து அல். இக்பால் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.25
முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-
காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுவாகல் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனந்தம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்ஒளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.25
யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அளவெட்டி கிழக்கு கும்பளை பாரதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வள்ளுவர் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது. (த-23)



கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் ஓர் அங்கமாக நேற்றுக் காலை வீதியோட்டப்போட்டி நடைபெற்றது. இந்த வீதியோட்டப் போட்டியை கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயத்தின் அதிபர் க.குகானந்தராஜா ஆரம்பித்து வைத்தார். (த)

# வேகநடை, ஊர் சுற்றும் போட்டிகளில் வவுனியா அணிகள் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.25
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான வேகநடை மற்றும் ஊர் சுற்றி ஓடும் போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளிலும் வவுனியா சம்பியனானது.
ஆண்களுக்கான வேகநடை போட்டியில் வவுனியா மாவட்ட அணி 40 புள்ளிகளைப் பெற்று சம்பியனானது.
பெண்களுக்கான வேகநடை போட்டியில் வவுனியா மாவட்ட அணி 21 புள்ளிகளைப் பெற்று சம்பியனானது.
ஊர்சுற்றி ஓடும் போட்டியில் வவுனியா மாவட்ட ஆண்கள் அணி 23 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனானது.
யாழ்.மாவட்ட ஆண்கள் அணி 17 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தை தனதாக்கியது.
பெண்களுக்கான ஊர்சுற்றி ஓடும் போட்டியில் வவுனியா மாவட்ட அணி 13 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனானது. (த-23)

"-"

பெண்களுக்கான வேகநடை போட்டியில் வவுனியா மாவட்ட அணி 21 புள்ளிகளைப் பெற்று சம்பியனானது.

# வவுனியா வீரர்களின் புதிய சாதனைகள்



எம்.பி.தர்மராஜ்




ஆர். சாளினி

வவுனியா, ஜன.25
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்டத்திலான ஆண்களுக்கான வேகநடை போட்டியிலும், பெண்களுக்கான ஊர் சுற்றி ஓடும் போட்டியிலும் புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.
பெண்களுக்கான ஊர் சுற்றி ஓடும் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். சாளினி 33 நிமிடம் 34.4 செக்கனில் குறித்த தூரத்தை ஓடி முடித்து வெற்றியீட்டி புதிய சாதனையை நிலைநாட்டினார்.
ஆண்களுக்கான வேகநடைப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பி. தர்மராஜ் 1 மணித்தியாலம் 51 நிமிடங்களில் குறித்த தூரத்தைக் கடந்து வெற்றியீட்டிப் புதிய சாதனை படைத்துள்ளார். (த-23)

# வேலணை பிரதேச கபடியில் வென்றது புங்குடுதீவு நசரேத்

வலி. வடக்கு, ஜன. 25
வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கபடிப் போட்டியில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகம் பிரதேச சம்பியனாகியது.
புங்குடுதீவு சன்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்ற இறுதிப் போட்டியில் புங்குடுதீவு சன்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.
இரு அணிகளும் இறுதி வரை கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் நசரேத் விளையாட்டுக்கழகம் முதல் பாதி ஆட்டத்தில் 19:8 புள்ளிகள் என்ற முன்னிலையில் வெற்றி பெற்றது.
இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் உற்சாகமாக விளையாடிய போதிலும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் சன்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 19:10 புள்ளிகள் என்ற முன்னிலையில் ஆட்டம் முடிவடைந்தது.
ஆட்ட இறுதியில் நசரேத் விளையாட்டுக் கழகம் 29:27 புள்ளிகள் என்ற அடிப்படையில் சன்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று பிரதேச சம்பியனாகியது. (த-86)

## கரப்பந்தாட்டப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஜன.25
யாழ்.பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆண்களுக்கான போட்டி இன்று சனிக்கிழமை கொழும்புத்துறை ஜெட் லைனர்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது என விளையாட்டு உத்தியோகத்தர் நித்திலநாயகம் அறிவித்துள்ளார். (த-23)




வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கம் பொங்கல் விழாவை முன்னிட்டு நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்ற புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணித் தலைவரிடம் நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட் வெற்றிக் கிண்ணத்தை வழங்குகிறார். (த-23)

## சாவகச்சேரியில் எல்லே போட்டிகள்


வலி. வடக்கு, ஜன .25
சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண்கள், பெண்களுக்கான எல்லே போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற வுள்ளன.
அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆண்கள், பெண்களுக்கான உதைபந்தாட்டம் கரப்பந்தாட்டம், கிரிக்கெட், கபடி மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளுக்கான நிரல் ஒழுங்கும் மேற்கொள்ளப்படவுள்ளது. உரிய கழகங்களின் பிரதிநிதிகளை உரிய நேரத்துக்கு மைதானத்துக்கு அனுப்பி வைக்குமாறு விளையாட்டு அலுவலர் அறிவித்துள்ளார். (த-86)

# கபடிப் போட்டி இன்று

வலி. வடக்கு, ஜன .25
தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் இடையேயான ஆண்கள், பெண்களுக்கான கபடிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இளவாலை இளம் தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.
நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.
போட்டியில் கலந்துகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்துக்கு மைதானத்துக்குச் சமுகம் அளிக்கும்படி பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் அறிவித்துள்ளார். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஷாந்த் சர்மா மீது பாய்ச்சல்




தொடர்ச்சியாக தவறுகள் செய்து கற்றுக் கொண் டிருக்க இஷாந்த சர்மா ஒன்றும் சின்னப்பையன் அல்ல என முன்னாள் இந்திய வீரர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.
நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணியில் இடம் பெற்றிருப்பவர் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா(வயது 25).
இதுவரை 53 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ள அவர், 149 இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.72 ஒருநாள் போட்டியில் 102 விக்கெட்டுகள் சாய்த்துள்ளார்.
சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மொகாலி ஒருநாள் போட்டியில் ஒரு பந்துப் பரிமாற்றத்தில் 30 ஓட்டங்கள் விட்டுத் தர. இவரது இடம் கேள்விக் குறியானது.
இருப்பினும் வழக்கம் போன்று அணியில் நீடித்தாலும், ஓட்டங் களை வாரி வழங்கி கொண்டிருக்கிறார்.
இது குறித்து இந்திய அணியின் முன்னாள் வீரர் மதன்லால் கூறுகை யில்; இஷாந்த் சர்மா தொடர்ந்து தவறுகள் செய்கிறார்.
இழந்த தகுதியை மீட்க வேண்டும் என்ற நெருக்கடியில் தான் இவர், இப்படி செய்கிறார் என்று நினைக்கவில்லை.
இஷாந்த் சர்மா இன்னும் சின்னப்பையன் இல்லை, என்னைப் பொறுத்தவரை அணிக்கு தெரிவு செய்யப்படும் பந்துவீச்சாளர், போட்டியை வென்று தருபவராக இருக்க வேண்டும்-என்று தெரிவித்துள்ளார்.
வேகப்பந்துவீச்சு பயிற்சி யாளர் டி.ஏ.சேகர் கூறுகை யில், இஷாந்த் சர்மாவின் பந்து வீச்சில் பல்வேறு தவறுகள் உள்ளன.
இரு விரல்களுக்கு நடுவில், பந்தின் தையல் வருமாறு பிடிக்க வேண்டும். இஷாந்த் அப்படி செய்வதில்லை, பந்து வீசுவதற்கு பதிலாக எறிகிறார் என்று தெரிவித்துள்ளார். (த)

# மெஸ்சி 400




மிகச்சிறந்த உதைபந்தாட்ட வீரரான லய னல் மெஸ்சி, தனது 400ஆவது போட்டி யில் பங்கேற்றார். ஸ்பெயினில் கோபா டெல்ரே உதைபந்து தொடர்ந்து நடக்கிறது.
இதன் காலிறுதி போட்டியின் முதல் சுற்றில் பார்சிலோனா, லெவன்டே அணிகள் மோதின.கடந்த 2004ஆம் ஆண்டு முதல் பார்சிலோனா கிளப் அணியில் இணைந்து விளையாடி வரும் மெஸ்சி, இதுவரை 331 கோல் கள் அடித்துள்ளார்.
இந்நிலையில் இந்த அணிக்காக 400ஆவது போட்டியில் பங்கேற்றார்.
இதன் முதல் பாதியில் லெவன்டே அணி யின் நபில் ஒரு கோல் அடித்தார். இரண் டாவது பாதியில் லெவன்டே அணியின் ஜுயன்பார்ன் தனது பக்கக் கோல் அடித்தார்.
பார்சிலோனா அணி சார்பில், கிறிஸ் டியன் டெலோ ஹட்ரிக் (60,81,86வது நிமிடங் கள்) கோல் அடித்து அசத்தினார்.
முடிவில் பார்சிலோனா அணி 41 கோல்கள் என்ற கணக்கில் வெற்றி பெற்றது.
பார்சிலோனா அணிக்காக 331 கோல் கள் அடித்திருந்த மெஸ்சி 400ஆவது போட்டி யில் ஒரு கோல் கூட அடிக்காமல் ரசிகர் களை ஏமாற்றினார். (த)

# நாடு திரும்பாத லசித் மலிங்க




ஆஸ்திரேலியாவின் பிக்பாஸ் போட்டியில் கலந்துகொண் டுள்ள இலங்கை அணியின் லசித் மலிங்க இதுவரை நாடு திரும்ப வில்லையென இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளர் மைக்கல் டி சொய்ஸா தெரிவித்துள்ளார்.
பிக்பாஸ் போட்டிகளில் மலிங்க, டில்ஷான் மற்றும் மென்டிஸ் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.
இந்நிலையில் இலங்கை அணி தொடர்ந்து போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளதால் லசித் மலிங்க மற்றும் அஜந்த மென்டிஸ் ஆகியோரை நாடு திரும்புமாறு இலங்கை கிரிக்கெட் அழைப்பு விடுத்திருந்தது.
மென்டிஸ் நாடு திரும்பியுள்ள நிலையில், மலிங்க இன் னமும் நாடு திரும்பவில்லையென இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமை யாளர் குறிப்பிட்டுள்ளார். (த)

# பங்களாதேஷ் புறப்பட்டது இலங்கை கிரிக்கெட் அணி



இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுவதற்காக இலங்கை அணியின் டெஸ்ட் குழாம் புதிய பயிற் றுவிப்பாளருடன் பங்களா தேஷுக்கு நேற்று அதிகாலை புறப்பட்டது.
எதிர்வரும் 27ஆம் திகதி முதலாவது டெஸ்ட் போட்டி பங்களாதேஷில் ஆரம்ப மாகவுள்ளது.
இலங்கை கிரிக்கெட் சபையின் தலை மைக் காரியாலயத்தில் இடம்பெற்ற மத வழிபாடுகள் மற்றும்; ஊடகவியலாளர்கள் சந்திப்பைத் தொடர்ந்து இலங்கைக் குழாம் பங்களாதே ஷுக்குப் பயணமானது.
இதற்கு முன்னர் பயிற்றுவிப்பாளராகப் பதவி வகித்த கிரஹம் போர்ட்டின் பதவிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில், புதிய பயிற்றுவிப் பாளரான போல் பட்ரேஸின் பதவிக்காலம்பெப்ர வரி மாதம் ஆரம்பமாகவுள்ளது. ஆனால், அவர் இத்தொடரில் இலங்கை அணி யுடன் இணைந்துள்ளார்.
புறப்பட்டுச் சென்ற குழாம்:
அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்தி மால், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, கௌஷால் சில்வா, திமுத் கருணாரத்ன, கித்துருவன் விதானகே, பிரசன்ன ஜெயவர் தன, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், ஷமின்ட எரங்க, நுவான் பிரதீப், அஜந்த மென்டிஸ், ரங்கன ஹேரத், டில்ருவான் பெரேரா, விஷ்வா பெர் னான்டோ. (த)

# இந்திய அணியில் வேண்டும் மாற்றம்

இந்தியகிரிக்கெட் அணியில்நிச்சயம்மாற்றங்கள் செய்ய வேண்டும் என முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான் கவாஸ்கர் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்கா வைத் தொடர்ந்து நியூ சிலாந்து அணியிடமும் இந்தியா தொடர் தோல்விகளை சந்தித்து வருவது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான் கவாஸ்கர் கூறுகையில், தற்போது இந்திய அணி 5 துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் 5 பந்துவீச் சாளர்களை கொண்டு ஆடிவருகிறது. இந்த கூட்டணி இந்திய அணிக்கு சாதகமாக இல்லை, தொடர்ந்து தோல்வியைத் தழுவியதால் முதல் இடத்தையும் கோட்டை விட்டது.எனவே அணியில் கூடுதலாக ஒரு துடுப்பாட்ட வீரரைச் சேர்த்தால் பலம் வாய்ந் ததாக இருக்கும். சகலதுறை வீரர் ஜடேஜா மட்டுமல்லாமல் பகுதி நேரப் பந்து வீச்சாளர்களாக கோஹ்லியும், சுரேஷ் ரெய்னாவும் உள்ளனர் - என்றார்.

# ஐ.சி.சி. பிரேரணையை பிற்போட கோரிக்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் நிர் வாக, வருமான அம்சங்களில் மாபெ ரும் மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள புதிய பிரேரணையைப் பிற்போட வேண் டுமென இலங்கை கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டுள்ளது.
சர்வதேச கிரிக்கெட் சபையை முழு மையாகக் கட்டுப்படுத்தும் புதிய பிரேரணையொன்றை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இங் கிலாந்து கிரிக்கெட்சபை, ஆஸ்திரே லிய கிரிக்கெட் சபை ஆகியன தயா ரித்து ஏனைய கிரிக்கெட் சபைகளுக்கு வழங்கியுள்ளன.
வருமானத்தில் அதிக பங்கு, நிர்வா கத்தில் முழுமையான ஆதிக்கம், டெஸ்ட் பிரிவுகளில் 03 கிரிக்கெட் அணிகளும் தரம் இறக்கப்பட முடி யாத தன்மை உட்பட பல அம்சங் கள் இந்தப் பிரேரணையில் உள் ளடக்கப்பட்டுள்ளன.
இவ்விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் மாலை கூடிய ஆராய்ந்த இலங்கை கிரிக்கெட் சபையின் செயற் குழு, இது தொடர்பாக சர்வதேச கிரிக் கெட் சபைக்கு உத்தியோகபூர்வமாக எழுதுவது எனத் தீர்மானித்தது.
சர்வதேச கிரிக்கெட் சபையின் தலை வருக்கு இது தொடர்பாக எழுதுவ தென இலங்கை கிரிக்கெட் சபை யின் செயற்குழு தீர்மானித்ததாகவும் அதில், இவ்விடயம் தொடர்பாக இலங்கை கிரிக் கெட் சபையின் செயற்குழுவின் ஏகமனதான பார் வையைத் தெரிவிப்பது எனவும் முடிவெடுக் கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்தது.
இது சம்பந்தமான விவாதம் இடம் பெறும் போது இலங்கை கிரிக்கெட் சபை தனது தனிப்பட்டதும் நேர்மை யானதுமான பார்வையை முன்வைக் கும் என இலங்கை கிரிக்கெட் சபை யின் செயலாளர் நிஷாந்த ரண துங்க தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு ஆப்கான் கிரிக்கெட் வீரர்கள் சாவு



ஆப்கானிஸ்தானில் உள்ளூர் கிரிக்கெட் வீரர்கள் மீது மர்ம மனிதர்கள் திடீரென தாக்குதல் நடத்தியதில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தானின் லஹ்மன் மாகாணத்தில் உள்ள அலிங்கர் மாவட்டத்தில் உள்ளூர் வீரர்கள் சிலர் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் துப்பாக்கியை எடுத்து கிரிக்கெட் வீரர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர். இதில் 5 வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர் என லஹ்மன் மாகாண செய்தி தொடர்பாளர் சர்ஹாதீ தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்றும் இது தலிபான் தீவிரவாதிகளின் வேலையாக இருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (த-400)

# இங்கிலாந்து ஆறுதல் வெற்றி



ஆஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் மோதும் 4ஆவது ஒருநாள் போட்டி பேர்த்தில் நேற்று இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 316 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சார்பாகுக் 44 ஓட்டங்களையும், இயன் பெல் 55 ஓட்டங்களையும், ஸ்ரோக் 70 ஓட்டங்களையும், பற்லர் 71 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பள்கினர் 4 இலக்குகளையும் பீற்றர்சன், கட்ல்ரர், மக்ஸவெல் மற்றும் கிறிஸற்ரின் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். தொடர்ந்து 317 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி வீரர்கள் 47.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 259 ஓட்டங்களைப்பெற்று 57 ஓட்டங்களால் தோல்வியைத்தழுவியது. அந்த அணி சார்பாக ஆரேன் பிஞ்ச் 108 ஓட்டங்களைப் பெற்ற போது அந்த அணியால் வெற்றி பெற முடியவில்லை.

மேக்ஸ்வெல் 26 ஓட்டங்களையும், கிறிஸ்டியன், வைற் ஆகியோர் தலா 23 ஓட்டங்களையும் பெற்றக் கொடுத்தனர்.

இங்கிலாந்து பந்து வீச்சில் ஸ்ரோக் 4 இலக்குகளையும், பிறின்சன் 3 இலக்குகளையும், புரோட் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக இங்கிலாந்து அணியைச் சேர்ந்த ஸ்ரோக் தெரிவு தெரிவு செய்யப்பட்டார்.

முதல் 3 ஒருநாள் போட்டியிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. (த-400)

# ரெய்னாவுக்கு டோனி அறிவுரை



இந்திய கிரிக்கெட் அணியின் அணித் தலைவர் டோனி, சக வீரரான சுரேஷ் ரெய்னாவுக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளார். நியூஸிலாந்து சென்றுள்ள டோனி தலைமையிலான இந்திய அணி, நடந்து முடிந்த 2 ஒருநாள் போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியது. இந்நிலையில் டோனி, சுரேஷ் ரெய்னாவுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார். அவர் கூறுகையில்; ஆக்ரோஷமான ஆட்டக்காரர்களில் சுரேஷ்ரெய்னாவும் ஒருவர். ஆனால் எந்த இடத்தில் அடித்து விளையாட வேண்டும் என்பதில் மனக்கட்டுப்பாடு இருக்க வேண்டியது அவசியமானதாகும். எல்லா பந்துகளையும் அடித்து ஆடி விடமுடியாது. எந்த பந்தை அடித்து விளையாடுவது என்பதை முடிவு செய்வதில் சுரேஷ் ரெய்னா இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (த- 400)

**கடை, வீடு வாடகைக்குண்டு**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தைக்கு அருகில் உண்டு.
தொடர்பு: 077 7919160

**மலிவான விலையில் தரமான சேவை**
வீட்டுத் திட்டங்களைப் பெற்றவர்களுக்கு மரத் தளபாடங்கள் மற்றும் கூரை மரங்களை மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ள அரியவாய்ப்பு!
No.1 மவுக்கனி, கிறாண்டிஸ் மரங்களால் செய்யப்பட்ட தளபாடங்கள், கூரை மரங்களை மலிவான விலையில் போக்குவரத்துக் கட்டணம் இன்றி உங்கள் வீடுகளுக்கே கொண்டு வந்து தருகிறோம்.
எம்மால் கூரை வேலைகள் மற்றும் கதவு, நிலைகளும் செய்து கொடுக்கப்படும்.
இந்தியன் வீட்டுத்திட்டங்களைப் பெற்றவர்களுக்கு விஷேட சலுகை!
மொத்தமாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
உடனே அழையுங்கள்:
சத்தியமூர்த்தி-077 780 6114
ரோகண-077 691 5371
(43897) (7.6.3)

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

# மரண அறிவித்தல்

## திருமதி நல்லம்மா கந்தையா



களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா கந்தையா நேற்று (24.01.2014) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வூதியர் காசிநாதர் கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-தெய்வானை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், சபாரத்தினம், காலஞ்சென்ற பேரம்பலம் (காணிப் பதிவுத் திணைக்களம்) மற்றும் ஜெகதீஸ்வரி, நவரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயும், விஜயலச்சுமி, சதாசிவம், புனித லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், விஜிதா-திருநீலகண்டன், கோசலா-ரஜீவன், ஆனைமுகன் (முகாமைத்துவ உதவியாளர் NAITA, வவுனியா), காலஞ்சென்ற திவாகரன் மற்றும் கலைச்செல்வி-ஜெயபாலன், ரவீந்திரன் (சட்ட வைத்திய அதிகாரி-தளவைத்தியசாலை, புத்தளம்)-ஸ்ரீசகி, மதன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்), ஆரணி (வைத்தியர்-போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), மலர்விழி (ஆசிரியை-யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)-ஜெகரூபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), பிரதீபன் (நில அளவையாளர்), ஜீவரத்தினம் (ஆஸ்திரேலியா), கிருசாந்தினி (கிழக்குப் பல்கலைக்கழகம்), கிருசாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரதுஜா, நிரோஷ், கிசான், கிசானிகா, டினோஜா, டினுஷன், துஸ்யந், டிலக்ஷன், துஷானி, சிவானி, சிவந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, வள்ளியம்மை மற்றும் ஈஸ்வரி, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் களபூமி தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டை லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
077 632 1207

தகவல்:
பிள்ளைகள்.

(43930) (10.6.3)

**மேலும் பல புதிய வருகைகள்**
இத்தாலி சட்ட ரீதியாகப் படிக்க சட்ட ஆலோசனை
பிரான்ஸ் சட்ட சம்பந்தமான நுழைவுக்கு சட்ட அறிவுரை
சைப்பிரசில் படிக்க மாதம் ஒரு லட்சம் வரை உழைக்க IELTS தேவையில்லை
நியூஸிலாந்தில் படிக்கவே IELTS தேவையில்லை
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com



**IMMEDIATE VACANCIES**
Following positions are available throughout our branch network for immediate fulfilment. Qualified candidates should apply with a covering letter clearly stating the Post and Branch that you apply for. Successful candidates will receive an industry-leading take home salary.

**LECTURER (IT)**
Should be a graduate & we would even consider fresh graduates without experience, provided that you have the skills we are looking
Salary will be 25,000 to 40,000 + Lecture Fees

**ASST. LECTURERS (IT)**
Should be part qualified in their field, with at least 2 years of undergraduate studies completed. Should have exceptional presentation skills. Technical and proffessional Certifications would be an added advantage.
Salary will be 15,000 to 25,000

Mail your CV within 7 days to ESOFT, No.137, K.K.S Road, Jaffna.
or Email to jaffna@esoft.lk

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS -JAFFNA
Srilanka's Largest IT Education Network
TEL : 021 222 4142 HOTLINE : 077 309 9 308

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.